REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஓகஸ்ட் 20 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN තිනකරන්

வரு. 88 இல. 197 | August 20, Thursday, 2020 | 24 பக்கங்கள் | 30/-




# புதிய பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இன்று



## சபாநாயகர், பிரதி சபாநாயகர் தெரிவும் இடம்பெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுத் தேர்தலுக்குப் பின்னரான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் இன்று ஆரம்பமாகிறது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வை கௌரவத்துடனும் அதேவேளை எளிமையாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் கொவிட் 19 தாக்கம் காரணமாக பொதுத் தேர்தல் பிற்போடப்பட்டதால் பாராளுமன்றம் கூட்டப்படுவது தடைப்பட்டது. இந்நிலையில் சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் இன்று கூடுகிறது.

அதற்கிணங்க இன்றைய தினம் காலை 9.30 மணிக்கு 9 ஆவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு இடம்பெறுவதுடன் முதற்கட்டமாக சபாநாயகர்,பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர். அதனையடுத்து பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களதும் சத்தியப்பிரமாண பிரகடனம் இடம்பெறும்.



அந்த நிகழ்வை அடுத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் புதிய சபாநாயகர், பிரதி சபாநாயகர்,குழுக்களின் பிரதித் தலைவர், சபை முதல்வர் உள்ளிட்டவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பர். அதனையடுத்து பிற்பகல் 3,00மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும் என பாராளுமன்ற செயலாளர்

04

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இரத்து

## 20 ஆவது திருத்த சட்டமூலத்தை தயாரிக்க அமைச்சரவை அனுமதி



**ஷம்ஸ் பாஹிம்**

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்து செய்து, 20 ஆவது திருத்தத்திற்கான சட்டமூலத்தை தயாரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

முதலாவது அமைச்சரவை கூட்டம் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

04

## இன்னும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க அமைச்சரவை முடிவு

ஆர்ப்பாட்டம் நடத்தும் பட்டதாரிகளை சந்தித்து ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு

10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் சகல பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முதலாவது அமைச்சரவை கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி அமைச்சரவை பத்திரமொன்றை

04



புதிய பாராளுமன்றத்தின் 9 ஆவது அமர்வை முன்னிட்டு நேற்று பரீட்சார்த்த நிகழ்வு இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

## பாராளுமன்றுக்கு 50 வயதுக்கு குறைந்த 87 பேர் தெரிவு

பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களில் பெரும்பாலவர்கள் 50 வயதுக்கு குறைந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

இம்முறை தெரிவு செய்யப்பட்டவர்களில் 50 வயதுக்கு குறைந்தவர்கள்

04

பிரதமர் மஹிந்தவின் ஆக்கபூர்வமான நடவடிக்கை;

## சகலரும் ஒருங்கிணைந்து செயற்படுவோம் எமது ஆதரவு தொடரும் – சம்பந்தன்



பிரதமர் மஹிந்த ராஜபக்ச எடுக்கின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஒருமித்து இந்தக் கருமத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கியுள்ள வாக்குறுதியையும்,

04

## 13 ஆவது திருத்த சட்டத்திற்கு எவ்வகையிலும் சேதாரம் இல்லை

நம்பிக்கையுடன் அடித்துக் கூறுகிறார் டக்ளஸ்



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தேவையற்ற குழப்பங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாக கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதாக விசனம் வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய அரசாங்கத்திற்கு இதுவரை அவ்வாறான நோக்கங்கள் எதுவும் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களை யாரும் மேற்கொள்ள

04

## சுமத்ரா தீவில் நேற்று 6.9 ரிச்டர் நிலநடுக்கம்

இலங்கைக்கு பாதிப்பில்லை



இந்தோனேசியாவின் தென் சுமத்ராவை அண்மித்த பகுதியில் 6.9ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. நேற்று அதிகாலை இலங்கை நேரப்படி 3.59 மணியளவில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம், அகலாங்கு

04



தினகரன் 20-08-2020 17

மக்கள் இறைமையின் உயர்பீடம்

9வது பாராளுமன்ற அங்குரார்ப்பண அமர்வுக்காக...

புதிய பாராளுமன்ற அங்குரார்ப்பணம்;
இன்றைய சம்பிரதாய நிகழ்வுகள்

## கடும் பாதுகாப்புடன் கொழும்பு வந்தடைந்த பிள்ளையான்

இன்று பாராளுமன்றம் செல்ல அனுமதி



நீதிமன்ற அனுமதியுடன் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து நேற்று சிவனேசதுரை சந்திரகாந்தன் எம்.பி (பிள்ளையான்) சிறைச்சாலை அதிகாரிகளால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு

04

## அமைச்சரவை பேச்சாளராக கெஹெலிய இணை பேச்சாளர்கள் கம்மம்பில, ரமேஷ்



அமைச்சரவை பேச்சாளராக கெஹெலிய ரம்புக்வெல்ல மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இது தவிர இணை அமைச்சரவை பேச்சாளர்களாக அமைச்சர்களான உதய கம்மம்பில, டொக்டர் ரமேஷ் பத்திரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதலாவது அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று

04

## கிளிநொச்சி விபத்தில் இரு இளைஞர்கள் பலி

நேற்று மாலை சம்பவம்

**தமிழ்ச் செல்வன்**



கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

04



சிங்கத்தின் குகைக்குள் புலிக் குட்டிகளாக சைக்கிள்ள போகப் போகினமாம் எண்டு வாழ்த்துக்கள் தூள் பறக்குது பாத்தீங்களா....

ஓம், ஓம் இப்படித்தான் முதல்ல டெய்லர் போட்டு படம் காட்டுவினம்.....

புலிகளாக போய் பூனைக் குட்டிகளாக திரும்பி வந்த கனபேரை நாங்க பார்த்திருக்கிறோம்....

## அவசியம் ஏற்படின் பகலிலும் மின்வெட்டு; மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தவும்

பொதுமக்களிடம் மின்சார சபை கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அவசியம் ஏற்பட்டால் பகல் வேளையிலும் மின்சார துண்டிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது நாடளாவிய ரீதியில் இரவு 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் நான்கு மணித்தியாலங்கள் நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒரு வலயத்திற்கு ஒரு மணித்தியாலம் என்ற

04

## சம்பிக்கவிற்கு 28ம் திகதி ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை



கவனயீனத்துடன் வாகனம் செலுத்தி விபத்தொன்றை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவை இம்மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க நேற்று உத்தரவிட்டார்.கவனயீனத்துடன்

04

ஈஸ்டர் தாக்குதல் 18 விசாரணை கோவைகள்;

## முழுமையாக இல்லை எனக் கூறி திருப்பி அனுப்பினார் சட்ட மாஅதிபர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் தொடர்புடைய, மேலும் 18 முழுமைப் படுத்தப்படாத விசாரணை கோப்புகள் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் மீண்டும் பதில் பொலிஸ் மாஅதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரணைகளை நிறைவு செய்யுமாறு பதில் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி சட்டத்தரணி நிஷார ஜயவர்தன தெரிவித்துள்ளார். இதுவரை முழுமைப்படுத்தப்படாத

04

### கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்கள்;

# தனியார்துறையினரின் பங்களிப்புடன் 10 பால் பண்ணைகள் அமைக்க திட்டம்

தனியார்துறையின் பங்களிப்புடன் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் 10 பாரியளவிலான பால்பண்ணைகளை ஆரம்பிக்கவும் சிறிய அளவிலான பால் பண்ணைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தோட்ட நிறுவனங்களின் பயனற்ற நிலங்களை பால் பண்ணைத் துறைக்கு பயன்படுத்த உதவுதல் உட்பட விலங்கு தீவனத்திற்காக மக்காச் சோளச் செய்கைக்கென அரச நிலங்களை வருடாந்த குத்தகை அடிப்படையில் பால்பண்ணை உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் பால் உற்பத்தியை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் பால் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு மேம்படுத்துவதாகவும், அதை நுகர்வுக்கு அப்பால் ஏற்றுமதி மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு அரசாங்கத்தின் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.



பால்உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறைசார்ந்த அரச நிறுவன தலைவர்களுடன் அலரிமாளிகையில் (17) நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரியளவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால் தேவை 1,200 மில்லியன் லீட்டராகும். தற்போது உற்பத்திசெய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீட்டராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780மில்லியன் லீட்டர் என்றபோதிலும், திரவப் பால் பயன்பாட்டிற்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400மில்லியன் லீட்டர் பாலைக் கொண்டு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்யமுடியும். 1 கிலோ பால்மாவை உற்பத்தி செய்வதற்கு சுமார் 8லீட்டர் திரவப் பால்தேவைப்படுகிறது.

அதன்படி, 1கிலோ பால் மாவிலிருந்து தயாரிக்கக் கூடிய பால் கோப்பைகளின் அளவைவிட 8லீட்டர் திரவப் பாலிலிருந்து தயாரிக்கக் கூடிய பால் கோப்பைகளின் அளவு மிக அதிகம்.

பால்விலை, பால் பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச் சோளம் சாகுபடி செய்தல் மற்றும் அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்தல், மக்காச் சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதி செய்து உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மக்காச் சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் டொன்னிலிருந்து 07 மெட்ரிக்டொன் வரை உயர்த்தவேண்டும்.

அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால் பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத் தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா போன்ற நகர்ப்புறங்களில் தூய்மையான பால் நுகர்வை அதிகரிக்கவும், அதற்கேற்ப பால்சார்ந்த உற்பத்தி துறைகளை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந் நிகழ்வில் கமத்தொழில்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர மற்றும் கனகஹேரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

## ஆட்டோ, மோ.சைக்கிள் விபத்து; சாரதி உயிரிழப்பு

**களுத்துறை சுழற்சி நிருபர்**

புலத்சிங்கள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோவின்ன, கொட்டா வீதிச் சந்தியில் நேற்று முன்தினம் (18) பிற்பகல் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கோவின்னை, தியபரெல்ல பகுதியைச் சேர்ந்த விக்கிரம ஆராச்சிகே தயாரத்ன என்ற 52 வயதான முச்சக்கர வண்டி சாரதி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதன்போது கோவின்னைப் பகுதியில் இருந்து ஹொரணை நோக்கி அதிக வேகத்தில் பயணித்த முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்து எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுனரும் முச்சக்கர வண்டி சாரதியும் பிரதேச வாசிகளின் உதவியுடன் ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



மொரட்டுவை கட்டுபெத்தையில் அமைந்துள்ள இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்துக்கு மேற்பார்வை விஜயம் மேற்கொண்ட திறன்கள் அபிவிருத்தி,தொழிற் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் டாக்டர் சீதா அரம்பேபொல நிறுவக தலைவர் வீ.முனசிங்க,பணிப்பாளர் உபாலி ரணசிங்க உள்ளிட்ட அதிகாரிகளுடன் நிறுவகத்தின் பிரிவுகளை பார்வையிட்டார். படம்:பாணந்துறைமத்திய குறூப் நிருபர்

## மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் பதவியேற்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு புதிய தலைவராக மாத்தறை மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நிபுன ரனவக நியமனம் பெற்றதையடுத்து அவர் தனது கடமைகளை மாத்தறை மாவட்ட செயலகத்தில் (17) உத்தியோகபூர்வமாக பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க உட்பட செயலக அரச அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் நிபுன ரணவக்க மாத்தறை மாவட்டத்தில் முதல்முறையாக போட்டியிட்டு 1,31010 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் தெரிவு செய்யப்பட்டார்.

# நாட்டு மக்கள் பொ. பெரமுனவுக்கு வலுவான ஆணையை வழங்கியுள்ளனர்

**இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த**

**பேருவளை விஷேட நிருபர்**

நாட்டு மக்கள் வலுவான அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற நோக்கில் பொதுஜன பெரமுனவை வெற்றிபெறச் செய்து மிகத் தெளிவானதோர் ஆணையைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். ஜனாதிபதி,பிரதமர் மீதும் பொதுஜன பெரமுன மீதும் பூரண நம்பிக்கை வைத்து வாக்களித்த மூவின மக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம் என இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த கூறினார்.

அளுத்கமை, கழுவாமோதரவில் உள்ள அவரது அலுவலகத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



இம்முறையும் பாராளுமன்றத்ததிற்கு தெரிவான அவருக்கு வாழ்த்து தெரிவிக்க பெருமளவிலான ஆதரவாளர்கள் சமூகமளித்திருந்தனர். தொடர்ந்து உரையாற்றிய அவர், நடைபெற்று முடிந்த தேர்தலில் பொதுஜன பெரமுனவை அமோக வாக்குகளினால் வெற்றிபெறச் செய்த பேருவளை மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய அரசின் கீழ் பேருவளை தொகுதியை முன்னேற்றவும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கவும் முழு மூச்சுடன் பாடுபடுவேன். வலுவான அரசை அமைக்க வேண்டி நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு தெளிவான ஆணையைப் பெற்றுக்கொடுத்துள்ளனர். அதற்காக மக்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் ரஹுமான் இஷாக் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்குமுகமாக ஹொரவப்பொத்தான அலிக்குமுல்லாவ ,தெம்பிரியத்தேவல பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் செய்த போது சிறுவனொருவன் மலர் மாலை அணிவித்து வரவேற்பதை காணலாம். படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



## தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்து



தேசிய பட்டியல் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள பேருவளை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களான அரச ஹஜ் கமிட்டியின் தலைவர் மர்ஜான் பளீல் மற்றும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோருக்கு முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் களுத்துறை மாவட்டத் தலைவரும், பேருவளை நகர வர்த்தகர் சங்க இணைத் தலைவருமான தேசகீர்த்தி எம். இக்பால் சம்சுதீன் தமது பிரதேச மக்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது, பேருவளை தொகுதி முஸ்லிம்களுக்கு இருவேறு அரசியல் கட்சிகளின் மூலமாக கிடைக்கப்பெற்றுள்ள மேற்படி நியமனத்தின் மூலமாக எமது பிரதேசம் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பதவிக்கு வந்துள்ள அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராக மர்ஜான் பளீல் நியமிக்கப்பட்டுள்ளமையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அவர் எமது சமூகத்திற்காக எவ்வித கட்சி வேறுபாடுமின்றி கடந்த காலங்களில் பணியாற்றியமைக்கு கிடைத்த இறைவனின் அருளாகவே இந் நியமனத்தை நான் பார்க்கிறேன். எமது களுத்துறை மாவட்ட முஸ்லிம் சமூகம் தலைமைகள் இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த ஒருகால கட்டத்தில், இந்நியமனம் எமது சமூகத்தைச் சேர்ந்த இருவருக்கு, இருவேறு கட்சிகளில் கிடைத்துள்ளமையை பாராட்டுகின்ற இச்சந்தர்ப்பத்தில், இருவரும் ஒன்றிணைந்து எமது சமூகத்தின் நலன்களுக்காக ஒற்றுமையாக செயற்படுவதே காலத்தின் தேவையாகும் என்றும் இக்பால் சம்சுதீன் தனது வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.


## மதுபான போத்தல் விற்பனை; ஓய்வுபெற்ற இராணுவ வீரர் கைது

**புத்தளம் விசேட நிருபர்**

சில காலமாக பொலிஸாரின் கண்ணில் மண்ணைத் தூவி திருட்டுத் தனமாக மதுபான போத்தல்களை எடுத்துச் சென்று விற்பனை செய்து வந்த ஓய்வுபெற்ற இராணுவ வீரர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக கொபேஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

கொபேஹேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வலஸ்வெவ எனும் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஓய்வு பெற்ற இராணுவ வீரரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று இரண்டு வருடங்கள் ஆகியுள்ள சந்தேக நபர் கடந்த கொரோனா காலப்பகுதியில் திருட்டு மதுபான போத்தல்களை எடுத்துச் சென்று விற்பனை செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து பத்து மதுபான போத்தல்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சாமஸ்ரீ, தேசமான்ய பட்டம் வழங்கி கௌரவிப்பு



நுவரெலியாவைச் சேர்ந்த எஸ். எம். முக்தார் தீன் (சமாதான நீதவான்) அவர்களின் 25 வருட சமூக சேவைகளைப் பாராட்டி அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சாமஸ்ரீ, தேசமான்ய பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

விவசாயத் திணைக்களத்தில் சேவையாற்றி ஓய்வு பெற்ற இவர், சில்மியாபுர அல் முர்ஷித் வித்தியாலய பழைய மாணவரும், நுவரெலியா காதி நீதிமன்ற பதிவாளரும், நுவரெலியா தாருல் ஹுதா அஹதிய்யாப் பாடசாலை செயலாளரும், வை. எம். எம். ஏ. இயக்கத்தின் நுவரெலியா கிளை உப தலைவராகவும் பணியாற்றி வரும் இவர், பொரகஸ் மர்ஹூம்களான சரிப்தீன், ஆயிஷா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

## தொழில் பெற்றுத்தருவதாக கூறி ரூ.2.6 மில். மோசடி

**புத்தளம் தினகரன் விசேட நிருபர்**

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி 2.6 மில்லியன் ரூபாவை மோசடி செய்த வென்னப்புவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை சிலாபம் தொகுதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர் வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்களை கொழும்பு மற்றும் வென்னப்புவ பகுதிகளில் நடாத்தி வருகின்றமை தெரியவந்துள்ளது.

# வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபக இயக்கம் ஆலோசனைக் கூட்டம்

வலம்புரி கவிதாவட்டம் ஸ்தாபக இயக்கம் நடாத்தவிருக்கும் 'கவின் கமல்' நினைவு சர்வதேச கவிதைப் போட்டி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது.

வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபகத் தலைவர் தாஸிம் அகமது தலைமையில் நடைபெற்ற இவ்ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் கலைக்கமல், பொருளாளர் எம்.எச் .நூர்டீன், வகவம் சிரேஷ்ட உறுப்பினர்களான மேமன் கவி , ஸாபி மொஹமட் அன்சார் (பாத்திமா மைந்தன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.



மேற்படி கூட்டத்தில் ''வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபக குழு ''ஸ்தாபக இயக்கம்'' என பெயர் மாற்றப்பட வேண்டும் என்றும் கட்டம்கட்டமாக வேலைத்திட்டங்கள் கொண்டு செல்லப்படவேண்டும் என்றும் மேமன்கவி முன்மொழிந்ததை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். வகவம் ஸ்தாபக இயக்கம் ஆரம்பித்திருக்கும் கவிதைப் போட்டிக்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருதும் கிடைக்கப்பெற்ற கவிதைகளை நடுவர் குழுவுக்கு ஒப்படைத்து முடிவைப்பெறுதல் மேலும் வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபக இயக்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் என்பன கலந்துரையாடப்பட்டன.

பரிசளிப்பு விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடுசெய்வது பற்றி பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்தார். முகநூல் இணையவழி செயற்பாடுகள் மேற்கொள்வது பற்றி மொஹமட் அன்சாரும் தாஸிம் அகமதும் கருத்துக்கள் தெரிவித்தனர். பொருளாளர் எம்.எச். நூர்டீன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான யோசனைகளை நெறிப்படுத்தினார்.

நடுவர்களிடமிருந்து பெறுபேறுகள் கிடைத்த பின்னர் அடுத்த ஆலோசனைக்கூட்டத்தில் பரிசளிப்பு விழா பற்றி விரிவாக கலந்துரையாடுவது என தீர்மானிக்கப்பட்டது.


# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 700 கிலோ மஞ்சள் பறிமுதல்

**வணாதவில்லு நிருபர்**

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட 700 கிலோ மஞ்சளை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனை கொண்டு வந்த நான்கு சந்தேக நபர்கள் கல்பிட்டிய நுரைச்சோலை கடற்கரையில் நேற்று (19) காலை நடத்தப்பட்ட சோதனையின் போது 19 வயது கடற்படை அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் கல்பிட்டியவில் வசிப்பவர்கள் மற்றும் மீனவர்கள் என்று கூறப்படுகிறது.



தனிமைச் சட்டத்தை மீறி இரண்டு மீன்பிடிக் கப்பல்களால் நுரைச்சோலை கடற்கரையில் இறக்கப்படும் போது கல்பிட்டி விஜயா மற்றும் புத்தளம் தம்பப்பன்னி கடற்படை தளங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மஞ்சள் தொகையை கைப்பற்றினர்.

மஞ்சள் சம்பந்தப்பட்ட சரக்கு தலா 50 கிலோ 14 பைகளில் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. பறிமுதல் செய்யப்பட்ட மஞ்சளின் மதிப்பு ரூ .2 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட மஞ்சள் பொருள் இலங்கை சுங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதோடு, கைப்பற்றப்பட்ட இரண்டு மீன்பிடிக் கப்பல்கள் மற்றும் நான்கு சந்தேக நபர்களையும் கல்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

2020 ஓகஸ்ட் 20 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



20ம் திகதி முதல் 23ம் திகதி வரை

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.24 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் ஆவணி 04

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00 வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00 வரை
யோகம்: சித்தமரண யோகம்
நட்சத்திரம்: பூரம் நள்ளிரவு 2.57
திதி: துவிதியை

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

*அரச நிறுவனங்களில் அதிகார துஷ்பிரயோகம்;*

# கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்



**ஸாதிக் ஷிஹான்**

அரசாங்க நிறுவனங்களில் உள்ள மோசமான மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தி ல் ஈடுபடும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் உள்ள மோசமான சில அதிகாரிகளின் செயற்பாடுகள் காரணமாக அதே நிறுவனத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் சிறந்த அதிகாரிகளுக்கு அநியாயம் இழைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காலி பிரதேசத்திற்கு நேற்று விஜயம் செய்த பாதுகாப்புச் செயலாளர் தென் மாகாணத்திலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளில் உள்ள பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் 04

# ஜனாதிபதியின் இன்றைய கொள்கை விளக்க உரை

## நாளையே அது தொடர்பான வாக்கெடுப்பு

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று முன்வைக்கும் அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை தொடர்பான வாக்கெடுப்பு நாளை நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில் 9 ஆவது நாடாளுமன்றத்தில் முதலாவது விவாதம் இன்று நடைபெறும் என் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்றம் முதலாவது அமர்வு காலை 9.30 மணிக்கு கூடவுள்ளதுடன் சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவதோடு புதிய உறுப்பினர்கள் சத்திய பிரமாணமும் செய்து கொள்வர்.

இந்த நடவடிக்கை முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றம் பிற்பகல் 3 மணி வரை ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்படும் நாடாளுமன்றம் பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் கூடும்.

அப்போது ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை விளக்கம் தொடர்பான உரையை நிகழ்த்துவார். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான விவாதத்திற்காக நாடாளுமன்றம் நாளை கூடவுள்ளதுடன் வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

## நாணயமாற்று

| | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

# அயலவருக்கு முதலிடம் கொள்கை; நெருக்கமான உறவு;

## இந்திய வெளியுறவு அமைச்சர் அமைச்சர் தினேஷுடன் பேச்சு



இந்தியாவின் அயலவருக்கு முதலிடம் கொள்கையின் ஒரு பகுதியாக இந்தியா இலங்கை ஒத்துழைப்பினை புதிய மட்டத்துக்கு கொண்டு செல்வதற்காக வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்ப்பதாக டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.இலங்கை வெளியுறவு அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டமைக்காக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் நேற்று முன்தினம் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது 04

*பட்டதாரிகள் நியமனம்;*

# நியமனங்கள் கிடைக்காதவர்கள் முறையீடு செய்தால் மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்படும்



அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் நியமனங்கள் கிடைக்காதவர்கள் மேன் முறையீடு செய்யும் பட்சத்தில் மீண்டுமொரு சந்தர்ப்பத்தினை வழங்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் வறுமைப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் ஒரு இலட்சம் அரசாங்க வேலை வாய்ப்புக்கள் விரைவில் வழங்கி வைக்கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை நேற்று நடைபெற்ற நிலையில் குறித்த அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தேர்தல் காலப் பகுதியில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்திற்கு அமைவாக குறித்த வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் இன்றைய அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதே ஜனாதிபதியினால் இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வேலை வாய்ப்புக்களுக்கு நாடளாவிய ரீதியில் வறுமைப்பட்ட குடும்பங்களில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் உள்வாங்கப்படவுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுமார் 700 பேரை சிபாரிசு செய்வதன் ஊடாக சரியானவர்களுக்கு குறித்த வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதை உறுதிப்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதேவேளை அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் போது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களும் விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளவர்களும் ஏமாற்றமடைந்துள்ள நிலையில் காணப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

# பிரதமரின் ஊடக செயலாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் ரொஹான் வெலிவிட்ட நியமனம்



பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஊடக செயலாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் ரொஹான் வெலிவிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் செயலாளர் காமினி செனவிரத்னவினால் இதற்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடற்றொழில் அமைச்சராக செயற்பட்டபோது அவரின் ஆலோசகராக ரொஹான் வெலிவிட்ட நியமிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், பிரதமர் எதிர்க் கட்சித் தலைவராக பதவி வகித்த போதும் அவரது ஊடக செயலாளராக ரொஹான் வெலிவிட்ட கடமையாற்றினார்.

# நந்திக்கடல் களப்பு புனரமைப்பு முதலாவது கட்ட நடவடிக்கை

## அடுத்த வாரம் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கில் நந்திக்கடல் களப்பை புனரமைப்புச் செய்வதற்கான முதலாவது கட்ட நடவடிக்கையை எதிர்வரும் வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விசேட வழிகாட்டலுக்கமைவாக கடந்த மாதம் முழுதும் முன்னெடுக்கப்பட்ட புனரமைப்புக்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில் புனரமைப்பு பணிகளை எதிர்வரும் வாரம் ஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடற்றொழில் திணைக்களம், துறைமுகக் கூட்டுத்தாபனம், நாரா நிறுவனம், வனஜீவிகள் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் மீனவ சமூகத்தினரின் பங்கேற்புடன் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் அப்பகுதியில் குவிந்துள்ள கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு உடனடி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கிணங்க முதற்கட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யுத்தம் மற்றும் கவனிக்கப்படாத நிலை காரணமாக கடந்த 30 வருட காலமாக நந்திக்கடல் பகுதியில் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

சுனாமி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களின் போதும் யுத்தத்தின் போதும் நந்திக் கடல் களப்பு பகுதியில் கழிவுப்பொருட்களும் சேறும் குவிந்துள்ளதால் மேற்படி களப்பின் இயற்கை எழிலுக்கு அபகீர்த்தியேற்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதியில் மீன் மற்றும் இறால் உற்பத்திகள் குறைவடைந்து காணப்படும் நிலையில் அதனை நம்பியுள்ள மீனவக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன.

அது தொடர்பில் தொடர்ச்சியாக அவதானத்தைச் செலுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ள பணிப்புரைக்கமைய நந்திக்கடல் களப்பின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஸ

*மின்சார சபை கட்டமைப்பு;*

# நிர்வாக மத்திய நிலைய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சார சபை கட்டமைப்பு நிர்வாக மத்திய நிலைய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுமின்சாரத்துறைஅமைச்சர் டலஸ் அழகப்பெரும சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்

அதற்கிணங்க மேற்படி நிர்வாகத் தொகுதி மத்திய நிலையங்களில் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு மேலதிகமாக விசேட செயலணியை பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும பாதுகாப்பு 04

# இலங்கையில் சேலைன் உற்பத்தி தொழிற்சாலை இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்க தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இவ்வருட இறுதிக்குள் இலங்கையில் சேலைன் உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் கண்காணிப்பு இராஜாங்க அமைச்சர் 04





புதிய பாராளுமன்ற அமர்வை முன்னிட்டு நேற்று பரீட்சார்த்த நிகழ்வு இடம்பெற்றது. பாராளுமன்ற செயலாளர் நாயகம், படைக்கள சேவிதர் உட்பட முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டதை காணலாம்.

**இ.போ.சவின்**

# வடபிராந்திய முகாமையாளர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் இலங்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். 65 ஆயிரம் ரூபா பணம் இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் இவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேசத்தில் வைத்து இலங்கை போக்குவரத்து சபையினுள் ஏற்பட்ட முறைப்பாடு ஒன்றை சீர்செய்வதற்காக 65 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளதாக 04

# கொழும்பில் இன்று கூடுகிறது TNA

## முக்கிய விடயங்கள் ஆராய்வு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இன்று கொழும்பில் கூடி பேச்சு வார்த்தை மேற்கொள்கிறது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் கலந்துகொள்ள கூட்டமைப்பின் சார்பில் தெரிவானவர்கள் கொழும்பில் கூடவுள்ள நிலையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவும் கூடி ஆராயும்.

இன்று கூட்டத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் மாற்றம் கோரி ரெலோ உட்பட பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தும் என தெரியவருகின்றது.

பேச்சாளர் பதவியிலிருந்து மாற்றம் கோரும் தீர்மானத்தை ரெலோவின் மத்திய குழு நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புளொட்டும் இந்த கோரிக்கையை வலியுறுத்தும்.

# வெளிநாடுகளிலிருந்து மேலும் 421 பேர் இலங்கை வந்தனர்

கொவிட் 19 பரவலால் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 421 இலங்கையர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் இங்கிலாந்திலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 17 பேரும், கட்டாரில் இருந்து 394 பேரும் மற்றும் இங்கிலாந்தில் இருந்து 10 பேரும் இவ்வாறு தாயகம் திரும்பியுள்ளனர்.

04

## அமைச்சரவை...

நடைபெற்றது.இதன் போது ஊடக அமைச்சர் கெஹெலிய நியமிக்கப்பட்டதாக தகவல் ஊடகத்துறை அமைச்சு கூறியது. இடைக்கால ஆட்சியில் அமைச்சர்களான பந்துல குணவர்தன ம ற்றும் ரமேஷ் பதிரண ஆகியோர் இணை அமைச்சரவை பேச்சாளர்களாக செயற்பட்டது தெரிந்ததே. (பா)

## முழுமையாக...

100 விசாரணை கோப்புகள் சட்ட மாஅதிபர் திணைக்களத்தால் பதில் பொலிஸ் மாஅதிபருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கடந்த காலங்களில் பொலிஸ் மாஅதிபரினால் பல்வேறு கோப்புகள் வழக்கு தொடர்வதற்காக அனுப்பப்பட்டன.இவற்றில் பூர்த்தி செய்யப்பட்ட கோப்புகள் தொடர்பில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுமத்ரா தீவில் நேற்று...

3.48S, நெட்டாங்கு 101.8 E பகுதியில் 163 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலநடுக்கம் காரணமாக, இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை இல்லை என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கடுமையான சட்ட... 03ஆம் பக்க தொடர்...

ஈடுபட்டார். இந்த கலந்துரையாடலுக்கு பின்னா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன மேலும் குறிப்பிடுகையில்:

அனேகமான அரச நிறுவனங்களில் சிறந்த அதிகாரிகள் பலர் உள்ளனர். இவர்களில் ஒரு சில மோசமான அதிகாரிகளும் காணப்படுகின்றனர். இந்த மோசமான அதிகாரிகளின் செயற்பாடுகள் காரணமாக

குறித்த நிறுவனத்தில் அர்ப்பணிப்புடன் இதயசுத்தியுடன் சேவையாற்றும் அனைத்து அதிகாரிகளின் நற்பெயர்களுக்கும் களங்கம் ஏற்படுகின்றன.

நாட்டில் இடம்பெறும் திட்டமிட்ட குற்றச் செயல்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கப்பம் பெறல் போன்ற செயற்பாடுகளை முறியடிக்க வேண்டும். அதேபோன்று அரசு நிறுவனங்களில் இருந்து கொண்டே இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இருப்பார்களேயானால் அதில் பாரிய பிரச்சினை இருக்கின்றன. எனவே மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அல்லது அதிகார துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளும் இறுதி நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நாளில்தான் இது நிறைவு பெற்றது என்று கூறமுடியும் என்றார்.

எமது நாட்டு மக்கள் போலிசாரிடம் இருந்து அதிகமான விடயங்களை எதிர்பார்க்கின்றனர். சுபீட்சமான எதிர்காலம் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் இதற்கு தேசிய பாதுகாப்பு பிரதானமான ஒன் றாகும்.

நாட்டு மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழும் சூழலை ஏற்படுத்துவது தேசிய பாதுகாப்பை சார்ந்தது.

## அயலவருக்கு முதலிடம்... 03ஆம் பக்க தொடர்...

கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அமைச்சரை மரியாதையின் நிமித்தம் சந்தித்திருந்தார். அப்போது டாக்டர் எஸ். ஜெய்சங்கரின் வாழ்த்து கடிதத்தை அமைச்சரிடம் கையளித்த உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, இருதரப்பு உறவை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான இருநாடுகளின் உறுதிப்பாட்டை சமீபத்திய தேர்தல்களில் இலங்கை அரசாங்கத்தால் பெறப்பட்ட வலுவான ஆணையானது மேலும் வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின்போது போது, இந்தியாவும் இலங்கையும் COVIDக்கு பின்னரான சூழ்நிலையில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பெறுவது முக்கியம் என்று அமைச்சர் குணவர்த்தன குறிப்பிட்டார். மேலும் இரு நாடுகளுக்கும் இடையே பயண மற்றும் சுற்றுலாத்துறையினை வரையறையுடன் விரிவுபடுத்துவதற்கான நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

பௌத்த மதரீதியிலான பிணைப்புக்களை மேலும் விரிவாக்குவதில் இருதரப்பினருக்கும் இடையில் மிகவும் நெருக்கமான ஒத்துழைப்பின் அவசியம் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டது.

அத்துடன் பௌத்த யாத்திரிகர்களுக்கான பயணத்தை எளிதாக்குவதற்காக குஷிநகர் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றிய இந்திய அரசின் முயற்சியை அமைச்சர் குணவர்த்தன வரவேற்றார். உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் அமைச்சர் குணவர்த்தன ஆகியோர் இரு நாடுகளினதும் நலன்களுடன் தொடர்புடைய பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதித்தனர்.

## வடபிராந்திய முகாமையாளர்... 03ஆம் பக்க தொடர்...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இ.போ.சபையின் மன்னார் சாலையில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்தே அங்கு வருகை தந்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட வட பிராந்திய போக்குவரத்து முகாமையாளரை மன்னார் நீதிமன்றில் நீதவான் கணேசராஜா முன்னிலையில் முற்படுத்தினர்.

இதன்போது அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் அன்றைய தினம் சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் முற்படுத்தவும் அவர் உத்தரவிட்டார்.

## வெளிநாடுகளிலிருந்து... 03ஆம் பக்க தொடர்...

கட்டாரில் இருந்து வந்த 394 பேரில் 210 பேர் வெவ்வேறு விமான சேவைகளில் பணிபுரியும் விமான பணியாளர்கள் யாவர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் PCR பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

## நிர்வாக மத்திய நிலைய... 03ஆம் பக்க தொடர்...

அமைச்சின் செயலாளர் கமல் குணரட்னவுக்கு அறிவித்துள்ளார்.

முழு நாடும் பாதிப்புக்குள்ளாகும் வகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மின் துண்டிப்பு தொடர்பில் காரணங்களைக் கண்டறிவதற்காக அமைச்சர் டலஸ் அழகப்பெரும மின்சார சபையின் நிர்வாக தொகுதிக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நிலமைகளை ஆராய்ந்தார். அதன்போதே அவர் அதிகாரிகளிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரத்தை விநியோகிக்கும் பிரதான நிர்வாக மத்திய நிலையங்கள் தொடர்ச்சியாக முறையான பாதுகாப்புக்கு உட்படுத்தப்படுவது தொடர்பில் அவர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார். (ஸ)

## இலங்கையில் சேலைன்... 03ஆம் பக்க தொடர்...

பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் காலங்களில் நிலவிய மருந்து மாபியாவை இல்லாதொழித்து சிறந்த தரமான மருந்துகளை குறைந்த விலையில் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உற்பத்திசெய்யக்கூடிய மருந்துகளில் 90 வீதமானவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. எதிர்வரும் ஐந்து வருடங்களில் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு மருந்து இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கான பணிப்புரையை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

அதற்கிணங்க மருந்து உற்பத்திக்கான திட்டங்களை நாம் தற்போது தயாரித்து வருகின்றோம். பசில் ராஜபக்ஷவுடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைக்கிணங்க இணக்கப்பாடு காணப்பட்டுள்ள நிலையில் இந்த வருட இறுதிக்குள் நாட்டுக்குத் தேவையான சேலைன்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதுடன்ஒரு வருடத்திற்குள் அதன் உற்பத்திகளை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள மருந்து மாபியாவை நாட்டிலிருந்து இல்லாதொழித்து மக்களுக்கு தரமான மருந்துகளை சாதாரண விலையில் பெற்றுக்கொடுக்க நடவவடிக்கை எடுபபோம். எதிர்வரும் 2, 3 வாரங்களில் அதன் பிரதிபலன்களை மக்கள் அனுபவிக்க முடியும் எள்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## சம்பிக்கவிற்கு 28ம் திகதி...

வாகனம் செலுத்தி விபத்தொன்றை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பிலேயே இவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பிரதிவாதிகள் மூவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி இன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்து இதற்கு முன்னர் அழைப்பாணை வெ ளியிட்டுள்ளார்.

எனினும், சீராய்வு மனுவொன்றை தாக்கல் செய்து நேற்று நீதிமன்றில் முன்னிலையான பிரதிவாதியான பாட்டளி சம்பிக்க ரணவக்க, இன்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளவுள்ளதால் வேறொரு நாளை பெற்றுத் தருமாறு தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றிற்கு அறிவித்தார். அதன்படி, பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவை இம்மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, அவரை நீதவான் நீதிமன்றில் பிறப்பிக்கப்பட்டிருந்த முன் பிணை அடிப்படையில் விடுவித்து உத்தரவிட்டார்.

## புதிய பாராளுமன்றத்தின்...

நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார். அதனையடுத்து மீண்டும் பாராளுமன்றம் பிற்பகல் 3 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தலைமையில் ஆரம்பமாகும்.

ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை சமர்ப்பித்து உரை நிகழ்த்துவார்.

அதற்கிணங்க புதிய பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வில் கலந்து கொள்ளவுள்ள அதிதிகள் இன்று பிற்பகல் 2. 15 மணிக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களில் அமர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.25 மணியளவில் அனைத்து அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆசனத்தில் அமரவுள்ளனர். 2.30 மணியளவில் புதிய சபாநாயகரின் வருகை இடம்பெறும்.

பிற்பகல் 2 .35 மணியளவில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் அவரது பாரியாரும் பாராளுமன்ற கட்டிடத்திற்கு வருகை தருவர்.அதனையடுத்து 2.40 மணியளவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது பாரியாரும் வருகை தருவர்.

அவர்களை சபாநாயகரும் பாராளுமன்ற செயலாளர் நாயகமும் உத்தியோகபூர்வமாக வரவேற்பர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களால் ஜெய மங்கள கீதம் இசைக்கப்பட்டு ஜனாதிபதியின் கொடி ஏற்றப்பட உள்ளது.

அதனையடுத்து பிரதமர்,சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி சபைக்கு அழைத்துச் செல்லப்படுவார். அதனையடுத்து ஜனாதிபதியின் தலைமையில் சபை அமர்வு உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது கொள்கை பிரகடனத்தை வெளியிட்டதன் பின்னர் பாராளுமன்றம் பிரிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்படும்.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது உத்தியோகபூர்வ நிகழ்வு சிறப்பாக இடம் பெறுவதுடன் இராணுவ அணிவகுப்பு,மோட்டார் வாகன பவனி ஆகிய நிகழ்வுகள் இம்முறை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது

அதேவேளை, நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றியே பாராளுமன்றத்தின் முதலாவது உத்தியோகபூர்வ அமர்வு இடம்பெறவுள்ளது. ஒன்பதாவது பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும் அபே ஜனபல கட்சியின் சார்பிலும் தேசிய பட்டியலில் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பில் அக்கட்சிகள் இதுவரை பெயர்களை அறிவிக்காத நிலையில் அவர்களுக்கான ஆசனம் வெறுமையாகவே காட்சியளிக்கும்.

அந்த இரு கட்சிகளின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களுக்கான பெயர்கள் இதுவரை அறிவிக்கப்படாத நிலையில் தேர்தல் ஆணைக்குழு அதற்கான வர்த்தமானியையும் இதுவரை வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஸ)

## 20 ஆவது திருத்த சட்டமூலத்தை...

இதன் போது 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்து செய்து 20 ஆவது திருத்தத்தை தயாரிப்பதற்கு அனுமதி கோரும் அமைச்சரவை பத்திரத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகம் செய்வதாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. முதற்கட்டமாக ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் 19 ஆவது திருதத்தை இரத்து செய்து 20 ஆவது திருத்தத்தை கொண்டுவருவதாகவும் அரசு கூறியிருந்தது.

இது தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு ஜனாதிபதியும் பிரதமரும் ஆலோசனை வழங்கியிருந்தார்கள். இது தொடர்பாக அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து நேற்று முன்வைத்துள்ளார். அமைச்சர்கள் பலரும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள நிலையில் உடனடியாக 20 ஆவது திருத்தத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பில் முன்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரி, 19 ஆவது திருத்தத்தில் உள்ள ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 வருடங்களாக குறைக்கும் திருத்தமோ இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக நீடிக்க முடியாது என்ற திருத்தமோ மாற்றப்படாது.ஜனாதிபதியின் கையை கட்டிப் போடும் வகையிலான விடயங்கள் மாற்றப்படும் என்று கூறியிருந்தார். 19 ஆவது திருத்தத்தை மாற்ற வேண்டும் என ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு கட்சிகள் பலவும் கூறி வந்தது தெரிந்ததே.(பா)

## இன்னும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு...

சமர்ப்பித்துள்ளார்.இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதே வேளை ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் வேலையற்ற பட்டதாரிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வாகனத்தில் வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுமியிருந்த இடத்திற்கு சென்று அவர்களுடன் உரையாடினார்.

தொழில் வாய்ப்பிற்காக உள்வாங்கும் நியமனக் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட சில பட்டதாரிகளின் பெயர்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களில் நீக்கப்பட்டுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவித்தார்கள்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி,

அவர்களுடைய பிரச்சினைகள் குறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டதாகவும் அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை அமைச்சரவை கூட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, தமது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். சகலருக்கும் தொழில் வழங்க அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார்.10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஏற்கெனவே 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதோடு அவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் சில பட்டதாரிகளின் சங்கங்கள் நேற்று கொழும்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன், அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் குற்றம் சுமத்தினர்.

ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளியிட்டனர். குறித்த குழுவினர் ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாகச் சென்றனர்.

கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெயர்கள் தற்போது அகற்றப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்புரிமையைக் கருத்தில் கொண்டு இதற்கு முன் தனியார் துறையில் கடமையாற்றியவர்கள் புதிய பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

## பாராளுமன்றுக்கு 50 வயதுக்கு...

87 பேர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டள்ளவர்களின் தகவல் தற்பொது பாராளுமன்ற அதிகாரிகள் மூலம் Online முறைமையில் பெறப்பட்ட நிலையில் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. இதற்கமைய 30 வயதுக்கு குறைந்தவர்கள் 5 பேரும், 30 40 வயதுக்கு உட்பட்டவர்கள் 21 பேரும், 4050 வயதுக்கு உட்பட்டவர்கள் 60 பேரும், 5060 வயதுக்கு உட்பட்டவர்கள் 54 பேரும், 6070 வயதுக்கு உட்பட்டவர்கள் 37 பேரும், 7080 வயதுக்கு உட்பட்டவர்கள் 9 பேரும் 8090 வயதுக்கு உட்பட்டவர்கள் 3 பேரும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பாராளுமன்றுக்கு புதிய உறுப்பினர்கள் 7 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சகலரும் ஒருங்கிணைந்து செயற்படுவோம்...

அவர் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையையும் அவர் வீணடிக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசே தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கியது என்ற வரலாற்றுப் பதிவை இந்த ஆட்சியில் நாம் ஏற்படுத்துவோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தமை தொடர்பில் சம்பந்தனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எந்தவொரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் நீடிக்கவில்லை. கடந்த ஆட்சியில் அந்தப் பெரும்பான்மைப் பலம் இருந்த போதிலும் கூட இடையில் ஏற்பட்ட குழப்பத்தால் அந்தப் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தக்கூடிய சூழல் இருக்கவில்லை.

ஆனால், தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அவருடைய கட்சி இருக்கின்றது.

அவர் நேர்மையாகச் செயற்பட்டு நாட்டினுடைய முன்னேற்றத்துக்கும் நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களது முன்னேற்றத்துக்கும் தடையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்று நாம் நம்புகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 'மஹிந்த அரசுடன் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுமா?' என்று சம்பந்தனிடம் கேட்டபோது, இப்போது அதற்குப் பதிலளிக்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்த சட்டத்திற்கு...

வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை நேற்று நடைபெற்ற நிலையில், கடந்த ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை களையும் வகையில் 20 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக 19 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகிய நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இந்தியாவின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டத்தினையும் இல்லாமல் செய்வதற்கு புதிய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சில தரப்புக்களினால் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்ற நிலையிலேயே அமைச்சர் டக்ளஸ் மேற்குறிப்பிட்ட கருத்தினை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தினை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் நலன்களை அடைந்து கொள்ள முயற்சிக்கும் குறுகிய நலன் கொண்ட அரசியல் தரப்புக்களே இவ்வாறான உண்மைக்கு புறம்பான கருத்துக்களை பரவ விடுவதாக குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடும் பாதுகாப்புடன்...

மாகாணசபை முதலமைச்சருமான இவர் சிறைச்சாலையில் இருந்த வண்ணமே நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அவரது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் போட்டியிட்டு 54,198 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இன்று நடைபெறும் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கு விடுக்கப்பட்ட நகர்வுப் பிரேரணைக்கான கோரிக்கைகள் நீதிமன்றில் ஏற்கப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றார். இதனடிப்படையில் இன்று பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் அதில் கலந்துகொள்ளுவதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நகர்வு மனு தாக்கல் செய்யப்பட்டு பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது.

## கிளிநொச்சி விபத்தில்...

இச் சம்பவம் நேற்று மாலை 05 மணியளவில் கனகபுரம் டிப்போ வீதியில் இடம்பெற்றுள்ளது. இதன் போது கிளிநொச்சி காந்திகிராமத்தை சேர்ந்த 18 வயதான ஞானகுமாரன் கிருசாந்தன் உயிரிழந்துள்ளார். இதே நேரம் உயிரிழந்த மற்றைய இளைஞனின் தகவல்கள் எதுவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவரவில்லை என பொலிசார் தெரிவித்தனர். இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

புதுமுறிப்பு பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர். இதன்போது டிப்போ கனகபுரம் வீதியில் மாவீரர் துயிலுமில்லம் பகுதி வீதி வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி வேலி தூண்களில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தில் இரு இளைஞர்கள் பலியாகியதுடன், 20 வயதுடைய மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞனை மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அவசியம் ஏற்படின் பகலிலும்...

வகையிலேயே மின்வெட்டு இடம் பெறுகிறது. தேவையேற்படின் பகல் வேளைகளிலும் ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள் என மின்வெட்டை மேற்கொள்ள நேரிடும் என்றும் மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 35. 44 கிகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில் நாட்டின் மின்சாரத் தேவை 2203.44 மெகாவோட்டாக உள்ளது.

எவ்வாறாயினும் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தில் இடம்பெற்ற தொழில்நுட்ப கோளாறு காரணமாக தேசிய மின் இணைப்புக்கு 300 மெகா வோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது. அதேவேளை நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலும் திருத்த வேலைகள் நிறைவடையவில்லை என்பதால் நாட்டின் தேசிய மின் இணைப்புக்கு மொத்தமாக 900 மெகாவோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளது. இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு மின் துண்டிப்பு அறிவிக்கப்பட்டது. அதேவேளை பகல் வேளைகளில் மின்சாரத்திற்கான கேள்வி அதிகரிக்கும் நிலையில் பகலில் மின் துண்டிப்பு மேற்கொள்ள நேரிடலாம். அதற்கிணங்க பகல் வேளைகளில் ஒரு மணித்தியாலம் 45 வினாடிகளுக்கு மின் துண்டிப்பு இடம்பெறலாம் என்றும் பொது மக்கள் மின்சாரத்தை சிக்கனமாக உபயோகிப்பது சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## ஆஸியில் இலவச தடுப்பு மருந்து




அவுஸ்திரேலிய மக்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பு மருந்து இலவசமாய் வழங்கப்படும் என்று அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்குச் சுமார் 25 மில்லியன் தடுப்பு மருந்துகள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

விக்டோரியா மாநிலம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தப் போராடிக்கொண்டிருக்கும் வேளையில், தடுப்பு மருந்து பற்றி அவுஸ்திரேலியா உறுதியளித்துள்ளது.

விக்டோரியா மாநிலத்தில் நேற்று புதிதாக 216 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் சுமார் 24,000 பேர் வைரஸ் தொற்றால் அவதிப்படுகின்றனர். அங்கு 450 பேர் உயிரிழந்தனர்.

# இராணுவ கலகம்: மாலி ஜனாதிபதி இராஜினாமா

மாலி ஜனாதிபதி இப்ராஹிம் பெளபக்கர் கெஸ்டா படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து தமது பதவியை இராஜினாமா செய்திருப்பதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி குறிப்பிட்டுள்ளது.

அரசு மற்றும் பாராளுமன்றத்தையும் கலைப்பதாக தொலைக்காட்சியில் உரையாற்றிய கெஸ்டா தெரிவித்தார். “அதிகாரத்தில் நீடிப்பதன் மூலம் இரத்தம் சிந்துவதை விரும்பவில்லை” என்றும் அவர் தெரிவித்தார்.

தலைநகர் பமகோவுக்கு அருகில் உள்ள இராணுவா முகாம் ஒன்றுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் பௌபு சிசே அழைத்துச் செல்லப்பட்டு சில மணி நேரத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. பிராந்திய சக்திகள் மற்றும் பிரான்ஸில் இருந்து கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

“ஆயுதப் படைகளில் குறிப்பிட்ட குழு ஒன்று தமது தலையீட்டின் மூலம் இதனை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினால், எனக்கு வேறு தேர்வு இருக்கிறதா?” என்று கெஸ்டா கேள்வி எழுப்பினார்.



முன்னதாக கலகத்தில் ஈடுபட்ட படையினர் ஜனாதிபதிக்கு ஆதரவான இராணுவ பிரிவை கைப்பற்றினர். ஜிஹாதிக்களுடன் தொடர்ந்து போராடி வரும் இராணுவத்தினரின் ஒரு பகுதியினருக்கு சம்பளம் தொடர்பில் பிரச்சினை இருப்பதோடு ஜனாதிபதி மீது பரவலாக அதிருப்தி இருந்து வருகிறது.

2018 இல் தேர்தலில் தமது இரண்டாவது தவணைக்கு வெற்றி பெற்ற கெஸ்டா தொடர்பில் ஊழல், பொருளாதாரத்தின் தவறான முகாமை மற்றும் சமூகங்களுக்கு இடையிலான வன்முறைகள் தொடர்பில் அதிருப்தி இருந்து வருகிறது.

இதனையொட்டி மாலியில் அண்மைய வாரங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் சீர்திருத்தங்களை கொண்டுவர பழைமைவாத இமாம் முஹமது டிக்கோ தலைமையிலான புதிய எதிர்க்கட்சி கூட்டணி ஒன்று அழைப்பு விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## காசாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்: போர் எச்சரிக்கை



தெற்கு இஸ்ரேல் மீது பலஸ்தீனர்கள் ரொக்கெட் தாக்குதல் நடத்தியதை அடுத்து ஹமாஸ் ஆட்சியில் உள்ள காசாவில் இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று மீண்டும் குண்டு வீசியுள்ளன.

எல்லையில் இருந்து இஸ்ரேலை நோக்கி தீ பரவச் செய்யும் பலூன்களை பறக்கவிடுவதை நிறுத்தத் தவறினால் ‘போர்’ அச்சுறுத்தல் ஒன்று பற்றி ஹாமாஸ் மீது இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையிலேயே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

காசாவில் இருந்து கடந்த ஒரு வாரமாக இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் தாக்குதல் மற்றும் தீப்பந்தம் கட்டப்பட்ட பலூன்கள் பறக்கவிடுவது அங்கு பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இதனை தணிப்பதற்கு எகிப்து பாதுகாப்பு அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

இதன்போது ஹமாஸ் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் காசாவில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றி உடன் எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே மூன்று போர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராட்சத புத்தர் சிலையின் பாதத்தை தொட்ட வெள்ளம்



சீனாவில் உள்ள இராட்சத புத்தர் சிலை ஒன்றில் 1940களுக்குப் பின் முதல் முறை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

சிச்சுவான் மாகாணத்தின் சென்டுவுக்கு அருகில் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாறையில் குடையப்பட்ட யுனெஸ்கோ மரபுரிமைச் சொத்தான இந்த புத்தர் சிலை 71 மீற்றர் உயரம் கொண்டதாகும்.

இந்த சிலை நீரோட்டத்தை விடவும் உயரத்தில் இருந்தபோதும் அந்தப் பகுதி 70 ஆண்டுகளில் மிக மோசமான வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

100,000க்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். சுற்றுலா பயணிகளை கவர்ந்த இந்த புத்தர் சிலை பகுதியில் நீர் மட்டம் அதிகரித்ததை அடுத்து அங்கிருந்து 180 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

## உலகில் கொரோனா தொற்று 22 மில்லியனைத் தொட்டது




உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் 22 மில்லியனை எட்டியுள்ளதாக ஜோன்ஸ் ஹொப்கின்சன் பல்கலைக்கழகத்தின் தரவு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை நேற்று 22,046,135 ஆக அதிகரித்திருப்பதோடு 778,557 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதியில் மத்திய சீன நகரான வூஹானில் முதலில் அடையாளம் காணப்பட்ட கொவிட்–19 தொற்றினால் தற்போது மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா உள்ளது. அங்கு ஐந்து மில்லியனுக்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதனைத் தொடர்ந்து பிரேசில், இந்தியா, ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்க நாடுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

## கொவிட்–19: தென் கொரிய தலைநகரில் புது கட்டுப்பாடு




தென் கொரிய தலைநகர் சோலில் ஐந்து மாதங்களில் இல்லாத அளவுக்கு கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அருங்காட்சியகங்கள், இரவு விடுதிகள் மற்றும் கரோக்கே விடுதிகள் மூடப்பட்டுள்ளன.

தென் கொரியாவில் நேற்று 297 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவானதோடு, கடந்த மார்ச் தொடக்கம் ஒரு நாளில் அந்நாட்டில் பதிவான அதிக சம்பவங்களாக இது உள்ளது.

கொவிட்–19 தொற்றை வெற்றிகரமாக கையாண்ட நாடுகளில் ஒன்றாக தென் கொரியா இருந்து வந்தது. எனினும் தேவாலயம் ஒன்றை மையமாகக் கொண்டு புதிய தொற்றுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

## பூமிக்கு மிக அருகில் வந்த சிறிய விண்கல்



இதுவரை அவதானிக்கப்பட்டதில் பூமிக்கு மிக நெருக்கமாக 1,830 மைல்கள் தொலைவில் கார் வண்டியின் அளவான விண்கல் ஒன்று கடந்து சென்றதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா குறிப்பிட்டுள்ளது.

எனினும் 2020 கியு.ஜி. என்ற பெயர் கொண்ட இந்த விண்கல் பூமியுடன் மோதினாலும் அது வளி மண்டத்திலேயே அழிந்து எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது.

10 தொடக்கம் 20 அடி நீண்ட இந்த விண்கல் தென்னிந்திய கடலுக்கு மேலால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமியை நெருங்கி வந்துள்ளது. அது வினாடிக்கு எட்டு மைல் வேகத்தில் பயணித்துள்ளது.

பூமிக்கு அருகே வரும் விண்கற்களின் வரலாற்றில் இது ஒரு சாதனை என தெரிவித்துள்ள நாசா விஞ்ஞானிகள், 45 டிகிரி அளவுக்கு சாய்வாக இந்த விண்கல் வந்ததால் அது பூமியின் வளிமண்டலம் மற்றும் புவியீர்ப்பு சக்தியால் எரிந்து விடாமல் கெமராவில் பதிவானதாக கூறியுள்ளனர்.

## பிரான்ஸில் பணியிடத்தில் முகக் கவசம் கட்டாயம்



பிரான்ஸிலுள்ள பணியிடங்களில் செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து ஊழியர்கள் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு வைரஸ் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதால் அவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள், தங்கள் ஊழியர்களுக்கு முகக் கவசங்களை வழங்க வேண்டும் என்று பிரான்ஸ் தொழிலாளர் அமைச்சர் கூறினார்.

வாய்ப்பிருந்தால் வீட்டிலிருந்தே வேலை செய்யும் நடைமுறையைத் தொடர்ந்து பின்பற்றுமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். பிரான்சில் நாள்தோறும் சராசரியாக சுமார் 1,800 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்படுகிறது.

அங்கு சுமார் 220,000 பேர் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பைடன் அதிகாரபூர்வமாக தேர்வு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜோ பைடன் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்சி மாநாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்ட பைடனுக்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்டன் மற்றும் ஜிம்மி காட்டார், அதே போன்று முன்னாள் இராஜாங்கச் செயலாளர் கொலின் பொவல் ஆகியோரும் தமது ஆதரவை வெளியிட்டனர்.

தற்போதைய ஜனாதிபதி டொனால் டிரம்ப் வெள்ளை மாளிகையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருப்பதாக கிளின்டன் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பேசிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி, மிஷெல் ஒபாமா, டிரம்பை மிகக் கடுமையாக விமர்சித்தார். அவர் ஒரு மிகத் தவறான ஜனாதிபதி என்றார். தலைமை பண்பு, நிலையான போக்குகள் அற்றவர் என்றும், குழப்பங்களை விளைப்பவர் என்றும் சாடினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் கருத்துக் கணிப்புகளில் டிரம்ப்பை விடவும் பைடன் முன்னிலையில் உள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வீடியோ உதவியுடன் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 50 மாநிலங்கள் மற்றும் ஏழு பிராந்தியங்களின் ஜனநாயகக் கட்சி பிரதிநிதிகளும் பைடனுக்கு தமது ஆதரவை வெளியிட்டனர்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் டிரம்ப் உருவாக்கிய குழப்பங்களை சரிசெய்ய ஜோ பைடனுக்கு அனுபவமும் ஆற்றலும் இருப்பதாக ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

77 வயதான பைடன் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். 1988 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளிலும் அந்தப் பதவிக்காக போட்டியிட்டபோதும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக



நியமிக்கப்படுவது இது முதல் முறையாகும்.

இதற்கு முன்னர் பராக் ஒபாமா அரசில் பைடல் துணை ஜனாதிபதியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ட்விட் செய்துள்ள அவர், ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பது தமது வாழ்நாளில் கிடைத்துள்ள மிகப்பெரிய கௌரவம் என குறிப்பிட்டுள்ளார். அவருடன் துணை ஜனாதிபதி பதவிக்கு இந்திய வம்சாவளியினரான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

## காபுல் நகரில் சரமாரி பீரங்கி குண்டு வீச்சு

ஆப்கானிஸ்தான் சுதந்திர தினத்தன்று தலைநகர் காபுலில் இடம்பெற்ற சரமாரி பீரங்கிக் குண்டுத் தாக்குதலி ஜனாதிபதி அஷ்ரப் கானியின் இரு காவலர்கள் உட்பட குறைந்தது மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 101 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது இவ்வாறு நாற்பது ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதில் ஒரு குண்டு ஜனாதிபதி மாளிகை வளாகத்திற்குள் விழுந்துள்ளது.

இதன்போது ஜனாதிபதி மாளிகையில் காவலில் இருந்த மேலும் ஆறு அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

ஆப்கான் அரசு மற்றும் தலிபான்களுக்கு இடையில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருக்கும் நிலையில் இடம்பெற்றிருக்கும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## ஜெர்மனியில் காரை மோதவிட்ட பின்னணியில் 'இஸ்லாமியவாதம்'

ஜெர்மனி தலைநகர் பெர்லினில் தனது கார் வண்டியை மோதவிட்டு 6 பேருக்கு காயம் ஏற்படுத்திய சம்பவத்தை இஸ்லாமியவாதிகளின் செயலாக அந்நாட்டு அரச வழக்கறிஞர்கள் வர்ணித்துள்ளனர்.

“எமது தற்போதைய அறிவுக்கு அமைய அந்த நபர் இஸ்லாமியவாத நோக்கு கொண்டுள்ளார்”என்று அரச வழக்கறிஞர்கள் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய ஈராக் நாட்டைச் சேர்ந்த 30 வயதான ஓட்டுநர் பல வாகனங்கள் மீது மோதிய பின் காரில் இருந்து இறங்கியபோது ‘அல்லாஹு அக்பர்’ என்று சத்தமிட்டதாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த விபத்தில் மூவர் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் உள்ளனர். விபத்தை ஏற்படுத்திய ஆடவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சார்வரி வருடம் ஆனி மாதம் 01நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1441 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை

*அறத்தைச் செய்வதால் வரும் பயன் இது என்று நூல்களைக் கொண்டு மெய்ப்பிக்க வேண்டியது இல்லை. பல்லக்கைத் தூக்கிச் செல்பவனையும் அதில் பயணிப்பவனையும் கண்ட அளவில் பயனை அறியலாம்.*

## புலம்பெயர் இலங்கையர்கள் வழங்க வேண்டிய பங்களிப்பு

இலங்கையில் தொழில் துறைகளுக்கான முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. நாட்டில் தற்போது ஸ்திரமான அரசாங்கமொன்று உருவாகியிருப்பதனால் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் எதுவித தயக்கமுமின்றி இங்கு தொழில் முயற்சிகளில் இனிமேல் ஈடுபட முடியுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக் காட்டியுள்ளார்.

அமைச்சர் விடுத்துள்ள இந்த அழைப்பானது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும், எமது மக்களுக்கு உள்நாட்டிலேயே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏதுவாக அமையுமென்பது உறுதி. இந்த அழைப்பை வெளிநாடுகளில் வாழும் வர்த்தகப் புள்ளிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு முன்வருதல் வேண்டும்.

1983 ஜுலை இனக்கலவரத்துக்குப் பின்னர் எமது நாட்டில் படிப்படியாக உருவெடுத்த உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையில் இருந்து மக்கள் புலம்பெயர்தலும் ஆரம்பமானது. சட்டபூர்வமான முறையிலும், சட்டவிரோதமான வழிகளிலும் இங்கிருந்து மக்கள் வகைதொகையின்றி புலம்பெயரத் தொடங்கினர்.

மேற்கு நாடுகளை நோக்கிய இவ்வாறான புலம்பெயர்வு பல வருடங்களாக தீவிரமாகவே தொடர்ந்து கொண்டிருந்தது. கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, நோர்வே, பிரான்ஸ் உட்பட மேற்குலகில் இலங்கையர்கள் புலம்பெயர்ந்து சென்று தஞ்சமடையாத நாடுகளே இல்லை எனலாம்.

ஆரம்ப காலத்தில் இலங்கையில் யுத்தம் தீவிர நிலைமையில் இருந்ததன் காரணமாக மேற்குலக நாடுகள் இலங்கையர்களை தடுத்து நிறுத்தாமல், அரவணைக்கும் போக்கிலேயே இருந்தன. அதிலும் அந்நாடுகள் வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்குப் புகலிடமளித்து, அவர்களுக்கு 'அகதிகள்' என்ற அந்தஸ்து வழங்கி கொடுப்பனவுகளையும் வழங்கி வந்தன. அங்கு சென்ற வடக்கு, கிழக்குத் தமிழர்கள் படிப்படியாக தங்களை அந்நாடுகளில் நிலைநிறுத்தத் தொடங்கினர். கல்வி, பொருளாதாரத் துறைகளில் தங்களை நன்கு வளர்த்துக் கொண்டனர். அது மாத்திரமன்றி இலங்கையில் வாழ்ந்த தங்கள் உறவினர்களையும் அந்நாடுகளுக்கு அழைத்துக் கொண்டனர்.

இன்று அவர்கள் அகதிகளென்ற அந்தஸ்தில் வாழவில்லை. அந்நாடுகளின் உதவித் தொகையில் வாழ வேண்டிய நிலையிலும் அவர்கள் இப்போது இல்லை. கல்வியிலும் பொருளாதாரத்திலும் அம்மக்கள் நன்றாகவே உச்சத்துக்குச் சென்று விட்டார்கள். அந்நாடுகளின் அரசாங்க மற்றும் அரசியல் துறைகளில் செல்வாக்குச் செலுத்தும்படியாக அவர்கள் தங்களை வளர்த்துக் கொண்டு விட்டனர்.

புலம்பெயர் தமிழர்களில் ஏராளமானோர் தொழில் துறைகளில் பெரும் பிரமுகர்களாகத் திகழ்கின்றனர். உலகின் பல நாடுகளில் தொழில் பேட்டைகளை நடத்தும் அவர்கள் பெருமளவானோருக்கு தொழில் வாய்ப்பையும் வழங்கிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இலங்கைக்கே பெருமை சேர்க்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் பலர் தொழிலதிபர்களாக விளங்குகின்றனர்.

ஆனாலும் அவர்கள் எத்தனையோ நாடுகளில் தொழில் முதலீடுகளை மேற்கொள்கின்ற போதிலும், தமது சொந்த நாடான இலங்கையில் தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உகந்ததான நிலைமையொன்று உருவாகியிருக்கவில்லை என்பதுதான் உண்மை. இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் ஆரோக்கியமானதாக இல்லாததன் காரணமாக புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கமே நிலவி வந்தது. யுத்தம் நிலவிய காலப் பகுதியில் மாத்திரமன்றி, யுத்தத்துக்குப் பின்னரும் கூட இவ்வாறான சந்தேகமும் அவநம்பிக்கையுமே தொடர்ந்தன.

இலங்கையில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு கடந்த கால அரசாங்கங்கள் புலம்பெயர் தமிழர்களுக்கு பகிரங்க அழைப்புக்களை விடுத்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனாலும் இந்த அழைப்புகளினால் பலனேதும் கிடைக்கவில்லை. பாதுகாப்புக்கான உத்தரவாதம் கருதியே புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலீடு மேற்கொள்வதற்குத் தயங்கினர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே கடற்றொழில் அபிவிருத்தி துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள டக்ளஸ் தேவானந்தா, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களுக்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பு வரவேற்கத்தக்கதாகும்.அத்துடன் இலங்கையில் தடைகள் எதுவுமின்றி முதலீடு செய்வதற்கான உத்தரவாதத்தை தன்னால் வழங்க முடியுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். எனவே வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் மக்கள் இந்த அழைப்பை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

இலங்கையானது முப்பது வருட கால யுத்தத்தினால் விபரிக்க முடியாத இழப்புகளைச் சந்தித்த தொரு தேசம் என்பதை மறந்து விட முடியாது. முக்கியமாக வடக்கு, கிழக்கின் பொருளாதாரம் பெரிதும் சீரழிந்திருக்கிறது. இளைஞர்கள், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டியது இன்றைய காலத்தில் முக்கிய தேவையாகும். இது அரசாங்கத்தினால் மட்டும் சாத்தியமானதல்ல. புலம்பெயர் வர்த்தக முதலீட்டாளர்கள் மனம் வைத்தால் இங்கு பலருக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியுமென்பது உண்மை.

editor.tkn@lakehouse.lk

# ஹிஜ்ரி 1442 இஸ்லாமிய புதுவருடம் நாளை உதயம்

இஸ்லாமிய புது வருடமாகிய ஹிஜ்ரி 1442 முஹர்ரம் மலர்கிறது. இறைவனுக்காகவும் அவனது இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்த திருத்தூதுக்காவும் முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்ட அரும் பெரும் தியாகமே ஹிஜ்ரத,; 'துறந்து செல்லல்' என்ற பொருளைத் தாங்கி நிற்கும் இந்த ஹிஜ்ரத் சன் மார்க்க வாழ்வைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமது நாட்டையும், வீட்டையும், சொத்து சுகங்களையும் துறந்து செல்ல சித்தமாயிருக்க வேண்டும் என்பதே ஹிஜ்ரத்தின் தத்துவம்.

ஒரு முஸ்லிமுக்கு தனது உயிரிலும் மேலானது அவருடைய இஸ்லாமிய வாழ்வுதான். அந்த வாழ்வுக்கு பங்கம் ஏற்படுமானால் அவர் எல்லாவித தியாகங்களுக்கும், ஹிஜ்ரத்துக்கும் தயாராகி விடுவார். இது ஹிஜ்ரத் கற்பிக்கும் பாடம் பெருமானார் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் இமாம் ஹூஸைன் (ரழி) அவர்களும், குடும்பத்தினரும் ஆதரவாளர்களும் கர்பலா களத்தில் சிந்திய இரத்தமும் இந்த பயண வேகத்தின் ஒரு பகுதிதான்.

இன்றும் அந்தப் பயண வேகம் தொடர்கிறது. அசத்தியத்துக்கு அடிபணியாத அவர்களின் நெஞ்சுறுதி இந்த அகிலத்தை செந்நிறமாக்கிக் கொண்டிருக்கிறது. மனித குலத்தை சிந்திக்க வைக்கின்றது.

அல்லாஹ் உலகத்தை படைத்து மனிதர்களுக்கு காலங்களை கணித்துக் கொள்வதற்காக பன்னிரண்டு மாதங்களாக ஆக்கினான். இந்த மாதங்களில் சில மாதங்களை சிலதை விட்டும், சில நாட்களை சிலதை விட்டும், மேலும் சில நேரங்களை சிலதை விட்டும் வணக்க வழிபாடுகள் மூலம் சிறப்பாக்கினான். இதன் மூலம் மனிதன் அதிகம் நற்செயல்கள் செய்ய வேண்டும் என்பதும் அவனது அந்தஸ்து அவனது நற்செயல்களால் உயர்த்தப்பட வேண்டும் என்பதும் ஒரே நோக்காகும். இத்தகைய சிறப்பான மாதங்களில் முஹர்ரம் மாதமும் ஒன்றாகும்.

அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டு கூறும் புனிதமான நான்கு மாதங்களில் ஒரு மாதம் முஹர்ரம் மாதமாகும் அல்லாஹ் கூறுகின்றான்.

'அல்லாஹ்விடம் நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை, வானங்கள் மற்றும் பூமியைப் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு புனிதமானவையாகும். இதுதான் நேரான மார்க்கம். இவைகளில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைப்போர் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போன்று நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியாளர்களுடன் இருக்கின்றான் என்பதனை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்' (அல்குர்ஆன் 09:36)

நபி (ஸல் அவர்கள் கூறினார்கள்:

'வானங்களையும் பூமியையும் படைத்தது முதல் காலம் சுழன்று கொண்டிருக்கின்றது. ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் உள்ளன. அவற்றில் நான்கு புனிதமானவையாகும். அதிலும் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக வருகின்ற துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, முஹர்ரம் மாதங்களாகும். அடுத்தது ஜமாதுல் ஊலாவுக்கும் ஷஃபானுக்கும் மத்தியில் இருக்கின்ற ரஜப் மாதமும் ஆகும். (ஆதாரம்: புகாரி)

மேற்குறிப்பிடப்பட்ட ஆதாரங்கள், புனிதமான மாதங்கள் நான்கு என்பதனை தெளிவு படுத்துகின்றது. அவை: துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, முஹர்ரம், ரஜப் எனப்படும் மாதங்களாகும். இம்மாதங்களுக்கு இருக்கக்கூடிய புனிதத்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டும். இம்மாதங்களில் பேணவேண்டிய சில ஒழுங்கு முறைகளை இஸ்லாம் நமக்கு



தெளிவுபடுத்தி தருகின்றது. ஹூரும் என்ற அரபுச்சொல் தடுக்கப்பட்டவை, புனிதம் என்ற பொருள்களை உள்ளடக்கி இருக்கின்றன.

அல்லாஹ் கூறுகின்றான்:

'அல்லாஹ் புனிதப்படுத்தியவைகளை, யார் கண்ணியப்படுத்துகின்றாரோ அதுவே அவரது இரட்சகனிடத்தில் அவருக்கு மிகச் சிறந்ததாகும்' (அல்குர்ஆன் 22:30)

மனிதன் தடுக்கப்பட்ட விடயங்களிலிருந்து முற்ற முழுதாக தவிர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக புனிதமான மாதங்களாகிய இம்மாதங்களில் பேணுதலாகவே இருக்க வேண்டும். எவ்வாறு ஹரத்தின் எல்லைகளின் புனிதத்துவத்தை மீறி பாவம் செய்தால் பன்மடங்கு பாவம் கிடைக்குமோ அதே போன்று புனிதமான இம்மாதங்களில் பாவம் செய்வதென்பது பன்மடங்கு பாவங்களை ஈட்டித் தரும். அதே போன்று இம்மாதங்களில் நன்மை செய்வது பல மடங்கு நன்மைகளையும் ஈட்டித் தரும்.

இம்மாதங்களில் போர் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இறை நிராகரிப்பாளர்கள் போரை முதலில் ஆரம்பித்தால் அதனை தடுப்பதற்காக வேண்டி முஸ்லிம்களும் போர் புரியலாம். இந்த புனிதத்தன்மை, பொதுவாக முஹர்ரம் மாதம் உட்பட ஏனைய மூன்று மாதங்களுக்கும் பொதுவானவையாகும். இவ்வாறு ஒவ்வொரு புனித மாதத்திற்கும் தனிச் சிறப்புக்கள் உள்ளன.

### அரபு வருட கணிப்பீட்டின் முதல் மாதம்!

முஸ்லிம்களின் வருடக் கணிப்பீட்டில் முதல் மாதம் முஹர்ரம் மாதமாகும். உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை ஒன்று சேர்த்து எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். இதனடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபிகளார் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் என்றும் முடிவெடுத்தார்கள்.

அல்லாஹ் நபி மூஸா (அலை) அவர்களை கொடுங்கோல் ஆட்சியாளனாகிய பிர்அவ்னிடமிருந்து காப்பாற்றியது முஹர்ரம் மாதத்தில் தான். இம்மாத்தில் ஏராளமான நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதை கண்டார்கள். நபியவர்கள் அவர்களிடத்தில் நீங்கள் நோற்கின்ற இந்த நோன்பு எந்த நாள் என்று வினவினார். அதற்கு அவர்கள் 'இது ஒரு புனிதமான நாளாகும். இதில் அல்லாஹ் மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சமுதாயத்தினரையும் பிர்அவ்னிடமிருந்து காப்பாற்றினான் மேலும் பிர்அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் கடலிலே மூழ்கடித்தான். இதனால் மூஸா (அலை), அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முகமாக அந்நாளில் நோன்பு நோற்றார்கள். ஆகையால் நாங்களும் நோன்பு நோற்கின்றோம்' என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூஸாவை பின்பற்றுவதற்கு உங்களை விட நாமே தகுதியானவர்கள் என்று கூறி, நபி (ஸல்) அவர்களும் நோன்பு நோற்று பிறரையும் நோன்பு நோற்க ஏவினார்கள்' (ஆதாரம்: புகாரி. முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

'ரமழான் மாத நோன்புக்கு பின் சிறந்த நோன்பு முஹர்ரம் மாத நோன்பாகும். கடமையான தொழுகைக்குப் பின் சிறந்த தொழுகை இரவுத் தொழுகையாகும்' (ஆதாரம்: முஸ்லிம்)

இந்த ஹதீஸில் முஹர்ரம் மாதத்தில் நோற்கின்ற சுன்னத்தான நோன்புகளுக்கு பல நன்மைகள் உள்ளன என்பதனை 'ரமழானுக்கு பின்னர் சிறந்த நோன்பு முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பு' என்ற வரிகளின் மூலம் விளங்கக் கிடைக்கின்றது.

முஹர்ரம் மாதத்தில் நபிகளார் செய்து வந்த, ஏவியவற்றில் ஆஷூரா நோன்பு முக்கியமானதாகும். ஆஷூரா என்பது பிறை கணிப்பீட்டின் படி முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாளாகும். நபிகளார் (ஸல்) மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்வதற்கு முன்னர் மக்காவில் முஹர்ரம் மாத பத்தாவது நாள் ஆஷூரா நோன்பு நோற்று வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஆஷூரா நோன்பு அதற்கு முந்தைய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்று நான் கருதுகின்றேன்'. (ஆதாரம்: முஸ்லிம்)

முந்தைய வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்பதன் பொருள் சிறு பாவங்களையே இங்கு குறிக்கின்றது. மாறாக பெரும் பாவம் செய்தவர்களுக்கு அவர்களது குற்றங்களுக்கு பரிகாரமாக அமைவது தௌபாவாகும்.

மௌலவி
**எம்.யூ.எம்.வாலிஹ்...**
*(அல் அஸ்ஹரி) வெலிகம.*

# எம்.ஜி.ஆர் போன்று பாலாவும் மீண்டெழுந்து வர வேண்டும்

## இன்று கூட்டுப் பிரார்த்தனை



பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் உடல்நிலையில் நேற்று பின்னடைவு ஏற்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் உடல்நலம் பெற வேண்டி கூட்டுப் பிரார்த்தனை செய்ய இளையராஜா, ரஜினிகாந்த், கமல்ஹாசன், வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மான் உள்ளிட்ட திரைத்துறையினர் மற்றும் உலகம் எங்கும் உள்ள இசை பிரியர்களுக்கு இயக்குநர் பாரதிராஜா அழைப்பு விடுத்தார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் உடல் நிலையில் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை நேற்று கூறியமை பலரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

அவர் நலம் பெற வேண்டும் என்று ரசிகர்கள், திரைத்துறை பிரபலங்கள் என பலரும் சமூக வலைத்தளங்களில் தெரிவித்து வருகின்றனர். எஸ்.பி.பிக்காக வீடியோ வெளியிட்ட பாரதிராஜா, கட்டுப்படுத்த முடியாமல் கதறி அழுதார். இந்நிலையில் இயக்குநர் பாரதிராஜா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்திய திரை உலகில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தன் இனிமையான குரலால் மக்களை மகிழ்வித்தும், மொழிகளை வளமைப்படுத்திக் கொண்டும் ஒரு குயில் மூச்சுவிடாமல் இன்றும் நம்மைத் தாலாட்டிக் கொண்டு இருக்கிறது என்றால் அது 'பாடும் நிலா' எஸ்.பி.பிதான்.

தற்போது அவன் கொரோனா தாக்குதலுக்கு ஆட்பட்டு முடக்கப்பட்டுள்ளான் என்று நினைக்கும் போது கண்ணீர் மல்கிறது. அவன் நிலையைக் கண்டு திரையுலக நட்சத்திரங்கள், அரசியல் பிரமுகர்கள், அனைத்து துறைக் கலைஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் வேதனை அடைவதை பார்த்து நெஞ்சம் பதறுகிறது. அன்பை மட்டுமே விதைக்கத் தெரிந்தவன், பண்பாளன், மாபெரும் கலைஞன். அந்த கலைஞன் மீண்டு வர வேண்டும். நாம் மீட்டு வர வேண்டும்.

அதற்காக இயற்கை அன்னையை பிரார்த்திக்கும் வகையில் இளையராஜா, ரஜினிகாந்த், கமல்ஹாசன், வைரமுத்து, ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் அனைத்து திரைப்பட நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள், இயக்குநர்கள், இசைக் கலைஞர்கள், பெப்சி அமைப்பினர், தயாரிப்பாளர்கள், திரையரங்க உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள், ஊடக கலைஞர்கள் மற்றும் உலகமெங்கும் உள்ள இசை ரசிகர்கள் உள்ளிட்ட அனைவரும் 20.08.2020 (இன்று வியாழக்கிழமை) இந்திய நேரப்படி மாலை 6 மணிக்கு தங்களுக்குப் பிடித்த எஸ்.பி.பி பாடலை ஒலிக்க விட்டு அவர் பூரண நலம் பெற பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டுப் பிரார்த்தனைக்கு உலகமெங்கும் வாழும் மக்களை அன்புடன் அழைக்கிறேன். பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் உடல்நலம் குன்றி வெளிநாட்டில் சிகிச்சையில் இருந்த போது, இந்த மாதிரி ஒரு கூட்டுப் பிரார்த்தனை செய்தோம். அவர் அதிலிருந்து மீண்டு தமிழகத்தில் காலடி எடுத்து வைத்தார்.

அதேபோல் இந்தக் கூட்டுப் பிரார்த்தனை மூலம் குரலில் பொன்மனச் செம்மலான எஸ்.பி.பியை மீட்டெடுப்போம் வாருங்கள். இனம், மொழி, மதம் கடந்து ஒரு மகா கலைஞனை மீட்டெடுப்போம். அவன் குரல் காற்றில் மீண்டும் ஒலிக்க வேண்டும். ஒன்று கூடுவோம். பிரார்த்திப்போம்."

இவ்வாறு அந்த அறிக்கையில் பாரதிராஜா தெரிவித்துள்ளார்.

# பிரணாப் முகர்ஜியின் உடல்நிலை கவலைக்கிடம்

பிரணாப் முகர்ஜியின் உடல்நிலை தொடர்ந்து மோசமான நிலையில் உள்ளதாகவும் அவரது நுரையீரலில் தொற்று ஏற்பட்



டுள்ளதாகவும் டெல்லி இராணுவ மருத்துவமனை தெரிவித்துள்ளது. 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்தவர் பிரணாப் முகர்ஜி (வயது 84). இவருக்கு கடந்த 10ஆம் திகதி உடல்நிலை பாதிக்கப்பட்டதை அடுத்து டெல்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மூளையில் இருந்த இரத்த கட்டி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதையடுத்து அவர் கோமா நிலையில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். மேலும் அவருக்கு கொரோனா தொற்றும் உறுதியானது. இந்த நிலையில் இதுகுறித்து டெல்லி இராணுவ மருத்துவமனை கூறுகையில், பிரணாப் முகர்ஜியின் உடல்நிலையில் முன்னேற்றம் எதுவும் இல்லை. தொடர்ந்து கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.

அவரை மருத்துவ நிபுணர்கள் குழு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. அவருக்கு தொடர்ந்து செயற்கை சுவாசம் கொடுக்கப்படுகிறது. அவரது நுரையீரலில் புதிதாக தொற்று ஏற்படத் தொடங்கி விட்டது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த நிலையில் பிரணாபின் மகன் அபிஜித் முகர்ஜி தனது ட்விட்டர் பக்கத்தில் கூறுகையில் தந்தை பிரணாப்பின் உடல்நிலையில் முன்னேற்றம் இருப்பதாக தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் சேவை புரிவேன்

நாட்டை ஆட்சி செய்யும் அரசில் நான் ஒரு பங்குதாரன். எனக்குள்ள வாய்ப்புக்களையும் வசதிகளையும் பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும். அதனூடாக மக்கள் மத்தியில் எனது பெயர் நிலைத்து நிற்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும் என்கிறார் தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன். அவருடனான பேட்டியின் முழுவிபரம் வருமாறு...

**கேள்வி: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினூடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு தபால் தொடர்புகள் வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக பதவியேற்றிருக்கிறீர்கள். முதலில் உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.**

**பதில்:** நான் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். எனது விடாமுயற்சியும் இலக்கை நோக்கிய பயணமும், என்னை ஒரு முதுகலைமாணிப் பட்டதாரியாக்கின. பின்னாளில் சட்டக்கல்லூரிக்குள் நுழைந்து எல்.எல்.பியையும் நிறைவு செய்து கொண்டேன். நான் தனியார் வகுப்பு நடத்தி வந்தேன். அதனூடாக ஆயிரமாயிரம் மாணவர்கள் பட்டதாரிகளாகினர்.

பேச்சுத்திறனாலும், செயல் திறனாலும் மக்களை கவர்ந்திழுக்கும் ஆற்றல் என்னில் நிறைந்திருக்கிறது. அதனால் எனது பெயர் இளவட்டங்களின் மத்தியில் பெரிதாக பேசப்பட்டதோடு, நிலைத்தும் நின்று வருகிறது. அது நாளடைவில் விசாலமாகி விட்டது. அதனால் 2015ம், 2020ம் ஆண்டு தேர்தல்களில் நான் வெற்றி பெற்றேன்.

**கேள்வி: இந்த இராஜாங்க அமைச்சர் பதவியினூடாக மக்களுக்கு எவ்வாறான சேவைகள் செய்யலாம் என நினைக்கிறீர்கள்?**

**பதில்:** தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக தொழில் அபிவிருத்தித்துறை மக்களோடு இணைந்து, மக்களுக்குச் சேவை வழங்கும் துறையாகும். அது உலகளாவிய ரீதியில் விரிவுபட்டிருக்கிறது. 1879ஆம் ஆண்டில் இலங்கையை ஆண்ட டச்சுக்காரர்கள் அதனை ஆரம்பித்து வைத்தார்கள். இப்போது அது இரண்டு நூற்றாண்டுகளை கடந்து திணைக்களமாக பரிணமித்துள்ளது, அது தபால் மாஅதிபரின் கீழ் இயங்கி வருகின்றது. இதன் கீழ் நாடு பூராவும் 653 தபாற் கந்தோர்களும். 3410 உப தபாற் கந்தோர்களும் மக்களுக்கு சேவை வழங்கி வருகின்றன. 26,000 ஊழியர்கள் இவற்றில் பணிபுரிகிறார்கள். அவை வழங்கி வருகின்ற சேவைகளை காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். அவை வழங்கி வருகின்ற சேவைகள் ஒவ்வொன்றும் மக்களை விரைவாக சென்றடைய வேண்டும். அத்தோடு அவை மக்களுக்கு இலாபகரமானதாகவும் இருக்க வேண்டும். தபாற்திணைக்களம் சேவை வழங்கும் நிறுவனமாக மாத்திரம் இருக்காமல் அது இலாபம் தேடும் நிறுவனமாக மாற்றம் பெற வேண்டும்.

**கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் சேவையை மேம்படுத்த என்ன செய்வதாக உத்தேசம்?**

**பதில்:** மட்டக்களப்பு மாவட்டத்தை பேச்சு வழக்கில் இரண்டு பிரிவுகளாக பிரித்துப் பார்க்கிறோம். அவை படுவான்கரை, எழுவான்கரை என்பனவாகும். படுவான்கரை மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப் பகுதி. அப்பகுதி 30 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டு யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக கடந்த கால அரசுகள் அப்பகுதியின் அபிவிருத்தியையும், மக்களின் தேவைகளையும் கருத்திற் கொள்ளவில்லை. அப்பகுதியில் புதிய உபதபாற் கந்தோர்கள் உருவாக்கப்பட வேண்டும். சில உப தபாற் கந்தோர்களை தேவைக்கேற்றாற் போல தரமுயர்த்த வேண்டும். இன்னும் சில பிரதேசங்களில் தபாற் கந்தோர்கள் போதிய கட்டட வசதியின்றி இயங்கி வருகின்றன. அவற்றுக்கு நிரந்தரமாக நல்ல வசதியுடன் கூடய கட்டடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தபாற் கந்தோரிலும் பெக்ஸ் வசதி, போட்டோ பிரதி வசதி என்பன இருக்க வேண்டும். உன்னிச்சை பகுதியில் இருக்கும் ஒருவர் அரசு வழங்கி வருகின்ற தனது சகாய நிதிப்பணத்தைப் பெற கன்னன்குடாவுக்கு வர வேண்டியிருக்கிறது. தள்ளாத வயதில் இது முடியாத காரியம். மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வண்ணம் தபாற் கந்தோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

## 'மக்களுக்கு சிறந்த பணியாற்றும்படியாக தபால் திணைக்களம் மாற்றியமைக்கப்பட வேண்டும். யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட படுவான்கரை அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்'



**கேள்வி: உங்களது அமைச்சின் கீழ் ஊடகத்துறையும் வருகின்றதல்லவா?**

**பதில்:** ஊடகத்துறையில் உள்ளவர்களுக்கு ஓய்வூதியம் ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களது தரத்தை மேம்படுத்த ஊடக கற்கை நெறிகள், பயிற்சிகள் என்பன வழங்கப்படும். அவர்களோடு நெருக்கமான உறவை எமது அமைச்சு பேணும்.

**கேள்வி: நீங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினூடாக அரசியலுக்கு வந்தீர்கள். அதிலிருந்து சென்று இப்போதைய இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். இதுபற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?**

**பதில்:** கட்சி அரசியல் என்பது மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றும் பயணத்திற்கு துணை புரியும் ஒரு சாதனம். அந்தச் சாதனத்தினால் நமது தேவையை அடைய முடியாதென நமக்குத் தெரியும் போது எம்மால் அப்பாதையில் பயணிக்க முடியாது.

அப்படியாயின் மாற்று வழியொன்றைத் தேடவேண்டும். எந்த மக்கள் என்னைத் தெரிவு செய்தார்களோ அந்த மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே நான் இவ்வாறான பாதையைத் தெரிவு செய்தேன். மக்கள் எத்தனை வருடங்களுக்கு துன்பங்களையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்வது? நன்றாகச் சிந்தித்தால் நான் தெரிவு செய்த பாதை சரியானது.

**கேள்வி: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக இருக்கிறார்களா?.**

**பதில்:** ஆம் நிச்சயம். காலமும் சூழலும் கனிந்து வருகின்றன. அன்று மஹிந்த ராஜபக்ஷஅவர்கள் 13ஐயும் 13 பிளஸ் ஐயும் தருவதாக கூறியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளை நம்பியிருந்தது. அவர்கள் வழங்கும் போது வாங்கிக் கொள்ள வேண்டும். இது தெரியாத அரசியல் கட்சிகளிடம் நமது கதை எடுபடாது. காலத்திற்கும் சூழலுக்கும் எற்றவாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பாதையை வகுத்து பயணிக்கவில்லை. இதனால் தான் அனைத்து மக்களும் அதனை வெறுத்து வருகிறார்கள்.

**கேள்வி: தமிழ்த் தேசியம், புதிய அரசியலமைப்பு, பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்களுக்குத் தீர்வு என்பதெல்லாம் சாத்தியமா? இது பற்றிய உங்களுடைய கருத்து என்ன?**

**பதில்:** ஒன்றை மட்டும் நம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தீர்வு நாட்டு மக்களுக்கானது. ஆதலால் அத்தீர்வை இந்த நாட்டுக்குள்ளே தேட வேண்டும், அடையவும் வேண்டும். இவை அனைத்தையும் ஜனாதிபதி கோட்டாபயவாலும், பிரதமர் மஹிந்தவாலும் நிறைவேற்ற முடியும்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஒரு பெரிய காரியமில்லை. எல்லாம் நம்மவர்களின் அணுகுமுறையில் தங்கியுள்ளது. அணுகுமுறைகள் சாணக்கியம் நிறைந்தவையாகவும் இலகுவில் அடையக் கூடியதாகவும் இருப்பது அவசியம், இதைத் தேடிக் கண்டு கொள்ள வேண்டும்.

**கேள்வி: அம்பாறை மாவட்டத்தில் இப்போது தமிழ்ப்பிரதிநிதித்துவம் இல்லாதிருக்கிறது. தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கலையரசனின் பெயரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவு செய்து தேர்தல் ஆணையாளருக்கு வர்த்தமானி அறிவித்தலுக்காக அனுப்பி வைத்திருந்தது. பின்பு அதனை கூட்டமைப்பு இடைநிறுத்தியது. இப்போது அது மாவை சேனாதிராஜாவுக்கு தேவைப்படுகிறது. இது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**பதில்:** இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த பிரச்சினை, இதில் நான் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு கேள்வி முன்வைக்கப்படும் போது ஒரு அபிப்பிராயத்தையும் கூறியாக வேண்டும். ஒரு தமிழ் மாவட்டம் தமிழ்ப் பிரதிநித்துவம் இல்லாதிருக்கும் போது அதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

**கே: தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?**

**பதில்:** என்னை ஆதரித்து வெற்றி பெறச் செய்த அனைத்து மக்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். தபால் சேவை மற்றும் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி அமைச்சின் சேவைகளில் நல்ல முன்னேற்றம் காண வேண்டும். அதற்கு அயராது பாடுபடுவேன். எல்லோருடைய ஒத்துழைப்பும் எனக்கு கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

## 'மக்கள் எத்தனை வருடங்களுக்கு துன்பங்களையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்வது?மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நான் பாடுபடுவேன்'



## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் பேட்டி

### பேட்டியில் இடம்பெற்ற தவறு

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் எமது 16.08.2020 வாரமஞ்சரிக்கு பேட்டியொன்றை வழங்கியிருந்தார். "யாழ் மாவட்டத்திலிருந்து அங்கஜன் இராமநாதன் எம்.பி தோன்ற முடியுமாயின், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சேவை செய்ய முடியுமாயின் அதே பாணியை வியாழேந்திரன் தேர்ந்தெடுப்பது தவறாகாது" என்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கூறியதாக அப்பேட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இராஜாங்க அமைச்சரால் அவ்வாறு கூறப்படவில்லை. அவரால் கூறப்படாத விடயமொன்று அப்பேட்டியில் இடம்பெற்றமைக்காக வருந்துகிறோம்.

# மட்டக்களப்பு நெற்காணிகளில் மாற்றுப் பயிர்களும் செய்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2020_2021 காலப் பகுதிக்கான பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள 67932.1 ஹெக்டேயர் வயல் நிலங்களுக்கான மானிய உரத்தைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான முன்மொழிவு விவசாய அமைச்சின் தேசிய உரச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.



மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிராஜுதீன் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்க அதிபர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இம்முறை அரசாங்கத்தினால் வழங்கப்படும் மானிய உரத்தின் போது இரசாயனப் பசளையுடன் சேர்த்து சேதனப் பசளையும் வழங்கப்படவுள்ளதாகவும், சுகாதார உணவு மேம்பாட்டிற்காகவும், நஞ்சற்ற உணவுகளை பெற்றுக் கொள்வதற்காகவும், மண்வளத்தினைப் பாதுகாத்து சுற்றுச் சூழல் பாதுகாப்பினை உறுதி செய்யும் முகமாகவும் ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதற்காக சேதனப் பசளையைப் பயன்படுத்த விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கடந்த பெரும்போகத்தின் போது மட்டக்களப்பில் நெற்செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காப்புறுதித் தொகை நட்டஈடாக சுமார் 301 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு வருவதாகவும், அதில் 90 வீதமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு முடிவடைந்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

இது தவிர, இம்முறை பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நெற்காணிகளில் சுமார் 750 ஹெக்டேயர் நிலத்தில் நெல் தவிர்ந்த மாற்றுப் பயிர்களான உழுந்து, சோளம், நிலக்கடலை மற்றும் எள் போன்ற பயிர்களை செய்கை பண்ணுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

### மானிய உர விநியோகத்தில் சேதனப் பசளை விநியோகம்

மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. ஜெகன்னாத், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ. பேரின்பராஜா, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஆர். சிவனேசன், விவசாய காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் எம். பாஸ்கரன், நீர்பாசன திணைக்கள திட்ட முகாமையாளர்கள், கமநல பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளென பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

எஸ்.எஸ்.அமிர்தகழியான்...

# கால்நடைகளின் இருப்பிடமாக மாறியுள்ள திக்கோடை ஆரம்ப பிரிவு வைத்தியசாலை!



மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேசத்திலுள்ள திக்கோடை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப பிரிவு வைத்தியசாலை கட்நத மூன்று வருடங்களாக திறக்கப்படாது பற்றைக்காடாகவும் கால்நடைகளின் இருப்பிடமாகவும் காட்சியளிக்கின்றது. இதனால் இப் பிரதேசத்தில் வசிக்கும் பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வைத்திய சேவையை பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

"ஒரு வைத்தியசாலையை நிர்மாணித்து ஆடு, மாடுகள் தங்குகின்ற இருப்பிடமாக கைவிட்டுள்ளனர். பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நோய் வந்தால் இங்கிருந்து15 கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்குத்தான் செல்லவேண்டும். இங்கேயிருந்து இரவில் நோயாளிக ளைக்கொண்டு செல்வதற்கு அவசரத்துக்கு வாகனமும் கிடைக்காது" என்று திக்கோடை மக்கள் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டு கட்டப்பட்ட இந்த வைத்தியாலையைத் திறந்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என திக்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் வி.சசிகரன் கூறினார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு இங்கு நிர்மாணிக்கப்பட்ட குறித்த வைத்தியசாலையானது. 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் அவசரஅவசரமாக அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா அன்றே மூடப்பட்ட திக்கோடை ஆரம்ப வைத்தியசாலையானது மூன்று வருடங்களாகியும் இன்னும் மக்கள் சேவைக்காக திறக்கப்படாதுள்ளது. இதனால் இங்குள்ள பின்தங்கிய கிராமங்களான திக்கோடை, தும்பங்கேணி, இளைஞர் விவசாய வீட்டுத்திட்டம், வம்மியடியூற்று, சுரவணையடியூற்று, களுமுந்தன் வெளி, 38நவகிரி, 39ஆம் கிராமம், செல்வாபுரம் போன்ற கிராமங்களின் மக்கள் வைத்திய சேவைக்காக இங்கிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள களுவாஞ்சிகுடி ஆதாரவைத்திய சாலைக்கே செல்ல வேண்டியுள்ளது. காலையில் ஆறு மணிக்கு அரச பேரூந்தை எதிர்பார்த்து காத்திருந்து களுவாஞ்சிகுடி வைத்தியசாலைக்கு செல்வதற்க்குள் அம்மக்கள் படும் துன்பம் அதிகம்.

குடிநீர், மின்சாரம், வீதி அபிவிருத்தி, போக்குவரத்து என பல்வேறு அடிப்படை வசதிகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத மக்களும் இங்குள்ளனர். திடீரென்று ஏதோவொரு வீதி விபத்து ஏற்பட்டால் அவர்களை விரைவாக முதலுதவி சிகிச்சையளித்து முறையாக கொண்டு செல்லக் கூட வசதியற்றவர்களாக திக்கோடை கிராம மக்கள் உள்ளனர். ஆரம்ப பிரிவு வைத்தியசாலை ஒன்று வளமோடு இருந்தும் அந்த வைத்தியசாலையினால் பயன் ஒன்றுமில்லாது இருக்கின்றனர்.

இது தொடர்பில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் யோ.பிரசன்னா கூறுகையில் '2018 ஆம் ஆண்டு இந்த ஆரம்ப பிரிவு வைத்தியசாலையை நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்த அரசியல்வாதிகள் பேருக்காகவும், புகழுக்காகவும் திறந்தார்களே தவிர வைத்தியசாலை தொடர்ந்து இயங்குவதற்குரிய வசதிகளை ஏற்பத்தி தருவதற்கு தவறி விட்டார்கள். இப்போது இந்த வைத்தியசாலை பாழடையும் நிலையில் இருக்கின்றது"என்றார்.

செ.துஜியந்தன்...
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

மீரிய பெத்தை

# மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிய வீடுகள்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

மீரியபெத்தை மண்சரிவுப் பிரதேசத்திற்கு அண்மையில் வசித்து வரும் 132 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் வகையிலான வேலைத் திட்டத்தினை ஹல்துமுள்ளை இடர் முகாமைத்துவப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இப் புதியவீடுகளை நிர்மாணிப்பதற்கான காணித் துண்டுகளும், அருகாமையிலுள்ள பெருந்தோட்டமொன்றிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இடர் முகாமைத்துவப் பிரிவினரால் வீடொன்று பன்னிரு இலட்சம் ரூபா செலவில், 132 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.



பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகமையின் உத்தரவிற்கமைய ஹல்துமுள்ளை பிரதேச செயலாளர் சுனேத் ஜினேந்திரசேனவின் வழிநடாத்தலில் மேற்படி வீடமைப்புகள் இடம்பெறவுள்ளன. மீறிய பெத்த மண்சரிவு அனர்த்தம் 2014 நவம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்றது. இச்சம்பவத்தில் 37 பேர் பலியாகியிருந்ததுடன் 75 குடியிருப்புக்கள் சேதமாகியுள்ளன.

இவர்களுக்கான வீடமைப்புகள் நிறைவுபெற்று, அவ்வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அப்பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள மண்சரிவு அபாயப் பிரதேசத்தில் மேலும் 132 குடும்பத்தினர் இருந்து வருகின்றனர்.

இவர்கள் தமக்கான வீடுகளை அமைத்துத் தருமாறு கோரி பல்வேறு போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் கடந்தகாலங்களில் மேற்கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாதையை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை



கொஸ்லந்தைப் பகுதியின் பூனாகலை, பெட்டிகலை, கபரகலை, கல்போக், நாவுலை போன்ற பகுதிகளுக்கு செல்லும் பாதை குணடும் குழியுமாக காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் பல்வேறு அவலங்களை அனுபவித்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஆறு கிலோமீற்றர் கொண்ட இப்பாதை குண்டும் குழியுமாகவே காட்சி தருகின்றது. இந்த பாதை வழியாகச் செல்லும் பஸ் அடிக்கடி பழுதடைவதால் பஸ் சேவைகளும் சீராக இடம்பெறுவதில்லை. இதனால் பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு தேவைகளுக்காக கொஸ்லந்தை நகருக்குச் செல்லும் பெருந்தோட்ட மக்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

ஆகவே, இப் பாதையை சீரமைத்து கிரமமான பஸ் சேவையையும் முறையாக நடாத்தும்படி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுகின்றனர்.

# கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் கைது



**(ஹற்றன் சுழற்சி நிருபர், நோட்டன்பிரிஜ்ட் நிருபர்)**

நாவலப்பிட்டி பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த ஒரு தொகை கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் நேற்றுமுன்தினம் மாலை குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சோதனை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். அத்தோடு, இவர்களிடமிருந்து 34500 ரூபாய் பணத்தொகையும் மீட்கப்பட்டுள்ளது.



கைது செய்யப்பட்டவர்கள் நாவலப்பிட்டி பகுதியை சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் நீண்ட காலமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை மேலதிக விசாரணையின் பின்னர் நாவலப்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சுத்தமான குடிநீரை இடையூறு இன்றி விநியோகிக்க நடவடிக்கை எடுப்பேன்

## நீர் விநியோக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சுத்தமான குடிநீரை இடையூறு இன்றி அனைவருக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பேன் என நீர் விநியோக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர் இரத்தினபுரி பிரதேசத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின் போதே அவர் நே ற்று இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

குடிநீர் மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது. அதனை இடையூறு இன்றி ஒவ்வொரு வீட்டுக்கு விநியோகிக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். கல்வி, சுகாதாரம் மின்சாரம் போன்றே குடிநீரும் மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது. எனவே குடிநீரை நாட்டிலுள்ள சகல மக்களும் குறைவின்றி பயன்படுத்தவும், பருகவும் சகல வீடுகளுக்கு குடிநீர் விநியோகிக்க என்னால் முடிந்த சகல நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.பொது மக்களுக்கும் உரிய சேவைகளை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவான உத்தரவுகளை வழங்கியுள்ளார். எனவே அவரது பணிப்புரைகளுக்கமைய குடிநீரையும் நாட்டின் சகல குடிமக்களுக்கும் பயன்பெற விநியோகிக்க பணியாற்றுவேன் என அவர் தெரிவித்தார்.



# 'அதிரும் என் இருதய மொழி' கவிதை நூல் வெளியீட்டு விழா







**நுவரெலியா தினகரன் நிருபர்**

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் மாணவ பயிலுனர் பிரான்சிஸ் திமோதிஸ் எழுதிய அதிரும் என் இருதய மொழி எனும் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொட்டகலை ரிசி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டதுடன், சிறப்பு பிரதிகளையும் வழங்கி வைத்தார்.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் கிங்ஸ்லி சந்திரலேகா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல எழுத்தாளர்களும் இலக்கிய துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றது.





பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள் பெருந்திரளானோர் இதில் கலந்துகொண்டதையும் படங்களில் காணலாம்.



மாத்தளை நகரில் அண்மையில் ஏற்பட்ட விபத்தினால் கால் முறிந்து வீட்டில் இருந்து சிகிச்சை பெற்றுவரும் தினகரன் மாத்தளை சுழற்சி நிருபர் எம்.சதுர்தீனை, இ.தொ. காங்கிரஸ் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் எம்.சிவஞானம் சந்தித்து நலம்விசாரித்த போது எடுக்கப்பட்ட படம்.

# சதுப்பு நிலங்கள் தரைக்காணியாக மாற்றப்படுவதால் உயிரியல் பல்வகைமைக்கு அச்சுறுத்தல்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

வயற்காணிகள், சதுப்பு நிலங்களில் அதிகளவில் மண் நிரப்பப்பட்டு தரைக் காணியாக மாற்றப்பட்டுவருவதால் பாரியளவு சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதுடன் உயிரியல் பல்வகைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக தேசிய வனப் பாதுகாப்பு சங்கம் தெரிவிக்கிறது.

தேசிய வனப் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் அதீக் நசீர் இதுதொடர்பாக நேற்று கண்டியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வயற்காணிகளும் சதுப்பு நிலங்களும் அதிகளவில் மண் நிரப்பப்பட்டு தரைக் காணியாக மாற்றப்பட்டதால் நந்தை , ஊர்ந்து செல்லும் விலங்கினங்கள், சதுப்பு நில மீன் இனங்கள், வண்ணாத்தி இனங்கள், கொக்கு இனங்கள், மீன்கொத்தி போன்ற சதுப்பு நிலங்கள் மற்றும் நீர் நிலைகளை அண்டி வாழும் விலங்கினங்கள் பாரிய அளவில் அருகி வருகின்றன.

அதுமட்டுமல்லாது ஊற்றுநீர் மற்றும் நிலக்கீழ் நீர் வளம் என்பன அருகி வருவதாகவும் இதனால் தேசிய ரீதியில் நீர் பற்றாக் குறை ஏற்பட இடமிருக்கின்றது.

அதே நேரம் சுற்றாடலில் வெப்ப அதிகரிப்பு ஏற்பட்டுவருகின்றது. எனவே சதுப்பு நிலங்கள் மற்றும் வயற்காணிகளை நிரப்பி தரைக்காணியாக மாற்றும் விடயத்தில் மிக அவதானப் பேணப்பட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.



# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வியியலாளர்கள் பிரதான பங்களிப்பு



(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கல்வியியலாளர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அந்த வகையில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவதாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழத்தில் முதன் முறையாக கலைப் பீட தலைமைப் பேராசிரியர்களாக நியமனம் பெற்றிருந்த தமிழ்த் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா தமிழ்த் துறை தலைமை பேராசிரியராகவும் மற்றும் புவியியல் துறையின் தலைமை பேராசிரியராக நியமனம் பெற்ற எம்.ஐ.எம். கலீல் ஆகியோரையும் பாராட்டி கெளரவிக்கும் வைபவம் புதன் கிழமை (19) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக தமிழ், கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி றமீஸ் அபூபக்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கல்வியாளர் ஒருவர் தனது தொழிலுடன் மற்றும் நின்று விடாது, மேற்படிப்புகளை மேற்கொள்வதன் மூலம் உலகளாவிய ரீதியில் பெரும் செல்வாக்கைப் பெறுவதோடு உயர்ந்த தொழில் வாய்ப்புகளையும் பெற முடியும்.

இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கி வரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், சர்வதேச மட்டத்தில் ஒரு முன்மாதிரியான பல்கலைக்கழகமாக மாறி இலங்கையின் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றது.

இப் பல்கலைக்கழகம் நாட்டின் உயர் கல்விற்கு பெரும் பங்காற்றி வருவதனை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு இரு பேராசிரியர்களும் காரண கருத்தாக செயற்பட்டதோடு, பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு இது வரை காலமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை ஒவ்வொருவரும் முன்மாதிரியாக பின்பற்ற வேண்டும். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தலைமை பேராசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோர், பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிப் படியின் மைல் கல்லாகும் என்றார்.

தலைமை பேராசிரியர்களான றமீஸ் அப்துல்லா மற்றும் எம்.ஐ.எம். கலீல் ஆகியோருக்கு உபவேந்தர் பேராசிரிர் எம்.எம்.எம். நாஜிம் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பதிவாளர் எச் அப்துல் சத்தார் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரண்டு நாடகங்களுக்கான பூஜையிடும் ஆரம்ப நிகழ்வு

"கிரைம் எழுத்தாளர்" "கலைஞர்" மொழிவாணனின் "சந்தேக கனவுகள்" எனும் சமூக நாடகத்துக்கான ஆரம்ப பூஜையும் கலையுலகில் 47வது ஆண்டு நிறைவையொட்டி சிலோன் யுனைடெட் ஆட்ஸ் ஸ்டேஜ் மேடையேற்றும் "கலாபூஷணம்"K.செல்வராஜனின் "சுஜாதாவின் துள்ளுவதோ இளமை" எனும் நகைச்சுவை நாடகத்துக்கான ஆரம்ப பூஜையிடும் நிகழ்வும் எதிர்வரும் ( (ஞாயிற்றுக்கிழமை) 23/08/2020 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு கொழும்பு 11, செட்டியார் தெரு, அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் இரண்டு நாடகங்களில் நடிப்பவர்களுடனும் இன்னும் பல கலைஞர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

கலைஞர்களான "கலாபூஷணம் G.J.ராஜ், I.T.N புகழ் நந்தகுமார், K.ஈஸ்வரலிங்கம், "கலைச்செல்வி" மாகரட், "நடிகை" மல்லிகாகீர்த்தி, "நடிகர்" சசிகுமார், எஸ். சரவணா, "நடிகர்" தேவர்முனிவர், விஜேய் "கலாபூஷணம்" வீரபுஸ்பநாதன், "நடிகர்" கலைஞ்ரீ ஞ்ரீபாலன், பொன். பத்மநாதன் ஆகியோர் இந்த இரு நாடகங்களிலும் நடிக்கின்றனர்.



**திருகோணமலை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடற்கரைப் பிரதேசங்களை தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைய திருகோணமலை ஒல்லாந்தர் குடா கடற்கரை பகுதியை தூய்மைப்படுத்துவதில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம். (தம்பலகாமம் நிருபர்)**


**பொது அட்டோணிதத்துவ பத்திரம் இரத்து செய்தல்**

பிரதானவீதி, தம்பிலுவில்-02, அம்பாறை மாவட்டம் கணபதிப்பிள்ளை தயாராணி (தேசிய அடையாள அட்டை இலக்கம் 688422302V) ஆகிய நான் சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு A.H. சமீம் அவர்களால் 2012/08/08 ம் திகதி நிறைவேற்றப்பட்ட 4280ம் இலக்கமுடைய பொது அட்டோணிதத்துவப் பத்திரத்தின்மூலம் பிரதானவீதி, தம்பிலுவில்-01, அம்பாறை மாவட்டம் கணபதிப்பிள்ளை - ஞானலிங்கம் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 571501406V) என்பவரை எனது பொது அட்டோணிதத்துவக்காரராக நியமித்திருந்தேன். தற்போது குறித்த பொது அட்டோணிதத்துவ பத்திரத்தை இரத்து செய்துள்ளேன் என்றும் இதன்படி கணபதிப்பிள்ளை - ஞானலிங்கம் என்பவரால் எனது சார்பாக குறித்த பொது அட்டோணிதத்துவத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் எந்த செயலும் செல்லுபடியற்றதாகும் எனவும் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல எனவும் ஸ்ரீ லங்கா ஜனநாயக குடியரசிற்கும், பொதுமக்களுக்கும் இன்று அறிவிக்கின்றேன்.



பாதுகாப்பு அமைச்சு

**இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்**

**பதவி வெற்றிடம்**

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி: ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் (01 வெற்றிடம்)**

**மாதாந்த கொடுப்பனவு:**
அடிப்படை சம்பளம் ரூ. 46,406.00 + வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூ. 7800.00 = ரூ. 54,206.00

**கல்வி தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் கற்கைகள்/ பாதுகாப்பு கற்கைகள்/புலனாய்வு சேவைகள் நிறுவனம் தீவிரவாதம்/சமூகவியல் தொடர்பான பட்டம் மற்றும் பட்டப்பின் கல்வி பட்ட டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்:**
ஆராய்ச்சி தொடர்பான துறையில் பெற்றுக்கொண்ட ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 21 வயதிற்கும் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்

**சேர்த்துக்கொள்ளும் முறை:**
தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**2. பதவி: ஆராய்ச்சி உதவியாளர் (01 வெற்றிடம்)**

**மாதாந்த கொடுப்பனவு:**
அடிப்படை சம்பளம் ரூ. 22,240.00 + வாழ்வாதாரக் கொடுப்பனவு - ரூ. 7800.00 = ரூ. 30040.00

**கல்வி தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் கற்கைகள்/ பாதுகாப்பு கற்கைகள்/புலனாய்வு சேவைகள் நிறுவனம்/தீவிரவாதம்/சமூகவியல் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்:** பதவிக்குரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் விசேட தகுதியாக கருதப்படும்.

**வயது:** 18 வயதிற்கும் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல். வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை:**
தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சையில் பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

- அனைத்து விண்ணப்பதாரிகளும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினத்தில் மொழித் திறனை பரீட்சிப்பதற்காக 30 நிமிட எழுத்துப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.
- மேற்படி பதவிகளுக்குரிய தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்ப பத்திரத்தினை 2020.09.03 தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இலக்கம் 15/5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு-03 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.
- கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் தான் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட வேண்டியதோடு உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென்பதை அறியத் தருகின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு **www.defence.lk** இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்

**செயலாளர், பாதுகாப்பு அமைச்சு,**
**இலக்கம் - 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு-03**



**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2019 நவம்பர் 27ஆம் திகதிய 2151/29ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி III ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : சூரியவெவ |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 110, நமடகஸ்வெவ |
| கிராமம் | : நமடகஸ்வெவ |
| ஆரம்ப வரைபட இல. | : இ.கி.வ. 4, பிற்சேர்க்கை இல. 324, தாள் இல. 719 |
| துண்டு இலக்கம் | : துண்டு ஈ4558 - ஈ4596 (23 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : 0.4572 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்**
**சூரியவெ.**

**பிரதேச செயலகம்,**
**சூரியவெவ.**
**21.11.2019**



சீட்டிழுப்பு இலக்கம் 695
திகதி 2020/08/18
உத்தியோகபூர்வ முடிவுகள்
நீரோகா
NLB

லக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 17 28 47 62

| | பரிசு கட்டமைப்பு | பரிசு தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 1,000,000/- | 0 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 10,000/- | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 2,000/- | 72 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்களுடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 200/- | 331 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100/- | 3,692 |
| 6ம் பரிசு | 1 இலக்கத்துடன் லக்கினம் பொருந்துமாயின் | ரூ. 60/- | 4,829 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20/- | 52,955 |
| 8ம் பரிசு | லக்கினம் மட்டும் பொருந்துமாயின் | ரூ. 20/- | 19,735 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசு தொகை ரூ. 2,372,940.00
அடுத்த சுப்பர் பரிசு ரூ. 16,879,846.50
தேசிய லொத்தர் சபை



18.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 759,294
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 139,314,325.68
ரூ. 107,570,585.68 சுப்பர் பரிசு 01 ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 25
NLB



தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
திகதி - 2020/08/18
சீட்டிழுப்பு இலக்கம் - 304

ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 27 58 61 80

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 62 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 143 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3,973 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2,712 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 65,861 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12,299 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,752,220.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 85,054
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை
114,952,531.44
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD



கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு இலக்கம் 2513 சீட்டிழுப்பு திகதி 18.08.2020
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 11 12 14 38

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 04 இலக்கங்கள் சரியாயின் | ரூ.107,570,585.68 | 01 |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 0 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 196 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 440 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10836 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 7170 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 181276 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 32906 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 232,829
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 114,456,625.68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00



சீட்டிழுப்பு இலக்கம் : 4218 உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
திகதி: 18-08-2020
வெற்றி எழுத்து: N வெற்றி இலக்கங்கள்: 9 0 9 8 8 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 909889 | ரூ. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | 09889 | ரூ. 100,000/- | 11 |
| 3ஆம் பரிசு | 9889 | ரூ. 10,000/- | 108 |
| 4ஆம் பரிசு | 889 | ரூ. 1,000/- | 1,077 |
| 5ஆம் பரிசு | 89 | ரூ. 100/- | 10,882 |
| 6ஆம் பரிசு | 9 | ரூ. 20/- | 107,679 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 90988 | ரூ. 10,000/- | 09 |
| 8ஆம் பரிசு | 9098 | ரூ. 1,000/- | 110 |
| 9ஆம் பரிசு | 909 | ரூ. 100/- | 1,093 |
| 10ஆம் பரிசு | 90 | ரூ. 50/- | 10,764 |
| 11ஆம் பரிசு | N | ரூ. 20/- | 43,096 |

- ரூ. 12,208,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,972,543.00
தேசிய லொத்தர் சபை



Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம்: 585
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 18/08/2020
NLB
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 21
வெற்றி இலக்கங்கள்: 54 69 72 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 153 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 329 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,787 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,723 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 143,709 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 26,252 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 229,384,490.75
ரூ. 10,488,125.60
ரூ. 23,909,948.40
ரூ. 6,524,340.00

## சிறு விளம்பரம்

காணி/தோட்டம்

616

**வீடு சொத்து**

**கொழும்பு**

மாவட்டம்

விற்பனைக்கு

Colombo-4, Sea side புதிய ஆடம்பர தொடர் மாடி மனையில் பல நவீன வசதிகளுடன் 2 Bedrooms, 2 Bathrooms, Living and Dining area, Car Parking, Gym, Pool, CCTV, 24 hours SQ 920 உடன் விற்பனைக்கு உண்டு. Deed available. +94757619114.

046022

**Repeat Your ad For Better Offers**


## காணி சுவீகரித்தல் சட்டம் (460 ஆவது அத்தியாயம்)
## 7வது பிரிவின் கீழ் அறிவிப்பு

குறிப்பு இல. 3/2/3/10/2018

காணி அமைச்சின் குறிப்பு இல: 4-3/8/2018/ pc/233

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை விபரங்களுக்கு அமைய காட்டப்படும் காணியை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு உத்தேசித்துள்ளது. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 2180/23 இல் 2020.06.17 திகதியிலுள்ள இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்க வர்த்தமானி பத்திரத்தில் iiiஆவது பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேற்கு |
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலகம் | : அத்தனகல்ல |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 324/A முடகமுவ |
| கிராமத்தின் பெயர் | : முடகமுவ |
| இடத்தின் பெயர் | : அபகஹலன்த |
| ஆரம்ப வரைபட இல. | : கம் 4194 |
| துண்டு இல | : 01 |
| இடத்தின் விஸ்தீரணம் | : ஹெக்டயார் 02942 |

**எஸ்.பீ. குணவர்தன**
**பிரதேச செயலாளர்**
**அத்தனகல்ல**

**முகவரி: அத்தனகல்ல பிரதேச செயலகம் நிட்டம்புவ.**

**திகதி: 2020.08.19**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சு **கட்டிடங்கள் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## நாவலப்பிட்டி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் வோட்டுக்களின் தொகுதியின் நிர்மாணம் (I ஆம் படிநிலை, II ஆம் கட்டம்)

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 63.7 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ''நாவலப்பிட்டி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் வோட்டுக்களின் தொகுதியின் நிர்மாணத்திற்காக I ஆம் படிநிலை - II ஆம் கட்டம்'' - இற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

   நிர்மாணக் காலப்பகுதியானது 273 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கட்டிட நிர்மாணத்துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்றவராகவும் அப்பதிவானது விலைமனுக்களை மூடும் திகதி வரையிலும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், இப்பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

   ''விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், இலங்கை, பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது (பிசிஏ-03) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகை ஒப்பந்தம் வழங்கப்பட மாட்டாது''.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவலை கண்டி, கட்டிடங்கள் திணைக்கள (5 ஆம் வலயம்) பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே முகவரியில் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணிவரை பரீட்சிக்கலாம்.

   தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 081-2236653. தொலைநகல்: 081-2234255.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக பதினைந்தாயிரம் ரூபாவைச் (15,000 ரூபா) செலுத்திய பின்னர் 2020.08.19ஆம் திகதியிலிருந்து 2020.09.09ஆம் திகதிவரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரை கண்டி, கட்டிடங்கள் திணைக்கள (5ஆம் வலயம்) பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2020.09.10ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாகக் கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் பத்தரமுல்ல 'செத்சிரிபாய' 2ஆம் மாடி, கட்டிடங்கள் திணைக்களம், ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள விலைமனுப் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனு ஆவணத்தின் 09ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்களின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 700,000 ரூபா தொகைக்காகவிருத்தல் வேண்டும்.
   - 2021 சனவரி 06ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் 16.2ஆம் உபவாசகத்தில் சுட்டிக்காட்டியுள்ளவாறு முகவர் நிலையமொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்
9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் விலைமனுக்களை மூடும் நேரத்திற்கு ஆகக்குறைந்தது 1 மணித்தியாலத்திற்கு முன்பதாக 'செத்சிரிபாய' வளவிற்குள் உட்புகுமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் எம். எச்.எம். இஸ்மெயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்**
**கட்டிடங்கள் திணைக்களம்**
**2ஆம் மாடி, 'செத்திரிபாய' பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, ஏத்துக்கால, சென் அந்தனீஸ் வீதி, இல. 33, குமாரகே மிர்னா சுதர்ஷனி பெரேரா (கடவுச்சீட்டு இலக்கம் - N8382179) ஆகிய நான், நீர்கொழும்பு, ஏத்துக்கால சென் அந்தனீஸ் வீதி. இல. 33, வர்ணகுலசூரிய சுமல் இந்திக பெர்னான்டோவின் பெயரில் வழங்கப்பட்ட, பகிரங்க நொத்தாரிசு A.A. பசீர் அஹமட் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2018.07.21ம் திகதியிடப்பட்ட அட்டோர்ணி தத்துவ இல. 13740ஐ 2020 ஜுலை 22ம் திகதி அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்வதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன் 2020.07.22ம் திகதி முதல் அவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்புக்கூறமாட்டேன்.

**குமாரகே மிர்னா சுதர்ஷனி பெரேரா**

## கலவான பிரதேச சபை

### பெகோ லோடர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல்

கலவான பிரதேச சபைக்கு பெகோ லோடர் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 2020.09.10ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு அழையுங்கள்.

**045-2255275, 071-4588584, 070-5102107**

**கே.வி.எஸ். சாமிந்த இந்ரபிரிய**
**தலைவர்,**
**கலவான பிரதேச சபை,**
**கலவான.**

## ஏலத்துக்கான அழைப்பு

## வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை

## Procurement of 3G/HD/SD SDI Router-02 Nos. with Clean/ Quite Switching

### விலைமனுக்கோரல் இலக்கம் ITN/Q/27/2020

1. வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் கொள்முதல் குழுத் தலைவரினால் பத்தரமுல்ல, விக்ரமசிங்கபுரவிலுள்ள பிரதான காரியாலயத்திற்காக 3G/HD/SD SDI Router-02 Nos. with Clean/Quite Switching கட்டமைப்பை பெற்று ஸ்தாபித்து பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு உற்பத்தியாளர்கள்/ அவர்களின் அனுமதி பெற்ற பிரதிநிதிகள் அல்லது அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலம் கோரப்பட்டுள்ளது.
2. இந்த ஏலம் உள்நாட்டு விதிமுறைகளுக்கு அமைய திறந்த போட்டி ஏலத்தின் அடிப்படையில் நடைபெறும்.
3. **தேவையான தகுதிகள்:**
   - i. உரிய சேவைக்குரிய வியாபாரம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   - ii. தொலைக்காட்சி தொடர்பாடல் உபகரணங்களை வழங்குவது தொடர்பில் குறைந்த பட்சம் 3 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
   - iii. உள்நாட்டில் விற்பனையின் பின்னரான சேவை வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. இது தொடர்பில் ஆர்வம் செலுத்தும் ஏலதாரர்கள் 2020 செப்டெம்பர் மாதம் 08ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி வரை, வார வேலை நாட்களில் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆங்கில மொழியிலான (ஏலப் பத்திரத்தை பரிசீலிக்க முடியும். விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல, வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முகாமையாளர் (விநியோக பிரிவு) ஆவணங்களுக்கான கோரிக்கையுடன் 5,000.00 ரூபாயுடன் 8 வீத வெட் வரி அடங்கலாக மீள செலுத்தாத கட்டணத்தை செலுத்தி உரிய ஏலப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
5. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0112-774592 என்ற தொலைபேசி இலக்கம், 0112-774591 என்ற பெக்ஸ் இலக்கம், engineering@itn.lk என்ற மின்னஞ்சல் முகவரியினூடாகவும், வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பிரதி பொது முகாமையாளர் (பொறியியல் பிரிவு) ஊடாக அல்லது 0112775493 என்ற தொலைபேசி இலக்கம்/ supplies@itn.lk என்ற மின்னஞ்சல் ஊடாக முகாமையாளர் (விநியோக பிரிவு) ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். இணையத்தளம்: **www.itn.lk**
6. முத்திரையிடப்பட்ட ஏலப் பத்திரத்தின் பிரதி அடங்கலாக 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கீழ் காணப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல, வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பிரதான அலுவலகத்தில் பாதுகாப்பு பிரிவிலுள்ள கேள்வி மனுப் பெட்டியில் இடவேண்டும்.
7. 2020 செப்டெம் மாதம் 9ஆம் திகதி பி.ப. 2.30க்கு விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல, வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் பொறியியல் பிரிவு காரியாலயத்தில் ஏலதார்கள் அல்லது அவர்களின் அனுமதி பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அவை பிரிக்கப்படும். தாமதமாகும் ஏலப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
8. ஏலப் பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் Procurement of 3G/HD/SD SDI Router-02 Nos. with Clean/Quite Switching விலைமனுக்கோரல் இலக்கம்: ITN/Q/27/2020.
9. சகல ஏலத்துடனும் 50,000.00 ரூபாய் பிணைமுறி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தலைவர், கொள்முதல் குழு,**
**வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை,**
**விக்ரமசிங்கபுர, பத்தரமுல்ல.**

## அழகியற்கலை பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இந்த பல்கலைக்கழகத்தில் நிலவும் வைத்திய அதிகாரி பதவிக்காக தகுதியுள்ளவர்களிடமிருந்து 2020.09.10 வரை விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழக கல்லூரியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவப் பட்டதாரிப் பட்டம் (MBBS) சகிதம் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம்.

**சம்பள முறைமை:**

ரூ. 55,350 - 10x1,335, 1x1,630 - மாதமொன்றிற்கு 70,330 மற்றும் பதவிக்கு உரித்தான கொடுப்பனவுகளும் உரித்துடையதாகும்.

அனைத்து விண்ணப்பம் மற்றும் உரித்தான தகவல்களை பல்கலைக்கழக கல்விப் பிரிவின் பிரதி பதிவாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் ரூ. 15.00 முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியுடன் கூடிய 9"x4" அளவிலான தபாலுறையொன்றை 2020.09.04ஆம் திகதிக்கு முன்னதாக மேலேயுள்ள முகவரிக்கு அனுப்புவதன் மூலம் அல்லது www.vpa.ac.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2020.09.10 அன்று பி.ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் "பிரதி பதிவாளர்/ கல்விப் பிரிவு, அழகியற்கலை பல்கலைக்கழகம், இலக்கம் 21, எல்பர்ட் சதுக்கம், கொழும்பு-07" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

அரச சேவையில் மற்றும் கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சபைகளில் தொழில் புரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரித்தான நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

**பதிவாளர்,**
**அழகியற்கலை பல்கலைக்கழகம்.**
2020.08.17

## விலைமனுக் கோரல்

## விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சு

1. காலி, லபுதுவ, தக்ஷினபாய, 3ஆம் மாடியில் அமைந்துள்ள தென் மாகாண விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் பெறுகைக்குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து "ஹிக்கடுவ - நாரிகம பல் செயற்பாட்டு சேவை நிலையத்தில் கூரையை நிர்மாணித்தல்" செயற்றிட்டம் தொடர்பாக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படும்.


   | | | |
   |---|---|---|
   | **மதிப்பீட்டுத் தொகை** | - | **8.6 மில்லியன் ரூபா** |
   | **அமைவிடம்** | - | **ஹிக்கடுவ நாரிகம** |
   | **ஒப்பந்தக் காலம்** | - | **90 நாட்கள்** |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமை கீழாக விலைமனுக் கோரப்படும்.
3. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்காக வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன், இலங்கை நிர்மாணிப்புப் பயிற்சி அபிவிருத்தி நிலையத்தில் (CIDA) தரம் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் கையளிக்கப்படுவது தொடர்பாக தேவைப்படும் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் தகைமைகள் தொடர்பான விபரங்கள் விலைமனுத் தரவில் (Bidding Data) உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தம் கையளிக்கப்படுவது தொடர்பாக அந்த தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
5. இது தொடர்பாக தேவைப்படும் மேலதிக விபரங்களை காலி, லபுதுவ, தக்ஷினபாய, 3ஆம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சின் தொலைபேசி இலக்கம் 0914936740 அல்லது 0914936710 ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. மேற்படி தொழில்துறை தொடர்பாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களை லபுதுவ, தக்ஷினபாயவில் அமைந்துள்ள விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சிற்கு எழுத்துமூல வேண்டுதலொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் மற்றும் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா தொகையை செலுத்தி 2020 ஓகஸ்ட் 20 முதல் 2020 செப்டெம்பர் 10 வரையான வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.
7. சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென தயாரிக்கப்பட்டு, வெவ்வேறான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "நாரிகம பல் செயற்பாட்டு சேவை நிலையத்தின் கூரையை நிர்மாணித்தல்" எனக் குறிப்பிட்டு அந்த தபாலுறைகள் மீண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மேலேயுள்ளவாறாக தொழில்துறையின் பெயரைக் குறிப்பிட்டு 2020 செப்டெம்பர் 11 அன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்பட வேண்டியதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பொறுப்பேற்கப்படுவது முடிவடைந்தவுடன் உடனடியாக விலைமனுதாரர்கள் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

   **முகவரி:**
   **செயலாளர்,**
   **விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சு,**
   **3ஆம் மாடி, தக்ஷினபாய,**
   **லபுதுவ, காலி.**
   **தொலைபேசி இலக்கம்: 0914936710/ 0914936740 பெக்ஸ்: 0912226428**
8. விலைமனுத் தரவுகளில் குறிப்பிட்டுள்ளவாறாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுப் பத்திரங்களுடன் மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைக் கட்டணமாக (Bid Security) ரூ. 86,000.00 பெறுமதியையுடைய 2021.01.21 வரை செல்லுபடியாகும். இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்தைக் கொண்டுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப் பிணையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
9. விலைமனுப் பத்திரங்கள் 2020.12.21 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. ஒரு முன்னோடி விலைமனுக் கூட்டம் 2020.09.02 அன்று மு.ப. 10.00 மணிக்கு விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சு, 3ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலியில் நடைபெறும்.
11. இது தொடர்பாக அமைச்சுப் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

**ரங்ஜித் யாப்பா**
**செயலாளர்,**
**விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய அபிவிருத்தி அமைச்சு,**
**3ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.**


**BE BETTER INFORMED!**




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE


## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)
## 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28 இன்
## 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்புத் திட்டத்திற்காக வீரகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பின்வரும் காணிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்குவதற்காக காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் மரணமடைந்த படியால் மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர்கள் நிரூபித்தால் பெற்றுக் கொள்வதற்கு வலஸ்முல்லை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கங்களின் கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து இலங்கை ஜனநாயக குடியரசின் 08 நவம்பர் 2019ஆம் திகதிய 2148/38ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | வரைபட இல. | துண்டு இல. | நஷ்டஈடு (ரூ.) | வழக்கு இல. | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|---|---|---|
| 01 | 261/58/58 | 923 | 373,800.00 | MLA-01 | வலஸ்முல்லை |
| 02 | 261/58/58 | 924 | 480,640.00 | MLA-02 | வலஸ்முல்லை |
| 03 | 261/58/58 | 953 | 10,000.00 | MLA-03 | வலஸ்முல்லை |

**குமுது சி. லொக்குஹேவாகம,**
**பிரதேச செயலாளர்,**
**வீரகெட்டிய.**

**பிரதேச செயலகம்,**
**வீரகெட்டிய**
02.13.2020.


**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE

# வவுணதீவு காயான்மடு கிராம வீதிகளை தரமுயர்த்தும் பணிகள்





**மட்டக்களப்பு நிருபர்**

மட்டக்களப்பு மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்திலுள்ள காயான் மடு கிராமத்தில் உள்ள பாதைகளை கொங்கிறீட் வீதிகளாக மாற்றும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று முன்திம் (18) இப்பணிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ்வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக அமைக்கப்படவுள்ளன.

காயான்மடு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் க.தேவரூபன் தலைமையில், நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

இந் நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நாள் முழுதும் கிழக்கு தமிழ் மக்களின் இருப்புக்காக நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்றோம், மட்டக்களப்பிலே களத்தில் நின்று இனவாதத்திற்கெதிராக போராடுவோர் நாங்கள் மாத்திரமே எனவும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

**கிண்ணியா மத்திய நிருபர்**

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 250 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஆயிரம் கிராமப்புற மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், ஜேர்மன் முஸ்லிம் ஹெல்ப் நிறுவனத்தின் அனுசரணையுடன்,

அல் ஹஸனாத் நற்பணி மன்றமும் அஸிஸா பௌன்டேஷனும் இணைந்து நேற்று (19) இதனை வழங்கி வைத்தது.

இந்த வைபவத்தில் அல் ஹஸனாத் நற்பணி மன்றத்தின் பணிப்பாளர் தாரிக் ஹஸன் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி தொடர்ந்தும் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு சமூக முன்னோடிகள் முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்

**காரைதீவு குறூப் நிருபர்**



புதிய அரசாங்கத்தின் பங்காளியாகவுள்ள நாங்கள்,சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்தி எமது பிரதேசத்தையும் வளம்படுத்திக் கொள்ள வேண்டுமென,

சம்மாந்துறை பிரதேச சபையின் பதில் தவிசாளர் ஏ. அச்சிமொகமட் தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச சபையின் 30 ஆவது மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் (18) செவ்வாய்க்கிழமை தவிசாளர் தலைமையில் சபாமண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் தவிசாளர் எம்.ஐ.எம். நௌசாட் கடந்த 10ஆம் திகதி தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்ததால் உதவி தவிசாளரான ஏ.அச்சிமொகமட் பதில் தவிசாளராக பதவியேற்று சபைக்கு தலைமை தாங்கினார்.இதன்போது 17 உறுப்பினர்கள் சபையில் சமுமளித்திருந்தனர்.அமர்வு திட்டமிட்டபடி உரியநேரத்தில் ஆரம்பமாகி சுமுகமாக நடைபெற்றது.

முன்னாள் தவிசாளர் நௌசாட் சபையில் ஏனைய உறுப்பினர்கள் வரிசையில் முதலாவதாக அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.உறுப்பினர்களின் சில கேள்விகளுக்கு முன்னாள் தவிசாளர் என்றவகையில் நௌசாத் பதிலளித்தார்.

அங்கு பதில் தவிசாளர் அச்சிமொகமட் மேலும் பேசுகையில்:

சம்மாந்துறை பிரதேசம் பரந்துபட்டது. இங்குள்ள 10 வட்டாரங்களுக்கும் 20 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். எனவே 10 வட்டாரங்களும் முறையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மக்களின் குறை நிறைகள் கேட்டறியப்பட்டு நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

மக்களின் பிரச்சனைகள் குறைபாடுகளைக் காலந்தாழ்த்தாது தீர்க்கப்படல் அவசியம்.

கல்விதான் உயிர்மூச்சு. எனவே அதனை அபிவிருத்தி செய்ய சகல நடவடிக்கை களையும் முன்னெடுக்க உள்ளோம்.

நூலகங்களில் ஒன்லைன் வசதியை ஏற்படுத்தி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு எமது சபை வகை செய்ய வேண்டும்.

# கிழக்கு ஆளுநரின் முதலாவது மக்கள் சந்திப்பு



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

பொதுத் தேர்தலையடுத்து,புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்,நடாத்திய முதலாவது மக்கள் சந்திப்பு,நேற்று (19) திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொள்ளும் பொருட்டு முதல் முறையாக மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அதிகாரிகள் அழைக்கப்பட்டமை இதன் சிறப்பம்சமாகும்.

மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்காக மாதாந்தம் ஒரு தினம் ஆளுநரின் செயலகத்தில் பொது மக்கள் சந்திப்பு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.இதன்படி, மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதத்திற்கு ஒரு முறை மக்கள் சந்திப்பு நடைபெறுகிறது. மாகாண சபை அதிகாரிகளின் வருகை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் ஆளுநர் அலுவலகம் அமைந்துள்ளதால், மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்ட மக்கள் திருகோணமலைக்கு நீண்ட தூரம் பயணிப்பது கடினம் என்பதை கவனத்திற் கொண்டே மாவட்டங்கள் தோறும் பொது மக்கள் சந்திப்புக்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் வியாபாரப் பொதுச்சந்தை

**கந்தளாய் தினகரன் நிருபர்**



பிரதேச மட்டத்திலுள்ள சிறுதொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களது தொழில் முயற்சிகளை மேலும் வலுப்படுத்த, பிரதேச செயலக அடிப்படையில் தேவையான பொறிமுறையொன்றை ஏற்படுத்துமாறும் மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். டி.எம். அசங்க அபேவர்தன கேட்டுக்கொண்டார். இதற்கிணங்கவே இச்செயற்றிட்டம் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்டு வருகிறது.

சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி ஊக்குவிப்பு திட்டத்தின் ஒரு அங்கமாக திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்று(19) வியாபாரச்சந்தையும் கண்காட்சியும்

ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி சிறீபதி இதை ஆரம்பித்து வைத்தார்.

தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களின் சந்தை வாய்ப்புக்களை பிரபல்யப்படுத்தும் நோக்கில் இவ்வாறான கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இது பற்றி,மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் என்.பிரளாநவன் கருத்துத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச தொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் சிறுதொழில் முயற்சியாளர்களின் கண்காட்சி

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



காத்தான்குடியில் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி இடம் பெற்றது.சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் பொருட்டு இக்கண்காட்சி நடத்தப்பட்டது.மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் "மட்டு முயற்சியாண்மை 2020" விசேட திட்டத்தின் கீழ்,மட்டக்களப்பு மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் இக் கண்காட்சி இடம்பெற்றது.இதில், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா நேற்று புதன் கிழமை(19) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்தார்.

இதன்போது உள்ளூர் உற்பத்தியார்கள் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர். இந்நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி, காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர், சிறுதொழில் முயற்சிப்பிரிவு மாவட்ட மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ். வினோத், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் திருமதி. பத்மா ஜெயராஜா, சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான ஏ.எல். சியாத் பஹ்மி, எஸ்.எச். முஸம்மில், மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் தாக்கப்பட்டமை கவலையளிக்கிறது

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பேருவளை அமைப்பாளரும், பேருவளை பிரதேச சபை உறுப்பினருமான ஹஷீப் மரைக்கார் தாக்கப்பட்டமை மிகவும் மன வேதனையளிப்பதாக கல்முனை மாநகர சபை உறுப்பினர் சீ.எம்.மு பீத் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (19) அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் தர்கா நகர் அதிகாரிகொட பகுதியில் முறுகல் நிலவியது. இந்நிலையை அவதானித்து சுமுகமாக தீர்த்துவைக்க அவர் ஸ்தலத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போதே அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பேருவளை அமைப்பாளரும் பேருவளை பிரதேச சபை உறுப்பினருமான ஹஷீப் மரைக்கார் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். ஜனநாயக ரீதியாக நோக்கும் போது, இது போன்ற நடவடிக்கைகள் சிறுபான்மை மக்களுக்கு எதிர்காலத்தில் பாரிய சவாலாக அமையலாம் என அஞ்சப்படுகிறது.

இரு சமூகங்களுக்கிடையிலான பொதுவான பிரச்சினைகளை மக்கள்

பிரதிநிதிகளோடு கலந்து பேசுவதற்கு பதிலாக அடாவடித்தனங்களை அரங்கேற்றுவது சமூக நல்லிணக்கங்களை ஏற்படுத்தாது.மாறாக இவை அச்ச சூழ்நிலையையே ஏற்படுத்தும்.

ஏற்கனவே அச்சப்பட்டுள்ள சிறுபான்மை சமூகங்கள் மேலும் அச்சமடைவதற்கே இவ்வாறான சம்பவங்கள் வழிகோலும். இவ் விடயத்தில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற முறையில் நீதியான விசாரணை மேற்கொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறு நடத்தப்பட்டால், சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என்ற கேள்வியும் எழுகிறது.

அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் ஜனநாயக அடிப்படையில் மக்கள் வழி நடாத்தப்பட வேண்டும். குற்றத்தை யார் செய்திருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அத்துடன் குறித்த பிரதேசத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் தொடர்ந்தும் அரசாங்கம் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# மட்டு. மாவட்ட நெற்செய்கைக்கு மானிய அடிப்படையில் உரம்

## உயர்மட்ட கலந்துரையாடலில் முடிவு

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு நிருபர்கள்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் 67,932 ஹெக்டேயர் காணிகளில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், இவற்றுக்கான உரங்கள் மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பில் இம்முறை 2020, 2021 ஆண்டு பெரும்போகத்தில் நெற்செய்கை பண்ணப்படவுள்ளது. 67,932 ஹெக்டேயர் காணிகளில் இச்செய்கை மெற்கொள்ளப்படவுள்ளதால்,இவற்றுக்கான உரம் மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான முன்மொழிவை விவசாய அமைச்சின் தேசிய உரச் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

இதன் போது அரசாங்க அதிபர் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இம்முறை அரசாங்கம் வழங்கவுள்ள மானிய உரம், இரசாயனப் பசளையுடன் சேர்த்து சேதனப் பசளையாக வழங்கப்படவுள்ளது. சுகாதார உணவு மேம்பாடு, நஞ்சற்ற உணவுகளை பெற்றுக் கொள்ளுதல், மண்வளத்தைப் பாதுகாத்து, சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இம்முறை உரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கடந்த பெரும் போகத்தின்போது மட்டக்களப்பில் நெற்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காப்புறுதித் தொகை நஷ்டஈடாக சுமார் 301 மில்லியன் ரூபா வழங்கப்பட்டு வருவதாகவும் அதில் 90 வீதமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு முடிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதவிர இம்முறை பெரும்போகத்தில் நெற்செய்கை பண்ணப்படும் நெற்காணிகளில் சுமார் 750 ஹெக்டேயர் நிலத்தில் நெல் தவிர்ந்த மாற்றுப் பயிர்களான உழுந்து, சோளம், நிலக்கடலை மற்றும் எள்ளு போன்ற பயிர்கள் செய்கை பண்ணுவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.





அன்னதான கந்தன் என அழைக்கப்படும் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் நேற்றைய கொடியேற்றத்தின் போது... (படங்கள் பருத்தித்துறை விசேட நிருபர்)

## பேருந்து சேவைகளை அதிகரிக்க கோரிக்கை

முல்லைத்தீவு குறூப் நிருபர்

மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் வழியாக முல்லைத்தீவு நகரத்திற்கும் மாந்தை கிழக்கு துணுக்காய் நகரங்களுக்கும் இடையிலான இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என பொது மக்களினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் புதுக்குடியிருப்பு, கரைதுறைபற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் கடந்த காலங்களில் கிராமங்களுக்கான பஸ் சேவைகள் இடம் பெறுவதில்லை எனவும் குறிப்பாக வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் மாங்குளத்தில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மாங்குளம் வழியாக கூடுதலான பஸ்களை இலங்கை போக்குவரத்து சபை பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பாக பாடசாலைகள் மற்றும் திணைக்களங்களுக்கு பணிக்குச் செல்பவர்கள் மாங்குளத்தில் நீண்ட நேரம் காத்திருப்பதால் உரிய நேரங்களுக்கு கடமை இடங்களுக்கு செல்ல முடியாது இருப்பதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான பணிப்புரைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் பேருந்து சேவைகள் நடத்தப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# மக்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவது அவசியம்

### அவுஸ்திரேலிய தூதரக அதிகாரியிடம் சார்ள்ஸ் எம்.பி தெரிவிப்பு

தலைமன்னார் நிருபர்



தமிழ் மக்களின் தனித்துவத்துக்கு மதிப்பளித்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளாது அரசு செயல்படுமாயின் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக நாம் சிந்திப்போம் என தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். அவுஸ்திரேலியா நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதி தலைமைத்துவ அதிகாரி விக்டோறியா கோக்கிலி சார்ள்ஸ் நிர்மலநாதனை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது அரசாங்கத்துடன் சேர்ந்து நீங்கள் செயற்படுவீர்களா என வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இச் சந்திப்பில் மேலும் கூறியதாவது,

கடந்த அரசாங்கத்தைப் போல் தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்தை மேற்கொள்ளாது தமிழர்களின் தனித்துவத்துக்கு ஊறுவிளைவிக்காமல் இந்த அரசாங்கம் செயற்பட வேண்டும்.

எந்த கட்சி வந்தாலும் இளைஞர் யுவதிகளுக்கு தங்கள் கட்சியால் மட்டுமே வேலைவாய்ப்பு வழங்க முடியும் என்ற நிலையை உருவாக்கிய நிலையிலேயே இளைஞர் யுவதிகளை தங்கள் வசம் ஈர்த்தமையும் வெளிச்சமாகியிருந்தது.

தமிழ் மக்களின் தனித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் அரசாங்கம் செயல்பட வேண்டும். குறிப்பாக 2010 லிருந்து 2015 வரை தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆனால் கடந்த அரசாங்கமானது 2015 க்கு பிறகு தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிலை காணப்பட்டது.

ஆகவே தமிழர்களின் தனித்துவத்துக்கு மதிப்பளித்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளாது அரசு செயல்படுமாயின் அவற்றை கவனத்தில் எடுத்து அரசாங்கத்தின் இணைந்து செயற்படுவது தொடர்பாக நாம் சிந்திப்போம்.

அத்துடன் தமிழ் மக்கள் வாழ்வாதாரத்தில் மிகவும் நலிந்து காணப்படுகின்றனர்.

ஆகவே கிராமங்களிலுள்ள சங்கங்களின் ஊடாக அக் கிராமங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய அப் பகுதி வளங்களை வைத்து அவற்றை முன்னெடுத்துச் செல்வது பொருத்தமாக இருக்கும் எனக் குறிப்பிட்டார்.

## முள்ளியவளையில் வனவள திணைக்களத்தின் காணி சுவீகரிப்பு முயற்சி இடைநிறுத்தம்

### மாவட்ட அபிவிருத்தி குழுவில் இறுதி தீர்மானம்

ச.இராசரத்தினம்

முல்லைத்தீவு முள்ளியவளை முறிப்பு பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை எல்லைப்படுத்தி வனவளத்திணைக்களத்திற்கு சொந்தமானதாக மாற்றும் நடவடிக்கையில் வனவளத்திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் குறித்த பகுதியில் மக்கள் தோட்டங்கள் செய்துவரும் காணிகளை அளவீடுசெய்து எல்லைப்படுத்த சென்ற வனவளத்திணைக்களத்தினரை காணி உரிமையாளர்கள் தடுத்து நிறுத்தியுள்ளதுடன் அளவீடு செய்யவிடாமல் தடுத்துள்ளார்கள்.

சுமார் 45 பேருக்கு சொந்தமான காணிகளில் வாளைதோட்டங்கள், தென்னந்தோட்டங்கள், பயன்தரு மரங்கள் என்பன நாட்டப்பட்டு வளர்ந்து வந்துள்ள நிலையில் குறித்த காணிகளை வனவளத்திணைக்களத்தினர் எல்லைப்படுத்த பிரதேச சபையினரும் அனுமதி கொடுத்துள்ளதாக காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த ஒரு தொகுதி மக்கள் இந்த காணிக்கு உரித்தான உரிமப்பத்திரங்கள் மற்றும் சான்று துண்டுகளை வைத்துள்ளபோதும் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது தங்களுக்கு சொந்தமான காணிகளில் பயன்தரு மரங்களை நாட்டிவந்துள்ளார்கள்.

இந்த பகுதியில் சிலருக்கு எதிராக வனவளத்திணைக்களத்தினர் சட்ட நடவடிக்கை எடுத்து நீதிமன்றில் வழங்கு தொடரப்பட்டுள்ளது. இந்நிலையிலும் சிலரது காணிகள் காணி பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஆவணங்கள் காட்டி பதிவு செய்யப்பட்ட போதும் இந்த மக்களுடைய காணிகள் என பிரதேச செயலகத்தினால் எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இது தொடர்பாக காணி உரிமையாளர்களால் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானுக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் இவ்விடயம் பற்றி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டதுக்கு அமைவாக அளவீட்டு பணிகள் கைவிடப்பட்டன.

## கால்நடை கட்டுப்பாட்டை அதிகரிக்க வேண்டாம்

### விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு குறூப் நிருபர்

முல்லைத்தீவு பழைய முறிகண்டிக் கிராமத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இடைபோக நெற்செய்கையின் போது கால்நடைக் கட்டுப்பாட்டிற்கான காலத்தினை அதிகரிக்க வேண்டாம் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர், துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விவசாயிகள் கூறுகையில்,

இடைபோகத்தில் தீர்மானிக்கப்பட்டபடி கால்நடைக் கட்டுப்பாட்டினை பேணுமாறும் கால்நடைக் கட்டுப்பாட்டிற்கான காலத்தினை அதிகரிப்பதனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் இல்லாத நிலை ஏற்படும். மேலும் எதிர்வரும் பெரும் போகத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது என்றனர்.

இதனை விட பழையமுறிகண்டிக் கிராமத்தில் மேய்ச்சல் தரவை இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் இடைபோகத்தில் தீர்மானிக்கப்பட்டபடி கால்நடைக் கட்டுப்பாட்டு நாட்களைப் பேணி கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுவதற்கான வழிகளை ஏற்படுத்துமாறு கால்நடை வளர்ப்பாளர்களினால் மனு மூலமும் நேரிலும் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பழைய முறிகண்டிக் கிராமத்தில் தற்போது 75 ஏக்கரில் இடைபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புகையிரத நிலைய களஞ்சியத்தில் திருட்டு

### யாழ்.கோண்டாவிலில் சம்பவம்

யாழ்.விசேட நிருபர்

கோண்டாவில் புகையிரத நிலைய களஞ்சியம் உடைக்கப்பட்டு ஒரு இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.கோண்டாவில் புகையிரத நிலையத்தின் களஞ்சிய சாலையை உடைத்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை களவாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் களஞ்சிய சாலையை புகையிரத திணைக்கள பணியாளர்கள் பார்வையிட்ட போதே அது உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டமையை அறிந்துள்ளனர். களவாடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் புகையிரத திணைக்களத்தால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மயங்கி வீழ்ந்தவர் மரணம்

யாழ்.விசேட நிருபர்

யாழில். கூலி வேலையில் ஈடுபட்டிருந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். புத்தூர் கலைமதி கிராமத்தை சேர்ந்த 43 வயதான உ.சதிஸ் எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் கூலி வேலையில் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்த வேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார். அதனையடுத்து அங்கிருந்தவர்கள் மயக்கத்தை தெளிய வைக்கும் நடவடிக்கையினை மேற்கொண்ட போதிலும் அவர் மயக்கத்திலிருந்து மீளாததால் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அவர் உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதனையடுத்து நடைபெற்ற மரண விசாரணை நடைபெற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## வவுனியாவில் கட்டாக்காலி மாடுகளினால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

கோவில் குளம் குறூப் நிருபர்

வவுனியா நகர பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வவுனியா நகரம், வவுனியா – மன்னார் பிரதான வீதி, பட்டனிச்சூர், வேப்பங்குளம், குருமன்காடு சந்தி போன்ற பகுதிகளில் நடு வீதிகளில் கால்நடைகள் நிற்பதனால் போக்குவரத்து நேரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி மாடுகளினால் கடந்த மாதத்தில் மாத்திரம் 10க்கு மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த நகரசபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொடிகாமத்தில் 30 பேருக்கு கொரோனா பரிசோதனை

த.சுபேசன்



கொடிகாமத்தில் நேற்று காலை 30 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கொடிகாமம் பேருந்து தரிப்பிடத்தின் மேல் தளத்தில் சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் தபால் நிலைய ஊழியர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனைகளை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டிருந்தனர். கொரோனா சமூகப் பரவலை இனங்காணும் நோக்கில் தென்மராட்சிப் பகுதியில் 180 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெடிபொருட்கள் மீட்பு



பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தர்மக்கேணி என்னும் கிராமத்தில் வயல் விதைப்பு செய்வதற்காக காணி துப்புரவு பணியில் ஈடுபட்டபோது காணி உரிமையாளரால் சில வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பளை பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிசார் வெடிபொருட்களை மீட்டுள்ளனர்.

## நல்லூரை சூழ நான்கு வீதி வளைவுகள் அமைப்பு



ஐ.சிவசாந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் செல்லும் நுழைவாயில்களான நான்கு பிரதான வீதிகளிலும் வீதி வளைவு அமைக்கப்படவுள்ளன. இதன் முதல் கட்டமாக கிழக்கு புறம் செம்மணி வீதியில் வீதி வளைவு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தெற்கு புறமான வீதி வளைவு கோயில் வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலடியில் அமையவுள்ளது. இந்த வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நடும் ஆகம வழிபாடு நேற்று காலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

நல்லூர் சிவாச்சாரியார், ஆன்மீக பெரியோர்கள், ஆலய தொண்டர்கள் என பலர் இந்த வழிபாட்டில் பங்கேற்றனர்.

## காணாமல் போனோர் விவகாரம்; அரசின் நிலைப்பாடு என்ன என்பதை அறிய வேண்டும்

ச.இராசரத்தினம்



தமக்காக முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளை அனைவரும் கண்காணிக்க முடியாது என்பதால் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பாராளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதன் ஊடாக பிரதிநிதித்துவ ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான முக்கிய பணிகளையாற்றும் பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் அதற்காக வகுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன. இதில் பொதுத் தேர்தலொன்றின் பின்னர் கூடும் புதிய பாராளுமன்றமொன்றின் முதல் நாள் அமர்வு, பாராளுமன்ற கூட்டத்தொடரொன்றை ஜனாதிபதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் போன்றவை விசேடமான நிகழ்வுகளாகும்.


ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வு மற்றும் கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் ஆகிய இரு நிகழ்வுகளும் இன்று (20) இடம்பெறுகின்றது.

சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் தவிசாளர், குழுக்களின் பிரதித் தவிசாளர் தெரிவு, பாராளுமன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணம் என்பன இடம்பெறுவதாலேயே புதிய பாராளுமன்றத்தின் முதல்நாள் அமர்வு விசேடமான அமர்வாக அமைகிறது. அரசியலமைப்பின் 64 (1) உறுப்புரையில் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்நாள் அமர்வில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான ஜனாதிபதியின் அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்பட்டதும், சபாநாயகர் தெரிவு இடம்பெறும். சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உறுப்பினரொருவரை முன்மொழிவதற்கு விரும்புகின்ற எவரேனும் உறுப்பினர் குறித்த முன்மொழிவுக்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாரா என்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எவராவது உறுப்பினர் ஒருவரின் பெயரை சபாநாயகராகத் தெரிவுசெய்யுமாறு உறுப்பினர் ஒருவர் முன்மொழிவதுடன், அவரை அக்கிராசனத்தில் அமரும்படி பிரேரித்தலும் வேண்டும். அதனை மற்றுமொரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும். இவ்வாறு பிரேரிக்கப்படும் உறுப்பினர் ஆளும் கட்சி உறுப்பினராகவோ அல்லது எதிர்க்கட்சி உறுப்பினராகவோ இருக்கலாம். சபாநாயகரின் பதவிக்கு ஒருவரின் பெயர் மாத்திரம் முன்மொழியப்பட்டிருந்தால் அவர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படுவார்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்படும் போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒருவர் தேர்வு செய்யப்படுவார். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் நபரின் பெயரை முன்மொழிந்தஉறுப்பினரும், வழிமொழிந்தஉறுப்பினரும் சபாநாயகரை அழைத்துச் சென்று அக்கிராசனத்தில் அமர்த்துவார்கள். இரு உறுப்பினர்கள் கைகளில் பிடித்து அழைத்துச் செல்லும் சம்பிரதாயம் பிரித்தானிய பாராளுமன்றத்திலிருந்து பின்பற்றப்படும் ஒன்றாகும்.

கடந்த காலத்தில் பாராளுமன்ற முறையில் சபாநாயகர் பதவி என்பது அவ்வளவு சுவாரஸ்யமான பதவியாக இல்லை என்பதால், உறுப்பினர் ஒருவரை விரும்பமின்றி சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் செல்வதையே இந்த சம்பிரதாயம் உணர்த்துகிறது. சபாநாயகர் தெரிவினைத் தொடர்ந்து அவருக்கு, பாராளுமன்ற செயலாளர் நாயகம் சத்தியப் பிரமாணம் செய்து வைப்பார்.

சபாநாயகர் தனது சத்தியப் பிரமாணம் மேற்கொண்ட பின்னர் சபையில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அனைருக்கும் சத்தியப் பிரமாணம் செய்வதற்கும், கையொப்பம் இடுவதற்கும் வழிவகை செய்ய வேண்டும். சபாநாயகர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சத்தியப் பிரமாணம் செய்து வைப்பார்.



உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சபாநாயகர் முன்னிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் ‘பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை’ எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

முதலாவது அமர்வில் கலந்துகொள்ள முடியாத உறுப்பினர்கள் இரண்டாவது அமர்வு நாளில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளலாம். அல்லது பிறிதொரு தினத்தில் நிலையியற் கட்டளை இலக்கம் 22 இற்கு இணங்க தனித்தனியாக சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.

முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்தில் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். சபாநாயகர் தெரிவின் போது பின்பற்றிய நடைமுறையே இதன்போதும் கடைப்பிடிக்கப்படும். பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற பின்னர் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு செய்யப்படுவது அரசியலமைப்பின் தேவைப்பாடாகும்.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய மூன்று பதவிகளும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. பாராளுமன்ற சபை அமர்வொன்றை முன்கொண்டு செல்வதற்கு இப்பதவிகள் அத்தியாவசியமாகின்றன.

இந்த நிகழ்வுகளுடன் அன்றைய அமர்வு முடிவுக்கு வரும். அதன் பின்னர் மற்றுமொரு தினத்துக்கு அல்லது அன்றைய தினமே மற்றுமொரு நேரத்துக்கு சபை ஒத்திவைக்கப்படும்.

இதனைவிடவும் புதிய பாராளுமன்றத்தின் அமர்வுகளை அல்லது முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பாராளுமன்ற கூட்டத்தொடரொன்றை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் பொருட்டு ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வுகளுக்குத் தலைமை தாங்க முடியும். அரசியலமைப்பின் 33 (அ), (ஆ) சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் என்பது ஜனாதிபதி பாராளுமன்ற அமர்வுக்குத் தலைமை தாங்கி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்துவதாக அமையும். இந்த உரை முன்னர் அக்கிராசன உரை என அறியப்பட்டிருந்தபோதும் தற்பொழுது அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடன உரையென அழைக்கப்படுகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

மகேஸ்வரன் பிரசாத்...
ஊடக அதிகாரி
தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்

# சுதந்திரம் அண்மித்த வேளையில் நடந்த முதல் பொதுத்தேர்தல்



இலங்கையானது ஜனநாயகம் தொடர்பில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக 1947 முதல் 2020 வரையான காலப்பகுதியில் பொதுத் தேர்தல்கள் மூலம் ஆட்சி மாற்றங்கள் பல இந்நாட்டில் இடம்பெற்றிருக்கின்றன. அந்த ஒவ்வொரு ஆட்சி மாற்றமும் ஜனநாயகத்தின் அடிப்படைக்கு ஏற்பவே இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாடு சுதந்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முதலாவது பொதுத்தேர்தல் 1947 இல் நடைபெற்றது. அதுவே இந்நாட்டின் சுதந்திரத்திற்கு வித்திட்ட தேர்தலாகவும் விளங்குகின்றது. அவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் 1947 பொதுத்தேர்தல் பல நாட்கள் நடைபெற்றன. அன்று தேர்தலொன்றை நடாத்தும் போது எதிர்கொள்ள நேர்ந்த சிரமங்களே இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தன. அதன் விளைவாகவே இத்தேர்தலை பல கட்டங்களாக நடாத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக அன்று நிலவிய போக்குவரத்து சிரமம், வாக்குச்சாவடிகளுக்கு செல்வதில் வாக்காளர்கள் எதிர்நோக்கிய கஷ்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கன.

என்றாலும் 1931 இல் சர்வசன வாக்குரிமை கிடைக்கப்பெற்றமையின் விளைவாக நாட்டில் ஜனநாயகம் குறித்த ஆர்வம் மக்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கியது. அது 1947 ஆம் ஆண்டாகும் போது நாட்டில் அரசியல் முதிர்ச்சியும் அரசியல் புலமையும் மக்கள் மத்தியில் ஏற்பட வழிவகுத்தது. இவ்வாறான சூழலில் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் இப்பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் செப்டம்பர் 20 ஆம் திகதி வரையும் 19 நாட்களாக நடைபெற்ற இத்தேர்தலில் வேட்பாளர்களின் பெயருடன் சின்னங்களும் வெளியிடப்பட்டன. இவ்வாறு பெயருடன் சின்னமும் வெளியிடப்பட்ட முதலாவது பொதுத்தேர்தலும் இதுவேயாகும்.

அந்த வகையில் அன்றைய காலகட்டத்தில் இந்நாட்டில் பிரபல்யம் பெற்று விளங்கிய பல அரசியல் தலைவர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களில் டி.எஸ். சேனநாயக்க, எஸ்.டப்ளியூ.ஆர். டி பண்டாரநாயக்க, டி.ஏ. ராஜபக்ஷ, என். எம். பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா, கலாநிதி ரி.பி. ஜாயா, ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி செல்வநாயகம் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் தலைவர்களும் அடங்குவர். இந்நாட்டின் முதலாவது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் இவர்களும் இடம் பெற்றிருக்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

அதேநேரம், இத்தேர்தல் இந்நாட்டில் அரசியல் ரீதியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக விளங்கியதோடு நாட்டின் அரசியல் பயணப்பாதையை மாற்றியமைப்பதில் இத்தேர்தல் முடிவுகள் பெரும் செல்வாக்கு செலுத்தின. அவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் இத்தேர்தலை எதிர்கொள்வதன் நிமித்தம் இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த முன்னணி அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து 1946 இல் ஐக்கிய தேசியக்கட்சியை ஸ்தாபித்தனர். அக்கட்சியின் ஊடாகவே டி.எஸ். சேனநாயக்க, எஸ்.டப்ளியூ.ஆர்.டி பண்டாரநாயக்க, டி.ஏ. ராஜபக்ஷ, கலாநிதி ரி.பி ஜாயா உள்ளிட்ட தலைவர்களும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். இத்தேர்தலில் ஐ.தே.க தனிக்கட்சியாக அதிக ஆசனங்களை வெற்றி பெற்ற போதிலும் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளவில்லை.



**அயல்நாடுகளில் ஜனநாயகத்தின் அடிப்படைகள் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட, இலங்கை ஜனநாயகப் பாதையில் நீண்ட காலமாக நிலைத்திருப்பதையிட்டு உலகெங்கிலும் ஜனநாயகத்தை மதிப்பவர்களின் மிகையான பாராட்டுக்கு உள்ளாகியுள்ளது**



அதாவது ஐ.தே.க. 42 ஆசனங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி 10 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 07 ஆசனங்களையும், இலங்கை இந்திய காங்கிரஸ் 06 ஆசனங்களையும், போல்ஸ்வீக் லெனினிஸ்ட் கட்சி 05 ஆசனங்களையும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 03 ஆசனங்களையும் இலங்கை தொழிலாளர் கட்சி ஒரு ஆசனத்தையும், சுயேச்சைக்குழுக்கள் 21 ஆசனங்களையும் இத்தேர்தலில் பெற்றுக் கொண்டன. இத்தேர்தல் முடிவுகளின்படி, லங்கா சமசாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, போல்ஸ்வீக் லெனினிஸ்ட் கட்சி என்பன 18 ஆசனங்களை வெற்றிகொண்டு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்தமை விஷேட அம்சமாகும். அத்தோடு இடதுசாரி சுயாதீன அபேட்சகர்கள் பலரும் இத் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

என்றாலும் இத்தேர்தல் முடிவுகளுக்கு ஏற்ப அரசாங்கத்தை அமைப்பதற்காக இடதுசாரி கட்சிகளுடனும் சுயேச்சைக் குழுக்களோடும் பல சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. என்றாலும் அப்பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை.

அதன் விளைவாக தனிக் கட்சி என்ற வகையில் 42 ஆசனங்களை வெற்றி பெற்ற ஐ.தே.க ஏனைய சில சிறுகட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்தது. அந்த அரசாங்கத்தின் பிரதமராக மகாமான்ய டி.எஸ். சேனநாயக்க பதவியேற்றார். அவரே சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக விளங்குகின்றார். இப்பாராளுமன்றத்தின் சபை முதல்வராக எஸ்.டப்ளியூ.ஆர். டி பண்டாநாயக்க பதவியேற்றார். லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவரானார். முதலாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக பிரன்ஸிஸ் மொலமுரே பதவியேற்றார். அத்தோடு டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சர்களாக ஜோர்ஜ் ஈ. டி. சில்வா, சேர் ஜோன் கொத்தலாவல, கலாநிதி ரி.பி ஜாயா, ஈ.ஏ. நுகவெல, லலித ராஜபக்ஷ, ஏ. ரத்நாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன உள்ளிட்ட முன்னணி தலைவர்கள் பலரும் அங்கம் வகித்தனர்.

அதேவேளை இத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இந்நாட்டுக்கு 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி டொமினியன் அந்தஸ்துடன் கூடிய சுதந்திரம் பிரித்தானியாவினால் வழங்கப்பட்டது. மகாமான்ய டி.எஸ். சேனநாயக்க தலைமையில் உருவான அரசாங்கம் உள்நாட்டு விவசாயக் கைத்தொழிலை மேம்படுத்தவென பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தது.

இத்தேர்தல் முடிவுகள் அரசியல் தொடர்பில் நாட்டில் பெரும் ஆர்வம் ஏற்பட்டிருந்ததை வெளிப்படுத்தியது. தேர்தல் தொடர்பான தகவல்களின்படி அன்றைய சூழலில் வாக்காளர்களில் நூற்றுக்கு அறுபது வீதமானோர் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தந்துள்ளனர்.

அன்று நிலவிய சூழ்நிலைக்கு ஏற்ப நூற்றுக்கு அறுபது வீதம் என்பது அதிகூடிய வாக்களிப்பு என அடையாளப்படுத்த முடியும். அதன் காரணத்தினால் இத்தேர்தல் நாட்டில் விஷேடமான தேர்தல் எனக் குறிப்பிடுவதில் தவறில்லை. இத்தேர்தலில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களின் பெரும்பாலான ஆசனங்களை தமிழ் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்று தொடங்கிய இந்த ஜனநாயகப் பயணப்பாதை இன்று வரையும் பாதுகாப்பாக இடம்பெறுவது குறித்து மகிழ்ச்சியடைய முடியும். அயல்நாடுகளில் ஜனநாயகத்தின் அடிப்படைகள் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட இலங்கை ஜனநாயகப் பாதையில் நீண்ட காலமாக நிலைத்திருப்பதையிட்டு உலகெங்கிலும் ஜனநாயகத்தை மதிப்பவர்களின் மிகையான பாராட்டுக்கு உள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மர்லின் மரிக்கார்...

## புதிய பாராளுமன்ற அங்குரார்ப்பணம்; இன்றைய சம்பிரதாய நிகழ்வுகள்... (17ஆம் பக்கத் தொடர்)

ஒன்பதாவது பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (20) பிற்பகல் மூன்று மணிக்கு புதிய பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். அரசாங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள் அடங்கிய கொள்கைப் பிரகடன உரை அவரினால் நிகழ்த்தப்படும்.

பாராளுமன்ற அமர்வு ஜனாதிபதியினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கோலகலமான நிகழ்வாக கடந்த காலங்களில் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக இராணுவ அணிவகுப்பு மரியாதை, மரியாதை பீரங்கிவேட்டுக்கள் தீர்க்கப்படுதல் போன்ற வரவேற்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். எனினும், ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வு சாதாரண முறையில் இடம் பெறும். பாராளுமன்றத்துக்கு வருகைதரும் ஜனாதிபதியை பாராளுமன்ற கட்டடத்தொகுதியின் பிரதான நுழைவாயிலில் சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்வார்கள். செங்கோலைத் தாங்கிய படைக்கல சேவிதர் முன்செல்ல அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் குழாம் ஆகியோர் சபைக்குள் பேரணியாகச் செல்வார்கள். ஜனாதிபதி அக்கிராசனத்தில் அமர்ந்ததும் சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் அமர்வில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மாத்திரமே இடம்பெறும். அவ்வாறு முன்வைக்கப்படும் உரை விவாதிக்கப்படவோ அல்லது வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்படவோ முடியாது. ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை முடிந்ததும் அடுத்த அமர்வு தினத்துக்கு சபையை ஜனாதிபதி ஒத்திவைப்பார்.

இதுபோன்று பல்வேறு நடைமுறைகள் மற்றும் சம்பிரதாயங்களைப் பின்பற்றும் பாராளுமன்றம் மக்களின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் முக்கிய பங்காற்றுகின்றது என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

# சவால்களை வெற்றி கொள்ளும் பலம்மிக்க தலைமைத்துவம்



சமன்மலி பிரியசாந்தி...
தமிழில்: வீ. ஆர். வயலட்

இலங்கை அரசியலில் கடந்த 5 தசாப்தங்களாக செயல் திறன் மிக்க தலைவராக விளங்கிவரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இளம் வயது பாராளுமன்ற உறுப்பினராகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். 1970 இல் 24 வயதில் பாராளுமன்ற உறுப்பினரான இவர் கடந்த ஐந்து தசாப்த காலப்பகுதியில் அமைச்சர், எதிர்க் கட்சித் தலைவர், பிரதமர் என்றபடி அரசியலில் உயர் ஸ்தானங்களை வகித்து 2006 முதல் 2015 வரையான காலப் பகுதியில் இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இரு தடவைகள் பதவி வகித்திருக்கின்றார்.

அதேநேரம், 2006 முதல் 2015 வரையான காலப்பகுதியில் இந்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் அவர் பதவி வகித்துள்ளார். அதன் பின்னர் இவரது செல்வாக்கில் 2016 நவம்பரில் உதயமான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையை 2019 இல் இவர் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டார். இவர் தலைமையிலான இக்கட்சியானது மிகக் குறுகிய காலத்தில் நாட்டில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகிய மூன்று தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றி வாகை சூடி சாதனை படைத்திருக்கின்றது.

அந்த வகையில் 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதன் முறையாகப் போட்டியிட்டு நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை உருவாக்கியுள்ளது. அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட அமைச்சரவையில் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ, நிதி, பொருளாதார கொள்கைகள், அபிவிருத்தி, புத்த சாசனம், கலாசாரம், மத விவகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல், வீட்டு வசதிகள் அமைச்சராகவும் பதவி ஏற்றுக்கொண்டார். 2019 டிசம்பர் முதல் 2020 மார்ச் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை இந்த அரசாங்கம் நீடித்தது. அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட இடைக் கால அரசாங்கம் 2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் வரை நீடித்தது.

கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதன் முறையாகப் போட்டியிட்ட ஸ்ரீ.ல.பொ. பெரமுன கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று வரலாற்று சாதனை படைத்திருப்பதோடு புதிய அரசாங்கத்தையும் உருவாக்கியுள்ளது. இப்புதிய அரசின் பிரதமராக இந்நாட்டில் நான்காவது தடவையாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றிருக்கின்றார். அதேநேரம் இத்தேர்தலில் இவர் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு முன்பாக பல சவால்கள் உள்ளன. இச் சவால்களை வெற்றி கொண்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைப் பிரகடனத்தை விரிவான அடிப்படையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வறுமை ஒழித்தல், நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை ஊக்குவித்தல், சுகதேகியான மக்களை உருவாக்குதல், சலருக்கும் சிறந்த கல்வியை வழங்கல், தூய குடிநீர், சகலருக்கும் மின்வசதியை பெற்றுக்கொடுத்தல், பசுமை கைத்தொழில்கள் ஊடாக இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல், மனித வாழ்வுக்குப் பொருத்தமான பசுமை நகரங்களை அமைத்தல், சிக்கன வாழ்வுக்கு பழக்கக்கூடிய மக்களை உருவாக்கல், பெண்களுக்கு உரிய இடத்தை வழங்குதல், காலநிலை மாற்றத்தையும், கடல் மாசுபடுதலையும் தடுத்தல், உயிர்ப்பல்வகைமையைப் பாதுகாத்தல், சமாதானம் மிகுந்த சமூகத்தை உருவாக்கல் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் வளமான அபிவிருத்தி இலக்குகள் 17 யும் அடைவதே இந்நடவடிக்கைகளின் முக்கிய இலக்குகளாக விளங்குகின்றன.

அங்கீகரிக்கப்பட்டுள்ள பொருளாதார சுட்டிகளின்படி இலங்கை வறிய நாடாக அடையாளப்படுத்தப்பட்டாலும் மனித வள அபிவிருத்திச் சுட்டியில் உலகில் வளர்ச்சி அடைந்த நாடுகளுடனான மட்டத்தில் உள்ளது. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் பொருளாதார ரீதியில் நாம் கீழ் மட்டத்தில் காணப்படுவது ஆச்சரியமான விடயமல்ல. ஆனாலும் ஏனைய நாடுகளுடன் முன்னேறிச் செல்வதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

2005 இல் தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற வேளையில் இந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 24.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததோடு தனி நபர் வருமானம் 1.241 அமெரிக்க டொலர் பில்லியனாக விளங்கியது.

ஆனால் 2006 முதல் 2014 வரையான காலப்பகுதியில் பொருளாதாரம் துரித வளர்ச்சியை அடைந்தது.

என்றாலும் 2015 முதல் 2018 வரையான 4 வருட காலத்தில் தனி நபர் வருமானம் நூற்றுக்கு 7 வீதமாக மாத்திரம் அதிகரித்தது. இதனால் இந் நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் பின்னடைவை சந்தித்தது. இக்காலப் பகுதியில் மாத்திரம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 191 பில்லியன் ரூபாவாகும்.

இவ்வாறான சூழலில் உற்பத்தி திறன் மிக்க பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்கத்தை மதிக்கக்கூடிய நியாயமான சமூகம் மற்றும் வளமான நாடு ஆகிய நோக்கங்களை வெற்றி கொள்வதற்காக 10 அம்சக் கொள்கைகளை அரசாங்கம் செயற்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு உறுதியளித்துள்ளது. அதாவது தேசிய பாதுகாப்புக்கு முதலிடம், நட்புறவு மற்றும் நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கை, தூய அரச நிர்வாகத்தை உருவாக்கல், மக்களுக்குப் பொறுப்புக்கூறக்கூடிய அரசியல் அமைப்பு மறுசீரமைப்பை கொண்டு வரல், பிரயோசனமுள்ள குடிமகன், வளமான மனித வளங்களை உருவாக்கல், மக்களை மையப்படுத்திய பொருளாதாரத்தை உருவாக்கல், தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை உருவாக்கல், பௌதீக வள அபிவிருத்தியை உருவாக்கல், நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவம், ஒழுக்கம் மிக்க மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குதல் என்பனவே அந்த பத்து அம்சங்களுமாகும்.

ஆனாலும் 2005 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்கு விசேட வாக்குறுதியொன்றை அன்று அளித்தார். அதாவது 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து அச்சமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை மக்களுக்குப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்தார். அதன் ஊடாக பயங்கரவாதத்தின் மூலம் நாள்தோறும் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புகள், படுகொலைகள், மத தலங்களை அழித்தல் என்பவற்றுக்கு முற்றுப் புள்ளி வைப்பதும் அவரது நோக்கமாக இருந்தது. அதன் நிமித்தம் முப்படையினரையும் பொலிஸாரையும் பலப்படுத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர அவர் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

அப்போதைய பாதுகாப்பு செயலாளரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு மற்றும் முப்படைகளதும் பொலிஸாரினதும் பெரும் தியாகத்துடன் கூடிய கடும் உழைப்பு என்பவற்றின் பயனாக 30 வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அது இலங்கை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டிய பணியாகும்.

மக்களுக்கு வழங்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் உண்மையான தலைவர் என்பதால் மக்கள் அவருடன் அணிதிரளுவதை எவராலும் தடுக்க முடியாது. அதன் விளைவாகவே மக்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை புதிய அரசாங்கத்துக்கு வழங்கி, 10 அம்சக் கொள்கைகளை செயற்படுத்த ஆணையையும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வழங்கியுள்ளனர். அத்தோடு முன்னாள் ஜனாதிபதியை மீண்டுமொரு தடவை பிரதமர் ஆசனத்தில் அமர்த்தி மக்கள் நன்றி செலுத்தியுமுள்ளனர். புதிய அரசாங்கத்தின் அமைச்சர்களையும் இராஜாங்க அமைச்சர்களையும் நியமிப்பதில் பரந்தடிப்படையில் கவனம் செலுத்தப்பட்டுள்ள அதேநேரம், அமைச்சு செயலாளர்களை நியமிப்பதிலும் முதிர்ச்சியும் அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய திறன்கள் குறித்தும் கவனம் செலுத்தி அரச அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்க விடயமாக உள்ளது.


அரச சேவையை விரைவுபடுத்தவென அரச பிரிவுகளிலுள்ள சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளை புதுப்பிக்கவும் அனைத்து சட்டங்களை ஆராய்வதும் நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டாகும் போது பேண்தகு அபிவிருத்தி இலக்கை அடைவதை அரசாங்கம் கொள்கைப் பிரகடனத்தில் நோக்கமாக அறிவித்திருக்கின்றது. அதேநேரம், அரச செலவுகள் செயல் திறன் மிக்கதாகவும் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையிலும் இடம்பெறுவதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அமைச்சரவை செயலாளர் தலைமையில் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை அமைக்கவும் செலவுகளைக் கண்காணிப்பதற்காக முறையொன்றும் ஏற்படுத்தப்படவுள்ளது.

மேலும் ஊழலை ஒழிப்பதும் புதிய அரசின் முக்கிய எதிர்பார்ப்பாகும். அதற்கு கொள்கைப் பிரகடனத்தில் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் மற்றும் அரசின் உயரதிகாரிகள் எவ்விதத்திலும் ஊழலுடன் தொடர்புபடாதவர்களென உறுதி செய்யும் நோக்கில் பல திட்டங்கள் 'சுபீட்சத்தின் நோக்கு' திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி உள்ளிட்ட 20 முக்கிய நிதிக்குற்றங்களை சட்டத்தின் முன் கொண்டுவருதல், ஊழல் வாதிகளான அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணையை வலுவாக்கவென சட்டங்களைக் கொண்டுவரல், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவை முறைமைப்படுத்தல், மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் அளித்தல், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு அல்லது விசேட நீதிமன்றமொன்றை அமைத்தல் போன்றன மோசடிகளை ஒழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் சில திட்டங்களாகும். அத்தோடு ஊழலை ஒழிக்கவென புதிய தொழில்நுட்பத்தையும் சட்ட மறுசீரமைப்பையும் பயன்படுத்துவது அனைத்து அரச தொழில்முயற்சியாளர்களதும், தலைவர்களதும் மற்றும் பணிப்பாளர் குழுக்களது பொறுப்புகள் தொடர்பில் உறுதியளித்தல் கட்டாயமானதாகும்.

மக்களின் விருப்பங்களை அடிப்படையாகக்கொண்டு புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவதும் புதிய அரசின் நோக்கமாகும். ஜனநாயக ஆட்சியின் கீழ் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது புதிய அரசியலமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேநேரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, கலப்புத் தேர்தல் முறைமை, மாகாண சபை மீளாய்வு, நீதித்துறை சுயாதீனத் தன்மையின் பாதுகாப்பு, பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை உறுதி செய்தல், மதச் சுதந்திரத்தை உருவாக்குதல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் என்பனவற்றையும் புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)



வெற்றியின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் ஆயிரக்கணக்கான லொத்தர் வியாபாரிகள் விற்பனை முகவர்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கையை உரமூட்டுவதற்குக் கைகொடுக்கும் நிலையான அபிவிருத்தியுடனான இலங்கையை உருவாக்குவதற்கு உறுதியுடன் பங்களிப்புச் செய்யும் சகல இலங்கை வாழ் மக்களுக்கும் சுபிட்சமான நாளைய நாளை மனதார வேண்டி நிற்கும்,

## தேசிய லொத்தர் சபை

புதிதாக நியமனம் பெற்ற புதிய அரசுக்கு கௌரவமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

NLB
NATIONAL LOTTERIES

வாழ்க்கையின் கனவுக்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்.

MMX



## காலனித்துவம் முதல் இற்றை வரை...

# சக்தி மிக்க ஜனநாயகத்தை நோக்கிய பயணம்

இலங்கையின் சட்டவாக்கப் பேரவை அல்லது இலங்கையின் சட்ட சபை என்பது பிரித்தானிய இலங்கை சட்டவாக்க சபையாகும். இது 1833 ஆம் ஆண்டில் கோல்புறுக், கமரூன் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் சேர் ரொபர்ட் ஹோட்டன் என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனுடன் இணைந்ததாக இலங்கை நிறைவேற்றுப் பேரவையும் நிறுவப்பட்டது. இந்த சட்டவாக்கப் பேரவையே இலங்கையின் முதலாவது பிரதிநிதித்துவ முறையிலான அரசு ஆகும். இந்த சட்டசபை 1931 இல் டொனமூர் அரசியலமைப்பின் மூலம் இலங்கை அரசாங்க சபையாக மாற்றப்பட்டது.

பிரித்தானிய இலங்கைக்கான பிரதிநிதித்துவ முறைக்கான அரசொன்றை அமைப்பதன் முதற்கட்டமாக 1833 கோல்புறுக், கமரூன் ஆணைக்குழு சட்டசபையை நிறுவியது. இச்சபை ஆரம்பத்தில் 16 சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பிரித்தானியத் தேசாதிபதி, நியமன உறுப்பினர்கள் ஐவரைக் கொண்ட இலங்கை நிறைவேற்றுப் பேரவை (தலைமைச் செயலர், சட்டமா அதிபர், கணக்காய்வுத் தலைவர், பொருளாளர், பொதுப் படைத்தலைவர்), 04 அரச ஊழியர்கள் (மேல் மற்றும் மத்திய மாகாண அரச அதிபர்கள் அடங்கலாக) மற்றும் அதிகாரபூர்வமற்ற வகையில் நியமிக்கப்பட்ட 06 உறுப்பினர்கள் (மூன்று ஐரோப்பியர்கள், ஒரு சிங்களவர், ஒரு தமிழர், மற்றும் ஒரு பறங்கியர்) ஆகியோரை உள்ளடக்கியுள்ளது. இவர்களில் அதிகாரபூர்வமற்ற ஆறு உறுப்பினர்களுக்கும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர அதிகாரம் வழங்கப்படவில்லை. ஆனால் சட்டமூலத்துக்கான விவாதங்களில் மட்டுமே இவர்கள் பங்குபற்ற முடியும். இதன் ஊடாக பிரித்தானிய இலங்கை நிர்வாகத்தில் உள்நாட்டு மக்களின் குரலைக் கொண்டுவர மேற்கொள்ளப்பட்ட முதலாவது முயற்சி இதுவாகும். என்றாலும் 1889 இல் அதிகாரபூர்வமற்ற வகையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரிக்கப்பட்டது. இதன்படி மூன்று ஐரோப்பியர்கள், ஒரு தென்னிலங்கைச் சிங்களவர், ஒரு கண்டியச் சிங்களவர், ஒரு தமிழர், ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு பறங்கியர் என்றபடி நியமிக்கப்பட்டனர்.

1910 இல் சட்டசபைக்கு மெக்கலம் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் உறுப்பினர்களின் எண்ணிக்கை 18 இலிருந்து 21 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்களில் 11 பேர் அதிகாரபூர்வமாகவும், 10 பேர் அதிகாரபூர்வமற்ற வகையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களில் 06 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர் (இரண்டு தென்னிலங்கைச் சிங்களவர், இரண்டு தமிழர், ஒரு கண்டியச் சிங்களவர், ஒரு முஸ்லிம்). ஏனைய நால்வரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (இரண்டு ஐரோப்பியர்கள், ஒரு பறங்கியர், மற்றும் ஒரு இலங்கைக் கல்விமான்). மக்களால் தேர்ந்தெடுக்கப்படல் இச்சீர்திருத்தத்தின் முக்கியமான அம்சமாகும்.

ஆனாலும் கல்வி மற்றும் சொத்து அடிப்படையிலேயே வாக்களிக்கும் தகைமை கணிக்கப்பட்டது. இதன்படி, 3,000 இற்கும் குறைவானோரே (4%) வாக்களிக்கத் தகுதியுடையோராக இருந்தனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டோரில் ஒருவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆவார். வருவாயைக் கவனிப்பதற்கெனெ நிதிக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.1920 இல் மேலும் சீர் திருத்தங்கள் மானிங் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் படி, உறுப்பினர்கள் எண்ணிக்கை 21 இலிருந்து 37 ஆக அதிகரிக்கப்பட்டது. இவர்களில் 14 பேர் அதிகாரபூர்வமானவர்களாகவும் 23 பேர் அதிகாரபூர்வமற்றவர்களாகவும் இருந்தனர். அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களில் நால்வர் தேசாதிபதியினாலும் (இரண்டு கண்டிச் சிங்களவர், ஒரு முஸ்லிம் மற்றும் ஒருவர் இந்தியத் தமிழர்) ஏனையோர் (11 பேர் பிராந்திய ரீதியாக, 05 ஐரோப்பியர், 02 பரங்கியர், ஒரு வணிகக் கழகத்தவர்) தேர்தல் மூலமும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

11 பிராந்தியப் பிரதிநிதிகளில் மூவர் மேற்கு மாகாணத்தில் இருந்தும், ஏனைய 08 மாகாணங்களிலும் இருந்து ஒவ்வொருவர் படியும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் நிறைவேற்றுப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1923 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டாவது மானிங் சீர்திருத்தங்களை அடுத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 இலிருந்து 49 ஆக அதிகரிக்கப்பட்டது. இவற்றில் 12 பேர் அதிகாரபூர்வமானவர்களாகவும், 37 பேர் அதிகாரபூர்வமற்றவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களில், 8 பேர் (இவர்களில் மூன்று முஸ்லிம்கள், இரண்டு இந்தியத் தமிழர்கள் அடங்குவர்) தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். ஏனைய 29 பேரும் (23 பேர் பிராந்திய ரீதியாகவும், 3 ஐரோப்பியர்களும், இரண்டு பறங்கியர்களும், மேல் மாகாணத்தில் இருந்து ஒரு இலங்கைத் தமிழரும்) தேர்தல் மூலம் தேர்தெடுக்கப்பட்டனர்.

23 பிராந்தியத் தொகுதிகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டன. மத்திய மாகாணம் 2, கிழக்கு மாகாணம் 2, வட மாகாணம் 5, வட மத்திய மாகாணம் 1, வடமேற்கு மாகாணம் 2, சப்ரகமுவ மாகாணம் 2, தென் மாகாணம் 3, ஊவா மாகாணம் 1, மேல் மாகாணம் 5 என்றபடி பிரிக்கப்பட்டிருந்தன.

இலங்கைச் சட்டசபையின் தலைவராக தேசாதிபதி இருந்தார். ஆனாலும் புதிய சீர்திருத்தங்களை அடுத்து சட்டசபைத் தலைவர் பதவி உருவாக்கப்பட்டு அதன் தலைவராக தேசாதிபதியே விளங்கினார். சட்டசபைப் பிரதித் தலைவர் பதவிக்கு உறுப்பினர்களில் ஒருவரான ஜேம்ஸ் பீரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனாலும், தேசாதிபதியே நாட்டின் பெரும்பாலான அதிகாரத்தைக் கொண்டிருந்தார். நிறைவேற்றுப் பேரவையின் ஒரு பகுதியாக அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களில் நால்வர் செயற்குழுவில் அங்கத்துவம் பெற்றார்கள்.



மானிங் சீர்திருத்தங்களில் காணப்பட்ட சில குறைபாடுகளை ஆராய்வதற்காக 1927 இல் டொனமூர் கோமகன் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு டொனமூர் ஆணைக்குழு என அழைக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவின் பரிந்துரையின் படி, டொனமூர் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி உரிமையைப் பெற்றது. 1931 ஆம் ஆண்டில் சட்டசபை கலைக்கப்பட்டு பதிலாக இலங்கை அரசாங்க சபை நிறுவப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பில் கீழ் (1947, 1972) இலங்கையின் சட்டவாக்கத்துறையானது இரண்டு மன்றங்களைக் கொண்டதாக இருந்தது. அவை பிரதிநிதிகள் சபை, செனட் சபை என விளங்கியது.

இரண்டு மன்றங்களும் இணைக்கப்பட்டு இறைமைமிக்க ஓரங்க மன்றத்தை உடையதாக தேசிய அரசப் பேரவை ஏற்படுத்தப்பட்டது. தேசிய அரசுப் பேரவை என்பது இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் படி 1972 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபை ஆகும். 1947 இல் உருவாக்கப்பட்ட இரு அங்க இலங்கை நாடாளுமன்றம் (இலங்கை பிரதிநிதிகள் சபை மற்றும் இலங்கை செனட் சபை) ஆகியவை இல்லாதொழிக்கப்பட்டு ஓரங்க முறைமையுடன் கூடிய தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளின் கூட்டு) ஏற்கனவே, 1947ம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறையில் இருந்த சோல்பரி அரசியலமைப்பிற்கு பதிலாக புதியதோர் அரசியல் அமைப்பினை உருவாக்கி, 1972 மே 22ம் திகதி பிரகடனப்படுத்தியது. இந்த அரசியலமைப்பு முதலாம் குடியரசு அரசியலமைப்பு எனப்படுகின்றது. 1972,1978 காலப்பகுதியில் சட்டவாக்கத்துறையான நாடாளுமன்றம் தேசிய அரசுப் பேரவை என்று கூறப்பட்டது. 1972 அரசியலமைப்பின் 77ம் உறுப்புரைப்படி, அமைக்கப்படும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு இணங்க மக்களால் வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மட்டுமே தேசிய அரசுப் பேரவை கொண்டிருக்கும்.

1974ம் ஆண்டில் நோயெல் தித்தவெல தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவானது தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கையை 168ஆக வரையறை செய்தது.

இதேவேளை 1978 இல் இரண்டாவது குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முக்கிய இடத்தை பெற்று விளங்குகின்றது. மக்களின் சட்டவாக்க இறைமை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பாராளுமன்றத்தின் ஊடாகப் பிரயோகிக்கப்படும்.

மக்களின் பாதுகாப்பு, நிர்வாக முறைமை என்பன ஜனாதிபதி, அமைச்சரவை ஊடாக நிறைவேற்றப்படும். நீதி, நிர்வாக இறைமை அதற்கென அமைக்கப்பட்ட நீதி நிறுவனங்கள் ஊடாக நிறைவேற்றப்படும். இந்த மூன்று துறைகளது அதிகாரமும் சட்டவாக்க அதிகாரத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்படும். மூன்று துறைகளிலும் சட்டவாக்க அதிகாரமே முக்கியமானது. நாட்டுக்குத் தேவையான சகல சட்டங்களையும் ஆக்கலாம், மாற்றலாம், நீக்கலாம்.பாராளுமன்றம் தனது சட்டவாக்க அதிகாரத்தைத் துறக்கவோ, கையளிக்கவோ, பாதிப்பு ஏற்படுத்தவோ முடியாது.

அதேநேரம், பாராளுமன்றத்திற்கு சமனான அதிகாரம் பொருந்திய எந்தவொரு தாபனத்தையும் உருவாக்க முடியாது. அதன் நிகழ்ச்சிகளின் மீதோ அல்லது அது செய்த, அது செய்யாது இருக்கும் அல்லது செய்யாதுவிட்ட எதன் மீதும் எந்த நீதிமன்றமோ அல்லது நீதியைப்பரிபாலிக்கும் எந்தவொரு நிறுவனமோ நீதிப்பரிபாலனம் செய்ய முடியாது.

1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பில் கடந்த 42 வருட காலப்பகுதியில் 19 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை நாட்டின் ஜனநாயகத்தையும் ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பையும் மேலும் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இவ்வாறான சூழலில் புதிய அரசாங்கம் மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப 20 திருத்தத்தை அறிமுகப்பட உள்ளது.

இவ்வாறு காலனித்துவத்திலிருந்து இற்றை வரையும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமை பலப்படுத்தப்பட்டு மேம்படுத்தபட்டுள்ளது.

கே.ஈஸ்வரலிங்கம்...



## சவால்களை வெற்றிக்கொள்ளும் பலம்மிக்க தலைமைத்துவம்... (19ஆம் பக்கத் தொடர்)

அதேநேரம், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யவென சுயாதீன ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்தல், சட்டத்தை மீறியுள்ள அனைவரையும் பகிரங்கப்படுத்தல், குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்தல், தாக்குதலால் காயமடைந்தவர்களுக்கு அரச அனுசரணையுடன் சிகிச்சை அளித்தல் போன்ற பல விடயங்களும் அரசின் முன்பாக உள்ளது.

இவை இவ்வாறிருக்க, போதைப்பொருள் பாவனையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசின் மற்றொரு முக்கிய எதிர்பார்ப்பாகும். அதற்காக புதிய சட்ட திட்டங்கள் பல கொண்டுவரப்பட உள்ளது. நாட்டிற்குள் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலைத் தடுத்தல், போதைப்பொருள் பாவனையிலிருந்து பாடசாலைப் பிள்ளைகளை மீட்டெடுத்தல், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் என்பனவும் அரசாங்கத்தின் முன்பாக உள்ள விடயங்களாகும்.

சிறந்த குடி மகன் மற்றும் மகிழ்ச்சியாக வாழும் குடும்பத்தை உருவாக்குவதும் அரசின் நோக்கமாக இருப்பதால் அதற்கான விசேட திட்டமொன்றும் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. பிள்ளைகளின் கல்விக்காக ஆரம்ப சிறுவர் மேம்பாட்டிலிருந்தே வெற்றிகர நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு எதிர்பார்த்துள்ளது.

அதற்கான விசேட திட்டமும் பல பயிற்சிகளும் 'சுபீட்சத்தின் நோக்கின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

மக்களை மையமாகக்கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது அரசின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக விளங்குகின்றது. அதன் நிமித்தம் 2020, 2025 பொருளாதார இலக்கை அடைந்துகொள்வதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

பொருளாதார வளர்ச்சி வேகத்தை நூற்றுக்கு 6.5 வீதமாக அதிகரிக்கவும் தனிநபர் வருமானத்தை 6500 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தல்,வருடாந்த பணவீக்க வீதத்தை நூற்றுக்கு 05 வீதத்திற்கும் குறைவாகப் பேணல், வரவு செலவுப் பற்றாக்குறையை மொத்த உற்பத்தியின் விகிதத்தில் நூற்றுக்கு 04 வீதமாகக் குறைத்தல், தனி இலக்கத்தில் வட்டி வீதத்தைப் பேணுதல், ரூபாவின் பெறுமதியை நிலையான மட்டத்திற்கு கொண்டு வருதல் என்பனவும் புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களாக உள்ளன.

மக்களை மையப்படுத்தியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தையும் இந்நாட்டிலேயே உற்பத்தி செய்தலும் அரசின் நோக்கமாக உள்ளது. தென்னை, இறப்பர், தேயிலை போன்ற பெருந்தோட்ட ஏற்றுமதி பயிர்களைப் பயிரிடுவதும், விவசாயிகளின் நலன்கள், காணிகளிலிருந்து கிடைக்கும் பலனை அதிகரித்தல் என்பன குறித்தும் அரசு கவனம் செலுத்தியுள்ளது. தேசிய உற்பத்தி கைத்தொழில்களை மேம்படுத்தல், சீனி உற்பத்தியை அதிகரித்தல் போன்ற விசேட நோக்கங்களையும் அரசாங்கம் கொண்டிருக்கின்றது.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை ஏற்படுத்தி இலங்கையைப் புதிய உற்பத்தி மத்திய நிலையமாக மாற்றுவதும் அரசின் மற்றொரு நோக்கமாகும். அதேபோன்று பேண்தகு சுற்றாடல் கொள்கையொன்றை உருவாக்கவும் புதிய நிகழ்ச்சிகள் பலவற்றை எதிர்காலத்தில் செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறந்த பிரஜைகளை உருவாக்க மத அனுஷ்டானங்களுக்கு முன்னுரிமை அளித்தல், சமூக நியாயங்களுக்காக சட்டங்களை தயாரித்தல், எதிர்கால சந்ததியினருக்காக வரலாறு, தொல்பொருள் மற்றும் தேசிய மரபுரிமையை சிறப்பாகப் பாதுகாக்கவும் பல திட்டங்களும் செயற்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறு பரந்தடிப்படையில் பாரிய நோக்கங்கள் பலவற்றை அடைந்து கொள்ள புதிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அவற்றை நிறைவேற்றி அடைந்துகொள்ளவென பாரிய முயற்சிகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் கரிசனை காட்டியுள்ளது. அதனால் நாடு வளமான தேசமாகும் காலம் வெகுதொலைவில் இல்லை என உறுதிபடக் கூறலாம்.

# இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6081(EL) | 09 Nos. Indoor Type 12KV/630A rated Switchgear Panels and accessories for Port of Galle | 250,000.00 | 3,500.00 | 2020.09.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/20/ PT/08/007 | 01 No. 30T Hydraulic Puller with all accessories & carriage | 20,000.00 | 1,000.00 | 2020.09.10ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/20/ PT/08/053 | 750 Metres 120SQMM 4 Core 600/1000V/ CU/XLPE/SWA/PVC Cable | 57,100.00 | 1,000.00 | 2020.09.11ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு கண்டிப்பாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குனரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2020 ஓகஸ்ட் 21 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**
**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நகர சபை - திருகோணமலை

ஒப்பந்த தலைப்பு :- **திருகோணமலை - 2020 - டொக்யார்ட் வீதி, பெரியகடையில் மூன்று மாடி பலநோக்கு கட்டிட மீள்நிர்மாணம்.**

விலைமனு இலக்கம் :- **TUC/WD//Cou.fund.Peri-Kade/2020/07**

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு, திருகோணமலை, டொக்யார்ட் வீதி, பெரியகடையில் மூன்று மாடி பலநோக்கு கட்டிட மீள்நிருமாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை திருகோணமலை, நகர சபை குழுத்தலைவரின் சார்பில் பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடைபெறும். இப்பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவானதினால், 04/2016(ii) என்ற இலக்கமும் 2019.05.08ஆம் திகதியையுமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் தனிக்கட்ட-தனிஉறை முறைமையில் நடாத்தப்படும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்கான தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **026-2222274 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, 026-2220552 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக மற்றும்** uctrinco@gmail.com ஆகியவற்றினூடாக திருகோணமலை, நகர சபை செயலாளரிடமிருந்து பெற்று, அலுவலக நேரங்களில் மேலேயுள்ள அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக அவற்றை இலவசமாக பரீட்சிக்கலாம்.

7. **2020.08.20ஆம் திகதியிலிருந்து 2020.09.09ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் திருகோணமலை நகர சபை தலைவரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை** செலுத்தியமைக்கான சான்றாக பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்களை எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

8. **2020.09.10ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைக்கான தொகை இணைக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் திருகோணமலை, நகர சபை தலைவருக்கு கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் / விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

9. திருகோணமலை, டொக்யார்ட் வீதி, நகரசபை மண்டபத்தில் 2020.08.31ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

| பணிப்பெயர் | தேவைப்படும் CIDA தரம் மற்றும் விஷேடத்துவம் | பெசேவ நீங்கலாக நிர்மாண ஆகுசெலவு (மி.ரு.) | ஒப்பந்தக் காலப் பகுதி | விலைமனு செல்லு படியாகும் காலப்பகுதி | தேவைப்படும் விலைமனுப்பிணை: தொகை (ரூபாவில்) | தேவைப்படும் விலைமனுப்பிணை: திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை, டொக்யார்ட் வீதி, பெரியகடையில் மூன்று மாடி பலநோக்கு கட்டிட மீள்நிர்மாணம் | சி-04 மற்றும் சி-05 | 27.042 மில்லியன் ரூபா | 09 (ஒன்பது) மாதங்கள் | 91 நாட்கள் | 271,000.00 | 119 நாட்கள் - 2021.01.06 வரையும். |

**N. Rajanayagam,**
**தலைவர்,**
**நகர சபை,**
**திருகோணமலை.**
19.08.2020.

# ஈடுவைக்கப்பட்ட தங்க நகைகளின் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட பூஜாப்பிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

- அங்கும்புர
- பூஜாப்பிட்டிய
- முல்லேகம
- உடகம

ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2019.02.28ம் திகதி உட்பட அத்தினம் வரை ஈடுவைக்கப்பட்டு 2020.09.12ம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2020.09.12 மு. ப. 10.00 முதல் பி. ப. 3.00 வரை பூஜாப்பிட்டிய சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையாளர்,**
**வ/ப பூஜாப்பிட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பூஜாப்பிட்டிய.**
2020.08.08ம் திகதி

# மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளாக செயற்படும் வரையறுக்கப்பட்ட பியகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிக் கிளைகளான கடவத்த, மாக்கொல, மாவரமண்டிய, மல்வானை, தெல்கொட, பட்டிவில, பியகம, கல்பொத்த, மீகஹவத்த, ஹெய்யன்துடுவ, பொல்லேகல, பஹலபியன்வில, கோனவல, பவர்ஹவுஸ் ஆகிய கிராமிய வங்கிகளில் 2018.09.30ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2020.09.11 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2020.09.12 மற்றும் 13ஆம் திகதிகளில் முற்பகல் 10.30 இற்கு மாவரமண்டியவில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட பியகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட பியகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கூட்டுறவு இல்லம்**
**மாவரமண்டிய, சியம்பலாப்பே**
**தெ.பே.இல. 0112977199/ 0112977071**

# மாவட்ட பொது வைத்தியசாலை – பொலன்னறுவை

## விலைமனுக்கோரலில் திருத்தம் செய்தல்

### (தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல்)

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதியர் விடுதிக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலைகள் Prosthetist & Orthotist பிரிவுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், குப்பை பைகளை வழங்குதல் மற்றும் 2020 - 2021 வருடங்களில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கு இயைபுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களை நியமித்துக் கொள்வதற்கு இயைபான பெறுகை அறிவித்தல்

I. 2020-08-07ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பெறுகை அறிவித்தல் தொடர்பானது.
II. அந்த பெறுகை அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**01. மகளிர் தாதியர் விடுதிக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்**

| தொ. இல. | உருப்படி | எண்ணிக்கை | லொட் இலக்கம் | கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| I | மர அலுமாரி | 40 | 01 | DGHP/ACC/F8/08-01/2020 | 65,000.00 |
| II | கண்ணாடி மேசை | 20 | | | |
| III | மரத்தாலான உணவு மேசை | 06 | 02 | DGHP/ACC/F8/08-02/2020 | 12,000.00 |
| IV | உணவு மேசை கதிரைகள் | 80 | | | |

**02. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள்**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | ICTAD தரம் |
|---|---|---|---|---|
| I | புதிய மருத்துவ வாட்டு (பீ) கட்டிடத் தொகுதியிலிருந்து பிரதான மருந்து களஞ்சியசாலை வரையில் கொரிடோவை அமைத்தல் | DGHP/ACC/F8/20 – 05 / 2020 | 190,600 .00 | C7 மற்றும் C6 மட்டும் |
| II | வெளி நோயாளர் பற் சிகிச்சை மற்றும் சடல அறைக்கிடையில் உள்ள வாகனத் தரிப்பிடத்தை விஸ்தரித்தல் | DGHP/ACC/F8/20 – 06 / 2020 | 110,550 .00 | C7 மற்றும் C6 மட்டும் |

**03. Prosthetist & Orthotist பிரிவுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்**

| தொ. இல. | உருப்படி | எண்ணிக்கை | லொட் இலக்கம் | கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | Vacuum Pump & Suction Unit | 01 | 01 | DGHP/ACC/F8/43 – 01 /2020 | 125,000.00 |
| 2 | Tube Enveloping Suction | 01 | | | |
| 3 | Oven (Inside 100x110x40 cm)CRE | 01 | | | |
| 4 | Router Orbital Sander 2 Speed | 01 | | | |
| 5 | Welding Mirror | 01 | 02 | DGHP/ACC/F8/43 - 02 /2020 | 70,000.00 |
| 6 | Oscillating Electrical Saw | 01 | | | |
| 7 | Dust Collector Unit | 01 | | | |
| 8 | Vacuum Cleaner | 01 | 03 | DGHP/ACC/F8/43 – 03 /2020 | 2,500.00 |
| 9 | High Speed Sewing Machine | 01 | | | |
| 10 | Bench Grinder | 01 | | | |

**04. வழங்கல்கள் - குப்பை பைகள்**

| விபரங்கள் | வருடாந்த தேவைகளின் எண்ணிக்கை | கோவை இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 1. 2020/2021ஆம் வருடத்தில் கழிவுப் பொருட்களை அகற்றும் உறைகளை வழங்குதல் • மஞ்சள் நிறப் பைகள் • கறுப்பு நிறப் பைகள் • செம்மஞ்சள் நிறப் பைகள் • பச்சை நிறப் பைகள் | 75,000 75,000 50,000 50,000 | DGHP/ACC/F8/03 – GB/2020 | 50,000.00 |

**05. சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் - 2020 - 2021**

| தொ. இல. | விபரம் | கோவை இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் - 2020 - 2021 | DGHP/ACC/F8/42/2020 | 24,000.00 |

01. ஒவ்வொரு விடயத்திற்குமான விலைமனு ஆவணக் கட்டணம் 3,500.00 ரூபாவாகும்.
02. சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் - 2020 - 2021 ஒப்பந்தத்திற்காக மட்டும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) 2020-08-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
03. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விலைமனு ஆவணக் கட்டணமாக இந்த வைத்தியசாலையின் கணக்காளருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தேசிய போட்டி விலைக்கோரலின் கீழ் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படும்போது 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த நிர்மாணங்களுக்காக பிராந்திய தேர்வாக 5% மற்றும் CIDA தேர்வு, 4/2016(II) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (Regional Preference)
05. விலைக்கோரல்கள் தொகுதிவாரியாக தரப்பட்டுள்ளன என்பதுடன், ஒரு தொகுதியிலுள்ள சகல உருப்படிக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் உருப்படி தொகுதிவாரியாக மதிப்பீடு செய்யப்படும். அவ்வாறே தொகுதிக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது பிரதியீடுகளுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியாது.
06. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
07. ஆர்வம் கொண்ட மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள்/ முகவர்கள் அல்லது பெயரிடப்படுபவர்களால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியில் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    i. மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வரையப்பட்ட எழுத்து மூலக் கடிதம்
    ii. மேற்காணும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
08. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 371) எனும் தொலைபேசி இலக்கங்களின் வாயிலாக விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2020-09-02ம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கடமை நாட்களில் மட்டும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கிரய முகாமைத்துவம் மற்றும் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அவ்வேளையிலேயே இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
09. பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2020-09-03ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து (அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு) விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் கலந்து கொள்வாரானால் அதை உறுதி செய்யும் ஆவணத்தை நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. இந்தப் பெறுகை தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**பொலன்னறுவை.**
2020-08-17.

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact → MANAGER FRONT OFFICE → Hotline: 1949
LAKE HOUSE

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **எம் எஸ் ஆர் ஐ டீ லங்கா (பீவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்: PV 00225524

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.05

பதிவு முகவரி: **லெவல் 28, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு-01**

**மஹேஸ்வரன் பிரனவன்**

**BBK பார்ட்னர்சிப் (பிவீடீ) எல்டிடீ**

**கம்பனி செயலாளர்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **எஸ்.டீ.ஆர் கொயர் (பீவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்: PV 00225655

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.09

பதிவு முகவரி: **192, யூனியன் குளம், கோனாவில், கிளிநொச்சி**

**மஹேஸ்வரன் பிரணவன்**

**BBK பாரட்னர்சிப் (பிவீடீ) எல்டிடீ**

**கம்பனி செயலாளர்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **செரெக்ஸியோ (பீவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்: PV 00225352

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.02

பதிவு முகவரி: **இல. 68, 6/3, ஹம்டன் லேன், கொழும்பு-06.**

**மஹேஸ்வரன் பிரனவன்**

**BBK பாரட்னர்சிப் (பிவீடீ) எல்டிடீ**

**கம்பனி செயலாளர்கள்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **இஷா ∴ பார்ம் (பீவீடீ) எல்டீடி**

பதிவிலக்கம்: PV 00224760

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.07.23

பதிவு முகவரி: **212, கனக்கன்பனை, சுந்தரபுரம், வாசாவிளான் கிழக்கு**

**மஹேஸ்வரன் பிரனவன்**

**BBK பாரட்னர்சிப் (பிவீடீ) எல்டிடீ**

**கம்பனி செயலாளர்கள்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைப்பு தொடர்பாக வழங்கல்படும் அறிவித்தல்.

கம்பனியின் பெயர்: **ஸ்டனின் அக்கடமி லங்கா (பீவீடி) எல்டிடீ**

கம்பனி இலக்கம்: பிவீ 00211290

பதிவுத் திகதி: 2019.04.26

முகவரி: **எல் சி 36, விமானநிலைய வீதி, அநுராதபுரம்.**

**கம்பனிச் செயலாளர்கள்**

---

வர்த்தக அமைச்சு

## இலங்கை கட்டளைகள் நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

2020.09.11ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் கீழே விபரிக்கப்பட்டுள்ள உபகரணத்தின் கொள்வனவிற்காக வளமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை கட்டளைகள் நிறுவன திணைக்கள பெறுகைக்குழுவின் (கீழ்மட்ட ஒப்பந்தங்கள்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுதாரர்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பும்படி அல்லது இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாக பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2020.08.21ஆம் திகதியிலிருந்து 2020.09.10ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 3,000 இலங்கை ரூபா மற்றும் பெசேவ ஆகியவற்றை மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர், நிருவாகத்திற்கான பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

1. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் சாதாரண அலுவலக நேரங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாகப் பிரிவில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
2. விதிக்கப்பட்ட நேரம் மற்றும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், அதே நாளில் உடனடியாகவே திறக்கப்படும்.
4. விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் பங்கு பெறலாம்.

| குறிப்பீட்டு இலக்கம் | உபகரணம் | விலைமனுப்பிணை |
|---|---|---|
| SLSI/AD/PRO/NCB/2020-1 | தானியங்கி கழுவும் இயந்திரம் (Type A) மற்றும் Tumble உலர்த்தியின் (Type AI) வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பயிற்சியளித்தல் | 50,000 இலங்கை ரூபா |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு (கீழ்மட்ட ஒப்பந்தங்கள்),**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல.: 17, விக்டோரியா பிரதேசம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
**வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## விலைமனுக்கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) (ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் | ICTAD தரம் | காப்புறுதிப் பிணைத்தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| RDA/DC/NP/DEPOSIT/2020/40 | வெலிஓய சம்பத்நுவர தொடக்கம் கஜபாபுர வீதியை மேம்படுத்தல் (கி.மீ.1.95) | 45.8 | 301 | C4 | 750,000.00 |

02. அடித்தளம், உப அடித்தளம், வீதி நுழைவுகள், எஸ்ஃபல்ட் விரித்தல் மற்றும் சதுர வடிவிலான கால்வாய்களை நிர்மாணித்தல் இந்த வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்படும்.

03. மனுக்கோரல்கள் தேசிய மனுக்கோரல்கள் போட்டி நடைமுறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் CIDA தரங்களில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் காரியாலய நேரங்களில் மனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

அ) மாகாண பணிப்பாளர் (வட மாகாணம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை, கண்டி வீதி,
வவுனியா.
தொலைபேசி: 024-2222826 பெக்ஸ்: 024-2220679

ஆ) பணிப்பாளர் (கட்டுமானம்)
வீதி அபிவிருத்தி அதிகார சபை
3ஆம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர", 216
டென்சில் கொபேகடுவ மாவத்தை
பத்தரமுல்லை.
தொலைபேசி: 011-2864388 பெக்ஸ்: 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் 2020.08.27 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு மாகாண பணிப்பாளர் (வட மாகாணம்), கண்டி வீதி, வவுனியா காரியாலயத்தில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.

07. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2020.08.20 ஆம் திகதியிலிருந்து 2020.09.09 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூபா 12,500 (வட் வரிகளுக்கு உட்படாத) கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை மாகாண பணிப்பாளர் (வட மாகாணம்), கண்டி வீதி, வவுனியா அல்லது பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தை, இலக்கம் 216 என்ற முகவரியில், மஹாநெகும மஹா மெதுர, 03ஆம் மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்) சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், 2021.01.07 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மனுக்கள் 2020.12.10 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் 2020.09.10 ஆம் திகதி 14.00 மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், பணிப்பாளர் நாயகம் பொறுப்பில், வீதி அபிவிருத்தி அதிகார சபை, முதலாம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர" இலக்கம் 216, டென்சில் கொபேகெடுவ மாவத்தை, பத்தரமுல்லை என்கின்ற முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்
வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கற் சபை
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
01ஆம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர"
இலக்கம் 216, டென்சில் கொபேகெடுவ மாவத்தை, பத்தரமுல்லை

---

பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை கடற்படை

## விலைமனுக்களை திறப்பதற்கான கால நீடிப்பு அறிவித்தல்

**இலங்கை கடற்படையின் கப்பல்கள் / முகாம்களுக்கான மூல / உலர் உணவுப் பொருட்களின் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2021 ஆம் ஆண்டு**

**ஒப்பந்த அடையாள இலக்கம் : SLN/VICT/01/2021**

01. இலங்கை கடற்படையின் கப்பல்கள் / முகாம்களுக்கு மூல / உலர்ந்த உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்காக, முப்படைகளுக்கு உணவுகளை கொள்வனவு செய்வதற்கும் நியமிக்கும் வழங்கற் சபை தலைவரினால் 2020.07.15 ஆம் திகதி டெய்லி நியுஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் 2020.07.19 ஆம் திகதி சிலுமின, வாரமஞ்சரி மற்றும் சன்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விலைமனுக்கள் கோரப்பட்டன. குறித்த விலைமனுவில் (IFB) உருப்படி 06 இல் குறிப்பிடப்பட்ட திகதிகள் மற்றும் நேரம் என்பன கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | 2020.08.27 ஆம் திகதி பி.ப 0400 மணி வரை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | 2020.08.28 ஆம் திகதி மு.ப 0900 மணி வரை |
| விலைமனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் | 2020.08.28 ஆம் திகதி மு.ப 0900 |

02. மேற்குறித்த திகதி மற்றும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய நிபந்தனைகள் மேற்குறிப்பிட்ட 01 ஆவது உருப்படியில் குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு ஏற்ப உள்ளடக்கப்படும்.

03. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள கீழ்காணும் முகவரிக்கு சமூகமளித்து அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

முகவரி : பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீருடை)
கடற்படை தலைமையகம்,
த.பெ இல 593
கொழும்பு 01

தொலைபேசி இல : 011-7190000, நீடிப்பு - 12351, 12353, 12354
011-7192351

பெக்ஸ் : 011-2424577

மின்னஞ்சல் : nhqdnvc@navy.lk

தலைவர்,
அமைச்சர் சபையால் நியமிக்கப்பட்ட
நிலையான வழங்கற் சபை
(இராணுவத்தினருக்கு மூல மற்றும் உலர்ந்த உணவு வழங்கல்)
பாதுகாப்பு அமைச்சு
15/5, சாரணர் மாவத்தை,
கொழும்பு - 03

---

பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை இராணுவம்

## விலைமனுக்களை திறப்பதற்கான கால நீடிப்பு அறிவித்தல்

**2021 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்திற்கு புதிய உலர் மற்றும் பச்சை உணவுப்பொருட்களின் வழங்கல் தொடர்பான கொள்முதல்**

**ஒப்பந்த இல: *S&T/3/உலர் உணவுப்பொருட்கள்/ புதிய உணவுப்பொருட்கள் /2021 (17)***

01. இலங்கை இராணுவத்திற்கு புதிய உலர் மற்றும் பச்சை உணவுப்பொருட்களினை கொள்வனவு செய்வதற்காக, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கற் சபை தலைவரினால் 2020.07.15 ஆம் திகதி டெய்லி நியுஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் 2020.07.19ஆம் திகதி சிலுமின, வாரமஞ்சரி மற்றும் சன்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விலைமனுக்கள் கோரப்பட்டன. குறித்த விலைமனுவில் (IFB) உருப்படி 06 இல் குறிப்பிடப்பட்ட திகதிகள் மற்றும் நேரம் என்பன கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம்** | **2020.08.27 ஆம் திகதி பி.ப 0400 மணி வரை** |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம்** | **2020.08.28 ஆம் திகதி மு.ப 0900 மணி வரை** |
| **விலைமனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம்** | **2020.08.28 ஆம் திகதி மு.ப 1000** |

02. மேற்குறித்த திகதி மற்றும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய நிபந்தனைகள் மேற்குறிப்பிட்ட 01 ஆவது உருப்படியில் குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு ஏற்ப உள்ளடக்கப்படும்.

03. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள கீழ்காணும் முகவரிக்கு சமூகமளித்து அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

முகவரி : வழங்கல் மற்றும் போக்குவரத்துக்கான இயக்குனரகம்
இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கொழும்பு.

தொலைபேசி : 011-2302569, 011-2302568,
பெக்ஸ் : 011-2302569
கர்னல் : 076-6907201
மேஜர் I (செ) : 076-5303689

தலைவர்,
அமைச்சர் சபையால் நியமிக்கப்பட்ட
நிலையான வழங்கற் சபை
( இராணுவத்தினருக்கு மூல மற்றும் பச்சை மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல்)
**பாதுகாப்பு அமைச்சு**
15/5, சாரணர் மாவத்தை,
கொழும்பு - 03

---

பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை விமானப்படை

## விலைமனுக்களை திறப்பதற்கான கால நீடிப்பு அறிவித்தல்

**2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை விமானப்படைக்கு புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்களின் வழங்கல் தொடர்பான கொள்முதல்**

**ஒப்பந்த இல: SLAF/RA/TB/2021**

1. இலங்கை விமானப்படைக்கு புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்களினை கொள்வனவு செற்வதற்காக, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கற் சபை தலைவரினால் 2020.07.15 ஆம் திகதி டெய்லி நியுஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் 2020.07.19ஆம் திகதி சிலுமின, வாரமஞ்சரி மற்றும் சன்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்து விலைமனுக்கள் கோரப்பட்டன. குறித்த விலைமனுவில் (IFB) உருப்படி 06 இல் குறிப்பிடப்பட்ட திகதிகள் மற்றும் நேரம் என்பன கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| **விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம்:** | **2020.08.27 ஆம் திகதி பி.ப 0200 மணி வரை** |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம்:** | **2020.08.28 ஆம் திகதி மு.ப 0900 மணி வரை இலங்கை விமானப்படை கொழும்பு முகாமில்** |
| **விலைமனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம்:** | **2020.08.28 ஆம் திகதி பி.ப 1200 இலங்கை விமானப்படை தொழிற்பயிற்சி கல்லூரி ஏகல** |

02. மேற்குறித்த திகதி மற்றும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய நிபந்தனைகள் மேற்குறிப்பிட்ட 01 ஆவது உருப்படியில் குறிப்பிடப்பட்ட பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு ஏற்ப உள்ளடக்கப்படும்.

03. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை தெரிந்துகொள்ள கீழ்காணும் முகவரிக்கு சமூகமளித்து அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

முகவரி : பிரதான வழங்கல் அதிகாரி
இலங்கை விமானப்படை தலைமையகம்,
இல. 140, சேர். சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02.

தொலைபேசி : 011 2441044 / 011 2441553

தொலைநகல் : 011 2441553

பிரதான வழங்கல் அதிகாரி : 011 2325468

தலைவர்,
அமைச்சர் சபையால் நியமிக்கப்பட்ட
நிலையான வழங்கற் சபை
(முப்படைகளுக்கான மூல மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல்)
**பாதுகாப்பு அமைச்சு**
15/5, சாரணர் மாவத்தை,
கொழும்பு - 03

## தேசிய லொத்தர் சபை

**நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு**

# பதவி வெற்றிடங்கள்

**பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேசிய லொத்தர் சபையானது விண்ணப்பங்களை கோருகின்றது.**

### பிரதி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பவியல்) ஏச்எம் 1 – 1

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

1. அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம், கணனி பொறியியல், தகவல் விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

அத்துடன்

ஆ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட பாடப்பரப்பில் (தகவல் முறைமைகள், வலையமைப்புசார் மற்றும் வலையமைப்பு பாதுகாப்பு, இணைய அடிப்படையிலான தொழில்நுட்பவியல், சுயதரவு முறைமை, கண்காணித்தல் மற்றும் தரவு பாதுகாப்பு துறையில் ஆராய்ச்சி ஆய்வுக்கட்டுரையில் பட்டமாணிப் பட்ட முதுமாணிப் பட்டம் மற்றும் பதவிக்கான பாடப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் இணைந்த அங்கத்துவம்

மற்றும்

இ. பதவிக்கு உரித்தான கூட்டுத்தாபனமொன்றில் /நியதிச்சட்ட சபையில் /நிறுவனமொன்றில் நிர்மாண மட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் அல்லது பாடப்பரப்பொன்றில் புகழ்வாய்ந்த தனியார் நிறுவனத்தில் கணனி விஞ்ஞானம், கணனி பொறியியல், தகவல் விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்.

2. அ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணனி விஞ்ஞானம், கணனி பொறியியல், தகவல் விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பவியல் துறையில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று.

அத்துடன்

ஆ. பதவிக்குரித்தான தகவல் முறைமைகள், வலையமைப்புசார் மற்றும் வலையமைப்பு பாதுகாப்பு, இணைய அடிப்படையிலான தொழில்நுட்பவியல், தரவு அடிப்படையிலான முறைமைகள், கண்காணித்தல் மற்றும் தரவு பாதுகாப்பு ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்.

மற்றும்

இ. பதவிக்கு உரித்தான கூட்டுத்தாபனமொன்றில் /நியதிச்சட்ட சபையில் /நிறுவனமொன்றில் நிர்மாண மட்டத்தில் ஆகக் குறைந்தது 10 வருட அனுபவம் அல்லது பாடப்பரப்பொன்றில் புகழ்வாய்ந்த தனியார் நிறுவனத்தில் கணனி விஞ்ஞானம், கணனி பொறியியல், தகவல் விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்.

- வயது : 35-55 வயதிற்கிடைப்பட்டது.
- சம்பள அளவுத்திட்டம் : ஏச்எம். 1-1 80,295-15x 2,270 = 114,345 ரூபா.

**தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் பின்வருவனவிற்கு தகுதியுள்ளவர்களாகவிருப்பார்கள்.**

வாகனம் + எரிபொருள்
மாதாந்த ஊக்குவிப்பு
வருடாந்த மிகையூதியம்
மருத்துவ காப்புறுதி
அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள் (சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம்) இன்னும் பலவும்.

### உதவி / பொது முகாமையாளர் (சட்டம் மற்றும் சபை செயலாளர்) எம்எம் 1 – 1

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

சட்ட அல்லது புகழ்வாய்ந்த நிறுவனமொன்றில் வர்த்தக ரீதியிலான சட்ட விடயங்கள், வழக்குகள், நொத்தாரிஸ் மற்றும் செயலாளருக்காக பணிகள் ஆகியனவற்றை கையாளும் சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ் மற்றும் சத்தியபிரமாண ஆணையாளர் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சட்டத்தரணிகள் பட்டம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

- வயது: 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
- சம்பள அளவுத்திட்டம்: எம்எம் 1-1 53,175-10x1,375-15x 1,910 = 95,575 ரூபா.
- தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சம்பளத்திற்கு மேலதிமாக பின்வரும் கவர்ச்சிகரமான அனுகூலங்களுக்கான தகுதியைப் பெற்றுக் கொள்வார்கள்.

மாதாந்த ஊக்குவிப்பு
வருடாந்த மிகையூதியம்
மருத்துவ காப்புறுதி
அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள் (சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம்) இன்னும் பலவும்.

### உதவி/ பொது முகாமையாளர் (நிதி) எம்எம் 1 – 1

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் மற்றும் நிதி ஆகிய துறைகளில் பெற்ற பட்டதாரிப் பட்டமொன்று மற்றும் கணக்கிடல் மற்றும் நிதி ஆகியவற்றில் அரசாங்க திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனம் / சபை அல்லது புகழ்வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 01 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.
02. இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவக இடைநிலை மட்ட தகைமை அல்லது பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகம் அல்லது சான்றிதழ் வழங்கப்பட்ட மற்றும் கூட்டுரு கணக்காளர்கள் சங்க இடைநிலை மட்ட தகைமை அல்லது கணக்கியலில் தேசிய உயர் டிப்ளோமா மற்றும் அரசாங்க திணைக்களமொன்றில்/ கூட்டுத்தாபனம் / சபை அல்லது புகழ் வாய்ந்த வர்த்தக தாபனமொன்றில் ஆகக் குறைந்தது 05 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

- வயது: 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.
- சம்பள அளவுத்திட்டம்: எம்எம் 1-1 53,175-10x1,375-15x 1,910 = 95,575 ரூபா.
- தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் சம்பளத்திற்கு மேலதிமாக பின்வரும் கவர்ச்சிகரமான அனுகூலங்களுக்கான தகுதியைப் பெற்றுக் கொள்வார்கள்.

மாதாந்த ஊக்குவிப்பு
வருடாந்த மிகையூதியம்
மருத்துவ காப்புறுதி
அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள் (சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம்) இன்னும் பலவும்.

- ஆங்கிலத்தில் சிறந்த அறிவு சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜைகளாக இருப்பதுடன், நல்ல குணவியல்புகளையும் கொண்டவராகவுமிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்ட பெயர், முகவரிகள் மற்றும் இரு பரிந்துரையாளர்களின் தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய சுயதரவுடனான விண்ணப்பம், அனைத்து சான்றிதழ்களின் பிரதிகள் ஆகியன பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான மூடும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், தேசிய லொத்தர் சபை, இல.: 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
- அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான திணைக்கள / நிறுவன தலைமையூடாகவே அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களின் மூடும் திகதியானது 2020.09.02 ஆம் திகதியாகும்.
- மூடும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.
- ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் 2020.01.30 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்களுக்கமைவாக விண்ணப்பித்த நபர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவ்வாறான விண்ணப்பங்கள் நேர்முகபரீட்சைக்கான செயன்முறைக்காக பயன்படுத்தப்படும்.
- எவ்விதத்திலும் ஆதரவு தேடுவது தகைமையை இழப்பதற்கான வழியை வகுக்கும்.
- தெரிவு செய்யும் பணிப்பாளர்கள் சபையினதும் ஆட்சேர்ப்பு குழுமத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய என் டபிள்யு ஜே முதலிகே மாவத்தை,**
**கொழும்பு-01.**

---

ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்தை ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் இணைப்பதற்கான அறிவிப்பு (2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் பிரிவு 11(5)இன் பிரகாரம்
நிறுவனத்தின் பெயர் - **லக்மி ஏற்றுமதி லங்கா நிறுவனம் (தனியார்) லிமிடெட்**
நிறுவனத்தின் எண் - பிவி 85771
பதிவு அலுவலகம் - கெகிராவா சாலை, தலவா
இணைக்கப்பட்ட திகதி - 03.05.2012
லக்மி ஏற்றுமதி லங்கா (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள்/ பங்குதாரர்கள் 20.02.2020 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தின்படி லக்மி எக்ஸ்போர்ட்ஸ் லங்கா (தனியார்) லிமிடெட் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இணைக்கப்படும்.
**நிறுவனத்தின் செயலாளர்**

---

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**எர்ட்லி குரூப் ஒப் கம்பனிஸ் (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம்: பிவீ 00225217

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.07.13

பதிவு முகவரி:

**இல. 43, தேசபந்து சரத்சுமனசேக்கர மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல.**
**தபால் குறியீடு: 10120**

**பணிப்பாளர்கள் சபை கட்டளைப் பிரகாரம்**

---

## வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம் : 002/T/2020**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்திற்கு புத்தம் புதிய பயணிகளின் பயணப்பொதிகளை கொண்டுசெல்வதற்காக 1000 தள்ளுவண்டிகளை (Passenger Baggage Trolleys) வழங்குதல் மற்றும் ஏற்றுக்கொள்வதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்**

2020 மார்ச் மாதம் 11ஆந் திகதி மற்றும் 2020 ஜூன் மாதம் 29ஆந் திகதி மற்றும் 2020 ஜூலை மாதம் 27ஆந் திகதி "தினகரன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி அழைப்புடன் தொடர்புடைய பத்திரிகை அறிவித்தலுக்கு மேலதிகமாக இதனை வெளியிடுகின்றேன்.

விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 2020 ஓகஸ்ட் மாதம் 26ஆந் திகதி புதன் பி.ப 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய விடயங்களில் மாற்றங்கள் ஏதுவும் இடம்பெறமாட்டாது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

---

## ருஹுணு பல்கலைக்கழகம்

## Call for Expressions of Interest

**ருஹுணு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கம்உதாவ பூமியை நவீன விவசாய தொழில் முயற்சியாக அபிவிருத்தி செய்து நடாத்திச் செல்வதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்தல்**

மேற்படி ஆர்வத்தை வெளிப்படுத்தும் (Expression of Interest) அறிவித்தல் தினமின, Daily News மற்றும் தினகரன் பத்திரிகைகளில் 2020.07.09ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அது Sunday Observer மற்றும் ஞாயிறு லங்காதீப ஆகிய பத்திரிகைகளில் 2020.07.12 பிரசுரமாகியது. அவ் அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் முடிவடையும் திகதி 2020.08.11 எனக் குறிப்பிடப்பட்டு இருப்பினும், அது மேலும் ஒரு மாதத்தினால் அதாவது, 2020.09.11 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**பதிவாளர்,**
**ருஹுணு பல்கலைக்கழகம்.**

---

## றுஹுண பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளவுக்கான விசேட போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல் – 2020/2021

றுஹுண பல்கலைக்கழகத்தில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் றுஹுண பல்கலைக் கழகத்தின் வெல்லமடம பிரதான கட்டிடத்தொகுதிக்கான விசேட போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கு பொருத்தமான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2020-08-19ஆம் திகதி முதல் 2020-09-09ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. **கார்கள் மற்றும் வேன்கள்**

பல்கலைக்கழக பணியாட் தொகுதியினரின் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குத் தகுதியான வளிச் சீராக்கம் செய்யப்பட்ட கார் மற்றும் இரட்டை வளிச்சீராக்கம் செய்யப்பட்ட வேன் வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பஸ் வண்டிகள்**

மாணவர்களின் கல்வி / வெளிக்கள சுற்றுலா, விளையாட்டு செயற்பாடுகள் மற்றும் ஏனைய கல்விசார் தேவைகளுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக தகுதியான பஸ் வண்டிகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக சிறந்த ஓடும் நிலையிலுள்ள வளிச் சீராக்கம் செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத பஸ் வண்டி உரிமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மேலே 01 மற்றும் 02 வகுதிகளுக்கான பொது நிபந்தனைகள்**

அ. கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் கார்கள் 2015ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அல்லது அதற்கு பின் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வேன்கள் 2010ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அல்லது அதற்குப் பின் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

ஆ. பஸ் வண்டிகள் 2015ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அல்லது அதற்கு பின் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

இ. சமர்ப்பிக்கப்படும் வாகனங்களுக்கு அதில் பயணம் செய்யக்கூடிய சட்டபூர்வமான எண்ணிக்கையினரின் பிரகாரம் முழுமையான உத்தரவாதத்துடன் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தின் காப்புறுதி இருத்தல் வேண்டும்.

ஈ. விலைமனுக்கள் திறக்கப்பட்டதன் பின் வாகனங்களை பரீட்சிப்பதற்காக அறிவிக்கப்படும் தினத்தில் மற்றும் நேரத்தில் வாகனம் / வாகனங்களை பல்கலைக்கழக இடப்பரப்பிற்கு கொண்டு வருதல் வேண்டும்.

உ. சமர்ப்பிக்கப்படும் விலைகள் திணைக்கள பெறுகைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும்.

3. இயைபுடைய கேள்விப் படிவங்களை 500.00 ரூபா கட்டணத்தை றுஹுண பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பொது நிர்வாகப் பிரிவிலிருந்து 2020-09-09ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா கட்டணத்தை சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் றுஹுண பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் பெயரில் வழங்கப்பட்ட 5,000.00 ரூபா பெறுமதியான 2021-03-09ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வங்கிப் பிணைமுறியொன்றுடன் முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை நகல் பிரதிகளுடன் வெவ்வேறாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் உள்ளிட்டு 2020-09-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது றுஹுண பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
6. கேள்விப் படிவங்களை 2020-09-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
7. கேள்விப் படிவங்களுடன் வாகனப் பதிவுச் சான்றிதழ், இயைபுடைய வருடத்திற்கான வருமான வரி அனுமதிப்பத்திரம், பயணிகளின் எண்ணிக்கை பிரகாரம் உத்தரவாதத்துடன் கூடிய காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் குறித்த சாரதியின் சாரதி உரிமம், உதவியாளர் அனுமதிப்பத்திரம் போன்ற ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட தெளிவான புகைப்படப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்குப் புறம்பாக பஸ் வண்டிகளுக்கான தகுதிச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**றுஹுண பல்கலைக்கழகம், மாத்தறை.**
2020-08-19.

---

## அறிவித்தல்

**கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை – 2021**

**திவுலப்பிட்டிய பிரதேச செயலகம்**

இவ்வதிகார எல்லைக்குள் அமையப் பெற்றுள்ள இல: 27, தாகொன் கள்ளுத் தவறணைக்காக 2020.09.28ஆந் திகதி வரை கேள்விப் பத்திரங்கள் கையேற்கப்படும்

தயவு செயது மேலதிக விபரங்களுக்கு 2020.08.28ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**U.W.T.U. ராஜகருணா**
**பிரதேச செயலாளர்**
**திவுலப்பிட்டிய**

**2020.08.12**
**திவுலப்பிட்டிய பிரதேச செயலகம்**

---

## அறிவித்தல்

**கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை – 2021**

கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணை கேள்விப் பத்திரங்கள் (2020.09.25)

2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2020.08.07 திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**கே.ஜீ.எச்.எச்.ஆர். கிரிஎல்ல**
**பிரதேச செயலாளர்**
**கட்டானை**

**கட்டானை பிரதேச செயலகம்**
**தெமங்ஹந்திய.**
**2020.08.13**

---

**1964 இல 28 இன் இடம் கைப்பற்றல் சட்டம் (460 பாகம்) 7வது சட்டத்தின்படி**

எனது இல:- DER/LAN/LAQUI/A1/9/8
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல:- 4-3/15/2016/VE/294

மக்களின் தேவைக்கென கீழே உப அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை அரசு கையேற்க எண்ணியுள்ளதனாலும் அதற்காக 9ஆம் பிரிவின்படி பரிசீலனை சம்பந்தமாக 7ஆம் பிரிவின்படி அறிவித்தலை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இல 2183/14 குரிய 2020.07.06ஆம் திகதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சபரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலகம் | : தெரணியகல |
| கிராம அதிகாரி பிரிவு | : இல. 114A அங்ஹெட்டிகம |
| கிராமம் | : லஸ்ஸேகம |
| காணியின் பெயர் | : லஸ்ஸேஹேன |
| வரைபட இல | : இ.கி.வ. 622 மேலதிக 3 தாள் 3 |
| பகுதி இல | : 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 90 |

மேலதிக தகவல்களுக்கு மேலே உள்ள வர்த்தமானியில் பார்க்கவும்.

**ஐ.கே.ஆர்.எஸ். பண்டார மெனிகே**
**பிரதேச செயலாளர்,**
**தெரணியகல.**

**2020 ஓகத்து மாதம் 07ஆந் திகதி**
**தெரணியகல பிரதேச செயலகத்தில்**

---

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2019 நவம்பர் 27ஆம் திகதிய 2151/29ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி III ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் |
| மாவட்டம் | : ஹம்பாந்தோட்டை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : சூரியவெவ |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 110, நமடகஸ்வெவ |
| கிராமம் | : நமடகஸ்வெவ |
| ஆரம்ப வரைபட இல. | : இ.கி.வ. 4, பிற்சேர்க்கை இல. 323, தாள் இல. 718 |
| துண்டு இலக்கம் | : துண்டு ஈ4553 - ஈ4556 (03 துண்டுகள்) |
| விஸ்தீரணம் | : 0.0375 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்**
**சூரியவெ.**

**பிரதேச செயலகம்,**
**சூரியவெவ.**
**21.11.2019**

---


**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**

**Widest reach for your employment advertisement**
**Email : info@observerjobs.lk Hotline: 1949**
**For more information 0777270012 / 0112429314**



தினகரன்
விளையாட்டு
2020 ஓகஸ்ட் 20 வியாழக்கிழமை
sports.tkn@lakehouse.lk

# IPL: இந்த ஆண்டுக்கான பிரதான அனுசரணையாளராக ட்ரீம் லெவன்

இந்த ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரை நடாத்துவதற்கான பிரதான அனுசரணையாளராக இந்தியாவின் கிரிக்கெட் பொழுதுபோக்கு சேவை வழங்குனரான ட்ரீம் லெவன் நிறுவனம்.

ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையாளராக 2017ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து ஆண்டுகளுக்கு சீனாவின் தொலைபேசி உற்பத்தியாளரான விவோ நிறுவனம் இருந்தது. எனினும், விவோ இந்த ஆண்டுக்கான (2020) அனுசரணையை இந்தியா – சீனா ஆகிய நாடுகள் இடையில் நிலவும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக இரத்துச் செய்தது. இதனால் இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையினை யார் பெறுவார் என்பது தொடர்பில் எதிர்பார்ப்புக்கள் உருவாகியிருந்தன.

தொடர்ந்து இந்த ஆண்டுக்கான ஐ.பி. எல். இன் பிரதான அனுசரணையை பெற்றுக்கொள்ள இந்தியாவின் கல்விச் சேவை வழங்குனர்களான அன்அகடமி , பைஜூ மற்றும் ட்ரீம் லெவன் ஆகியவை இடையே பலத்த போட்டி நிலவி வந்த நிலையில், ட்ரீம் லெவன் நிறுவனம் பிரதான அனுசரணையை இந்திய நாணயப்படி 222 கோடி (இலங்கை நாணயப்படி 544 கோடி) ரூபாய்களுக்குப் பெற்றிருக்கின்றது.

ட்ரீம் லெவன் நிறுவனம் இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். இன் பிரதான அனுசரணையைப் பெற்றிருக்கும் விடயத்தை ஐ.பி.எல். தொடரின் ஏற்பாட்டுக்குழுத் தலைவரான ப்ரிஜேஷ் பட்டேல் கிரிக்பஸ் செய்திச் சேவையிடம் உறுதி செய்திருந்தார்.

இந்த ஆண்டுக்கான (2020) ஐ.பி. எல். பிரதான அனுசரணை மூலம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கிடைக்கும் வருமானம் விவோ நிறுவனம் இல்லாத காரணத்தினால் அரைவாசியாக குறைந்திருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. விவோ நிறுவனம் ஐ.பி.எல். பிரதான அனுசரணையாளராக இருந்த காலப்பகுதியில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆண்டு ஒன்றுக்கு இந்திய நாணயப்படி 440 கோடி ரூபாய் வரையில் வருமானம் ஈட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# டெல்லி கெபிடல்ஸ் அணியில் விளையாட தென்னாபிரிக்க வீரர் ஒப்பந்தம்



ஐ.பி.எல். ரி20 தொடரில் பங்கேற்கும் டெல்லி கெபிடல்ஸ் அணி, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் என்ரிச் நோட்ஜேவை தங்களது அணிக்கு விளையாட ஒப்பந்தம் செய்துள்ளது.

நடப்பு தொடரில் டெல்லி கெபிடல்ஸ் அணிக்காக, இந்திய மதிப்பில் 1.50 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கிறிஸ் வோக்ஸ், இங்கிலாந்து அணியில் தொடர்ந்து விளையாடுவதற்காக நடப்பு ஆண்டு ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார்.

ஆகையால், அவருக்கு பதிலாக தற்போது 26 வயதான வலக்கை வேகப்பந்து வீச்சாளரான என்ரிச் நோட்ஜேவை டெல்லி கெபிடல்ஸ் அணி, ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் இந்த வருட ஐபிஎல் தொடரில் விளையாடும் 11ஆவது தென்னாபிரிக்க வீரராக என்ரிச் நோட்ஜே தனது பெயரை பதிவுசெய்துக் கொண்டார். பந்துவீச்சாளர் என்ரிச் நோட்ஜே, கடந்த வருடம் இந்திய மதிப்பில் 20 இலட்சத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்காக ஆடினார். எனினும் காயம் காரணமாக ஐபிஎல் தொடரிலிருந்து விலகினார்.

டெல்லி கெபிடல்ஸ் அணியில் ஏற்கனவே கார்கிஸோ ரபாடா, இஷாந்த் சர்மா, கீமோ போல், மோஹித் சர்மா ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

SINCE 1978 42nd OBSERVER MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2020
Recognizing talent, inspiring greatness.
Sri Lanka Telecom Mobitel உங்களுடனே. என்றும்.

## 42வது ஒப்சவர்–மொபிடெல்

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை- 2020**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் - மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2020**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ **மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2020**

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2019/2020 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
**(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)**
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

**Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்**

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : Mobitel 4G Wi-Fi Router — 2வது பரிசு: ரூ. 2,500
3வது பரிசு: ரூ.1,500 — 4வது பரிசு: ரூ. 1,000


42வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 2020-08-22 இல. 24




# வன்டேஜ் உதைபந்தாட்ட தலைவர் கிண்ணம்: காலிறுதியில் பொலிஸ், டிபெண்டர்ஸ்



வன்டேஜ் உதைபந்தாட்ட தலைவர் கிண்ண தொடரில் டி குழுவிற்காக செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் பொலிஸ் மற்றும் ரட்னம் அணிகள் வெற்றி பெற்ற அதேவேளை சி குழுவிற்கான ஆட்டங்களில் டிபெண்டர்ஸ், சோண்டர்ஸ் அணிகள் வெற்றியைப் பதிவு செய்தன.

**செரண்டிப் கா.க எதிர் பொலிஸ் வி.க**

தொடரில் குழு டி யில் ஒரு வெற்றி, ஒரு சமநிலை என 4 புள்ளிகளுடன் இருந்த செரண்டிப் வீரர்கள் ஒரு வெற்றியுடன் இருந்த பொலிஸ் அணியை தீர்க்கமான ஆட்டத்தில் எதிர்கொண்டனர்.

சுகததாச அரங்கில் இரவு ஆரம்பமாகிய இந்தப் போட்டியின் ஆரம்ப நிமிடங்களில் செரண்டிப் வீரர்கள் மிக வேகமான ஆட்டத்தின்மூலம் எதிரணியின் கோல் எல்லையை ஆக்கிரமித்தனர்.

இவற்றுக்கு பதில் கொடுத்த பொலிஸ் வீரர் ரிப்கான், தனது வேகத்தின் மூலம் 33ஆவது நிமிடத்தில் கோலுக்கு வெளியில் வலது பக்கத்தில் இருந்து பந்தை கம்பத்தின் ஒரு திசையினூடாக கோலாக்கினார்.



முதல் பாதியில் முன்னிலை பெற்ற பொலிஸ் அணிக்கு 62ஆவது நிமிடத்தில் கிடைத்த ப்ரீ கிக்கினால் சதுர குனரத்ன கோல் கணக்கை இரட்டிப்பாக்கினார்.

அதன் பின்னர் முதல் கோலுக்காக போராடிய செரண்டிப் வீரர்களுக்கு மதுஷான் 76ஆவது நிமிடத்தில் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

எஞ்சிய நிமிடங்களில் எந்த கோல்களும் பெறப்படாத நிலையில், போட்டியில் 2 – 1 என வெற்றி பெற்ற பொலிஸ் விளையாட்டுக் கழகம் குழு டி யில் முதலிடம் பெற்று வன்டேஜ் உதைபந்தாட்ட சங்க தலைவர் கிண்ணத்தின் காலிறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியது. செரண்டிப் அணி 4 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தினைப் பிடித்துள்ளது.

**சீ ஹோக் கா.க எதிர் ரட்னம் வி.க**

குழு டி யில் ஒரு வெற்றி ஒரு சமநிலையுடன் 4 புள்ளிகளுடன் இருந்த சீ ஹோக் அணி குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் இரவு இடம்பெற்ற போட்டியில் முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியைத் தழுவிய ரட்ணம் அணியை எதிர்கொண்டது.

ஆட்டம் ஆரம்பித்த 10 ஆவது நிமிடத்தில் எதிரணியின் கோல் எல்லைக்குள் இருந்து நாகுர் மீரா சீ ஹோக் அணிக்கான முதல் கோலைப் பெற, அடுத்த 6ஆவது நிமிடத்தில் சசன்க டில்கார மத்திய களத்தில் இருந்து பந்தை வேகமாக கோலுக்குள் செலுத்தி முதல் பாதியில் ஆட்டத்தை சமப்படுத்தினார்.

மீண்டும் 56ஆவது நிமிடத்தில் எதிரணியின் கோல் எல்லைக்குள் இருந்து பந்தைப் பெற்ற சசன்க தனது இரண்டாவது கோலையும் பதிவு செய்தார்.

அடுத்த 2 நிமிடங்களுக்குள் கிறிஸ்து ராஜ் மத்திய களத்தில் இருந்து கோல் காப்பாளருக்கு மேலால் பந்தை செலுத்தி ரட்னம் அணிக்கான அடுத்த கோலையும் பெற்று, சீ ஹோக் வீரர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

மீண்டும் 85ஆவது நிமிடத்தில் உயர்த்தி உள்ளனுப்பப்பட்ட பந்தை சான்தன் பாய்ந்து ஹெடர் செய்து ரட்னம் அணிக்கான நான்காவது கோலையும் பெற்றார். ஆட்டம் முடிவில் 4 – 1 என வெற்றி பெற்ற ரட்னம் தொடரில் தமது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. எனினும், இந்த இரண்டு அணிகளும் அடுத்த சுற்றுக்கு தெரிவாகவில்லை.



**டிபெண்டர்ஸ் கா.க**
**எதிர் ரெட் ஸ்டார்ஸ் கா.க**

தொடரில் சி குழுவில் அங்கம் வகிக்கும் பலம் கொண்ட இவ்விரு அணிகளும் சுகததாச அரங்கில் மோதிய இந்த மோதல் ஆரம்பம் முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

2 வெற்றிகளுடன் குழுவில் முன்னிலையில் இருந்த ரெட் ஸ்டார்ஸ் அணியை கட்டாயம் வீழ்த்த வேண்டிய நிலையில் டிபெண்டர்ஸ் அணி களம் கண்டது.

ரெட் ஸ்டார்ஸ் அணியின் கோல் எல்லையில் வைத்து அவ்வணி வீரர் எதிரணியின் தலைவர் ரொஷானை முறையற்ற விதத்தில் வீழ்த்த டிபெண்டர்ஸ் அணிக்கு போட்டியின் 40 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டியை ஜேசுராஜ் பேர்னாட் கோலாக்கினார்.

போட்டியில் பெறப்பட்ட ஒரே கோலாக இருந்தது.

இதனால் சி குழுவில் 7 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ள டிபெண்டர்ஸ் அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை உறுதி செய்துள்ளது.

ரெட் ஸ்டார் தொடர்ந்தும் 6 புள்ளிகளுடன் உள்ள அதேவேளை குறித்த குழுவில் இருந்து இரண்டாவது அணியாக அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

**சோண்டர்ஸ் வி.க எதிர் சுபர் சன் வி.க**

சி குழுவுக்கான மற்றைய போட்டியில் ஒரு தோல்வி மற்றும் ஒரு சமநிலையான முடிவைப் பெற்றிருந்த சோண்டர்ஸ் அணி குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் தொடரில் எந்த வெற்றியையும் பெறாத சுபர் சன் அணியை எதிர்கொண்டது.

முதல் பாதியில் ஆக்ரோசமான ஆட்டத்தைக் காண்பித்த சோண்டர்ஸ் வீரர்கள் எதிரணிக்கு எந்த கோலையும் விட்டுக் கொடுக்காமல் தமக்கு 6 கோல்களைப் பெற்றனர்.

எனினும், இரண்டாம் பாதியில் சோண்டர்ஸ் வீரர்கள் மேலும் 3 கோல்களை மாத்திரம் பெற்றனர். 50 ஆவது நிமிடத்தின் பின்னர் தமது ஆட்டத்தில் வேகத்தை காண்பித்த சுபர் சன் வீரர்கள் இறுதி 40 நிமிடங்களில் 5 கோல்களைப் பெற்றனர்.

போட்டி இறுதியில் சோண்டர்ஸ் விளையாட்டுக் கழகம் 9 – 5 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. எனினும் இந்த இரண்டு அணிகளும் வன்டேஜ் உதைபந்தாட்ட சங்க தலைவர் கிண்ண தொடரில் இருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2020 ஓகஸ்ட் மாதம் 20ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.